யூகிமுனி

பூரணம் - 100
கரிசல் - 151
கரிசல் - 36

தாமரை நூலகம், சென்னை - 600 026.

யூகிமுனி

பூரணம் – 100, கரிசல் – 151, கரிசல் – 36, சுருக்கம் – 100, நந்திதேவர் அறுவகைநீர் திராவகம்

பதிப்பாசிரியர்
ஆர். சி. மோகன்

தொலைபேசி எண் – 23620249

தாமரை நூலகம்
எண் – 7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு,
வடபழனி, சென்னை – 600 026

தாமரை வெளியீடு	:	262.
முதல் பதிப்பு	:	ஜூலை 2000
மூன்றாம் பதிப்பு	:	**ஏப்ரல் 2016**

உரிமை பெற்றது (C)

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	யூகிமுனி பூரணம்–100, கரிசல்–151 கரிசல்–36, சுருக்கம் 100, நந்திதேவர் அறுவகைநீர் திராவகம்
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7. என்.ஜி.ஓ. காலனி, 3வது தெரு வடபழனி, சென்னை – 26
பதிப்பு ஆண்டு	:	நவம்பர் – 2004
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 x 8
அச்சுத்தாள்	:	14.4 கி. கி வெள்ளைத்தாள்
அட்டை	:	13.2 சேஷசாயி போர்டு
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	138 + 6
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	செக்ஷன்
நூல் விலை	:	**ரூ.55-00**
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட் சென்னை – 34

பதிப்புரை

யூகிமுனி பரிபூரணம் 100, கரிசல் 151, கரிசல் 36, சுருக்கம் 100 என்ற நான்கு நூல்களும் நந்திதேவர் அறுவகைநீர் திராவகம் என்ற சிறு நூலும் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

யூகிமுனியின் நூல்கள் யாவும் எளிதாகக் கிடைத்துக் கொண்டிருக்க இந்தச் சிறு நூல்கள் மட்டும். கிடைப்பதற் கரிதாக இருந்த காரணம் இவை இரச வாதத்தைப் பற்றிய இரகசியங்களைக் கூறுவதாலாக இருக்கலாம் என்ற ஐயம் ஏற்பட்டது. சுருக்கம் 100க்கு அப்துல்லா சாயபு அவர்கள் எழுதியுள்ள பதிப்புரை அந்தச் சந்தேகத்தை உறுதிப் படுத்துகிறது.

இந்த நூல்களில் கூறப்பட்டுள்ள மருத்துவ முறைகள் அரியவையும் எளிதில் கையாளக் கூடியவையும் ஆகும். ஆயினும் யூகிமுனிவர் தமது இயல்புக்கு மாறாகக் கரிசல் களின் மறைப்புக் சொற்களை (பரிபாஷை) அதிகமாகப் பயன் படுத்தியிருப்பது இவற்றைத் தகாதவர்கள் பயன் படுத்தி விடக் கூடாது என்ற முன் ஜாக்கிரதையே என்று யூகிக்க இடமளிக்கிறது.

இப்படிப்பட்ட அரிய நூல்கள் எல்லாம் வெளிவரவேண்டும். அவற்றில் பொதிந்துள்ள உண்மைகள் வெளிப்படுத்தப் படவும் வேண்டும். அப்பொழுதுதான் சித்தர்களைப் பற்றியும் சித்த மருத்துவத்தின் பெருமை மற்றியும் உலகம் நன்கு அறிந்து கொள்ள முடியும்.

எஸ்.பி.இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

யூகிமுனி பூரணம்- 100

யூகிமுனிவர் கரிசல் - 151

91/H

யூகிமுனி கரிசலை முப்பத்தாறு

யூகிமுனி சுருக்கம் நூற்றின் முகவுரை

யூகிமுனி சுருக்கம் நூறு

முற்றும்

உ

ஓம் நமசிவய

யூகி முனி
பூரணம்- 100

காப்பு

ஒத்தையாங் கொம்புடைய கணேசன் பாதம்
ஓதரிய சிவனுடைய பாதம் போற்றி
நித்தியமாய் நிறைந்தவுமை பாதம் போற்றி
நினைவில்வைத் தனுதினமுந் துதியே செய்து
சித்திபெற்றார் நாதாக்கள் பாதம் போற்றி
சித்தருட வடிதனையே சிறக்க வாழ்த்தி
நத்தியே பூரணத்தைச் சுருக்க மாக
நலமாக நானாகப் பாடி னேனே. 1

நூலுபதேசக் கிரமம்

பாடினேன் சிவன்றானு மம்மைக் கோதப்
பதிவான வம்மைமன மகிழ்ந்து நோக்கி
வாடியே அசுவனிக்குச் சொன்ன போது
வடிவான அசுவனியுங் கேட்டுத் தானே
நாடியே விசுவனிக்குச் சொன்னா ரையா
நலமாக விசுவனியுஞ் சந்தோ ஷித்துத்
தேடியே நந்திக்குச் சொன்ன போது
திடமாக நந்திமன மகிழ்ந்த வாறே. 2

வாறுகேள் நந்தியவர் மகிழ்ந்து நோக்கி
வடிவான தன்வந்திரி களிக்கச் சொன்னார்
கூறுகேள் தன்வந்திரி மனம கிழ்ந்து
குணமாக அகஸ்தியர்க்குக் கருவைச் சொன்னார்
நாறுகேள் அகஸ்தியரு மனம கிழ்ந்து
நலமான புலத்தியர்க்கு நன்மை சொன்னார்
நீறுகேள் புலத்தியருந் தேர்ந்து பார்த்து
நிஜமாகத் தேரையர்க்குச் சொன்னார் தானே. 3

வழலை

தானென்ற தேரையருஞ் சந்தோ ஷித்துத்
தாட்டிகமா யூகிமுனி தன்னை நோக்கி
வானென்ற வடநூலி லுள்ள வற்றை
வரிசையாய்ச் சொல்லிவிட்டார் யூகி தானும்
தேனென்ற தமிழ்க்கிரந்தந் தன்னி லேதான்
தெளிவாக ஆதியோ டந்தமாகப்
பானென்ற வழலைதனைச் சுருக்க மாகப்
பதிவாக நூறாகப் பாடி னாரே. 4

சவுக்கார வழலை

பாடினேன் சவுக்கார வழலை கேளு
பதிவாகப் பெரு நூலில் கைபா கத்தைக்
கூடியே சொல்லவில்லை பூரணத்தில்
குணமாக வழலைதன்னை விரிவாய்ச் சொன்னேன்
தேடியே யிந்நூலைத் தெளிந்து பாரு
திடமாக வழலையென்ற பொருளுமாகும்
நாடியே கைபாக வரிசை யாகும்
நாதாந்த வழலையிது நலமி தாமே. 5

ஆமென்ற சவுக்கார வழலைதன்னை
அறைகிறே னாடலாங்கோடி வித்தை
நாமென்ற பூநீறு பதக்கு வாரி
நலமான சுண்ணாம்பு பதக்குக் கூட்டி
காமென்ற அமுரிபடி யெட்டு வூற்றிக்
கலக்கியே மூன்றுநாள் காய வைத்துத்
தாமென்ற தெளிவிறுத்து நல்லெண்ணெய் தானும்
தண்மையாய்ப் படியெட்டு கூட வாரே. 6

வார்த்துமே சவுக்காரந் தன்னி லேதான்
வடிவாகக் காரமுதல் முறிந்து போகும்
நார்த்துமே காரத்தைக் கட்டக் கட்ட
நலமாக முறியுமட்டும் காரங் கூட்டு
பார்த்துமே பாலாக முறியு மட்டும்
பதிவாக விட்டுநீ தெளிவி றுத்துக்
கூர்த்துநீ காய்ச்சிடவே வெண்ணெ யாகும்
குணமாகச் சவுக்கார வுண்டை பண்ணே. 7

உண்டைமே லைந்துசுன்னம் பதிவாய்க் கட்டி
யுலரவே ரவிதனிலே காய வைத்து
நண்ணியே பத்தெருவிற் புடத்தைப் போட்டு
நலமாக வெடுத்துப்பார் சவுக்கா ரந்தான்
உன்னியே கடுமையாய்ச் சுன்ன மாகும்
உறுதிமெத்த சுன்னத்தால் வேதை கோடி
துன்னியே சவுக்காரம் பலமெ டுத்துத்
துடியாகக் கல்வத்தி லிட்டுக் கேளே. 8

சவுக்காரச் சுன்னத்தைத் துருசுக்குக்கவசமிட்டுத் துருசுச்சுன்னம் செய்து வேதையாட

இட்டுமே வெண்கருவா லரைத்துத் தானும்
இதமாக வரைத்துமே துருசின் மேலே
கட்டியே கதிர்படவே காய வைத்துக்
கனிவாகக் குக்குடத்திற் போடச் சுன்னம்
நட்டுமே சாறுவராத் தழையி லிட்டு
நலமாகக் * காய்ச்சியே பிழிந்து பாரு
வட்டுமே சாறாகும் ஜலத்தைத் தானும்
வடிவாக வீட்டு நீ கரண்டி தானே 9

*கசக்கி என்றும் பாடம்.

சூதம் கட்டி வேதை

தானேதான் கரண்டிதனி லிட்டு நீயும்
தாட்டிகமாய்ச் சூதத்தை விட்டுக் காய்ச்சு
நானென்ற சூதமது கட்டிப் போகும்
நலமாகச் சரக்கெல்லா மிதிலே சாகும்
பானென்ற மெழுகாகும் சிந்தூ ரந்தான்
பாய்ச்சலா மொருகோடி வித்தை யப்பா
வானென்ற வித்தையினால் தங்கங் கோடி
வடிவாகக் கைப்பாக மாகப் பாரே. 10

அயச்செம்பு- கெந்தகத் தைலம்.

பார்க்கவே அயச்செம்பு சொல்லக் கேளு
பலகாலம் வைத்துநீ ஜீவ னத்தை
ஏற்கவே செய்துநீ யுண்டு டுத்தி
யிதமாக ஞானவழி யடுத்துப் பாரு

காக்கவே சொல்லுகிறேன் கருணை யாகக்
கனிவாகக் கைப்பாக வரிசை யாக
வார்க்கவே வழலையது கைப்பா கந்தான்
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மை யாமே. 11

வண்மையாய்ச் செவ்வல்லிப் பூச்சார் தானும்
வடிவாகப் படியொன்று சட்டி யிட்டு
உண்மையாய் வெண்காரச் சுன்னம் பண்ணி
உரவாகப் பலமிரண்டு கூடக் கூட்டித்
தண்மையாய்ச் செவ்வல்லிப் பூச்சார் தன்னைத்
தாட்டிகமாய் விட்டுநீ கலக்கித் தானே
வெண்மையாய்ப் பார்த்திடவே கரைந்து போகும்
விருப்பமாய் நல்லெண்ணெய் கூட விட்டே. 12

விட்டுநீ யெண்ணெயது முறியு மட்டும்
விதமாகப் பால்போலே முறிந்த தானால்
கட்டுமே கெந்தியது பலமு நான்கு
கனிவாகப் பாலிலே போட்டு நன்றாய்
விட்டுநீ யெரித்திடவே கெந்தி தானும்
விதமாக முறிந்துதான் தைல மாகும்
நட்டுமே தைலத்தின் வேதை கோடி
நலமாகக் குருகோடி நடத்தை பாரே. 13

பாருமே தைலத்தை யிறுத்துக் கொண்டு
பதிவாகத் தைலமது பலமு மைந்து
காருமே அரப்பொடியும் பலமு மைந்து
கணக்காகத் தைலத்திற் போட்டு நன்றாய்
வாருமே கொதியிட்டு வொட்டக் காய்ச்சி
வடிவாகக் குகையிலிட் டுருக்கி னாக்கால்
சாருமே வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
சரியாக வேதையிதிற் றண்மை யாமே. 14

ஆமேதா னயமுமது உருகிற் றானா
லாடலாம் வேதையிதி லனேகங்கோடி
தாமே தா னயமுருகில் கெந்தி செம்பைத்
தானிமுக்கு மதுதானும் வழலை யாலே
நாமேதாம் சொல்லிவிட்டோம் பூர ணத்தில்
நன்றாக வாதத்தைக் குறுக்கி நூறில்
வாமேதான் சுருக்கமா யிந்த நூலின்
வடிவாகச் சவுக்கார வழலை தானே. 15

தானென்ற விந்த நூல்தன்னி லேதான்
தப்பாமல் வழலையத னெண்ணெய் வாங்க
நானென்ற முன்னூலில் நானூறு தன்னில்
நலமாகச் சொல்லவில்லை யென்று சொல்லிக்
கானென்ற விந்தநூல் நூறு தன்னில்
கனிவாகச் சொல்லிவிட்டேன் கருணை பாரு
பானென்ற முன்னுருக்கு மயத்தை நீயும்
பதிவாகச் சேரொன்று நிறுத்துக் கொள்ளே. 16

கொள்ளவே நிறுத்துநீ தூர வைத்துக்
குணமாகச் சொல்லுகிறேன் குவிந்து கேளு
மெள்ளவே பூரணத்திற் சொன்ன மார்க்கம்
மேன்மையாய்ச் செம்புதனைக் கொல்லச் சொன்னேன்
துள்ளவே செம்புதனைக் கொன்றெ டுத்துத்
துடியாக முன்னுருக்கு மயத்திற் சேரு
நள்ளவே முன்தைல மதிலே விட்டு
நலமாக வொட்டயெரி நடத்தை தானே. 17

மிருதார் சிங்கிச் செந்தூரம்

தானேதா னெரித்துமே பதமா கத்தான்
தாட்டிகமா யுருக்கிடவே சத்து மாகும்
பூனேதான் சத்திதன்னைப் புறம்பாய் வைத்துப்
புண்ணியமாய் மிருதார சிங்கி யோடே
நானேதான் காரீய மிடையே சேர்த்து
நலமாக வரைத்துநீ அமுரி யாலே
வானேதான் புடம்போட்டு எடுத்துக் கொண்டு
வடிவான துரிசதுவு மிடையே சேரே, 18

சேர்த்துநீ அமுரியா லிருஜா மந்தான்
செம்மைபட வாட்டியே வில்லை தட்டிப்
பார்த்துநீ ரவிதனிலே காயப் போடு
பதிவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
காத்துநீ சிங்கியது வெட்டை யாகும்
கனிவாக முன்சத்தி லிடையே சேர்த்து
நாத்துநீ பத்தெருவிற் புடத்தைப்போடு
நலமாகச் சிவந்தநிற மாகுந் தானே. 19

ஆகுமே விதையெடுத்துக் காரங் கூட்டி
அடைவாக வுருக்கிடவே செம்பு மாகும்
ஏகுமே யிச்செம்பு தங்கம் போலாம்
இதமாக வெட்டிரண்டு வெள்ளி தன்னில்
பாகுபெறச் சேர்த்துருக்க மாற்று மெட்டு
பதிவாக விதைவிற்றுச் செலவு செய்து
தாகுமே யுண்டுடுத்தி ஞான யோகம்
தப்பாதே பார்த்திடவே சித்தி யாமே. 20

வழலைவிவரம் வாதம்- முதற்காண்டம் பார்க்க- காயசித்தியாகும்

சித்திபெறச் சவுக்கார விபர மெல்லாம்
சின்மயத்தி னருளாலே யிந்த நூலில்
முத்தியாய்ச் சொல்லிவிட்டேன் முதற்காண்டத்தில்
முனிவாகக் கொஞ்சந்தான் வழலை தன்னை
நத்தியே கைபாக வரிசை கண்டால்
நலமாகக் காயசித்தி நல்ல தாகும்
புத்தியா யிவ்வுலகில் வாத மார்க்கம்
புகலரிய வெல்லாமும் பெருமை யாமே. 21

சவுக்கார எண்ணெயால் வர்ணமுண்டாகும்

ஆமேதான் சவுக்காரத் துள்ளே யெண்ணெய்
அடைவாகப் புகுந்தாக்கா லனேக வித்தை
நாமேதான் வழலையில்லா வாத மெல்லாம்
நாடாது வர்ணமது ஏறி டாது
வாமேதா னெண்ணெயது வாத மாகும்
வடிவான சவுக்கார முறிந்த தானால்
தாமேதான் வர்ணமிக வாகும் பாரு
தாட்டிகமா யிதையறியச் சித்தி தானே. 22

வாதியின் தன்மை

காணவே வழலைவிட்டோன் வாதி யல்ல
கனிவாகக் கைபாகங் கண்டோன் வாதி
ஊணவே வுருவாக வொன்று மில்லை
உத்தமனே பார்த்திடவே சித்தி சித்தி

பேணவே பெண்ணாசை விட்டோன் வாதி
பிசகாதே வாதம்வரும் பிசகொன் றில்லை
தோணவே சாஸ்திரங்க ளெல்லாம் பார்த்தால்
தொல்லுலகில் சித்திதரும் தோற்ற மாமே. 23

நூல் பார்க்கச் சகலமும் சித்தி

ஆமேதான் முன்னேதான் நூல்கற் றோர்க்கு
அடைவாக ஞானவழி யடுத்துக் கூடும்
தாமேதான் வாதசித்தி யோகஞ் சித்தி
தப்பாமற் பண்டிதமுஞ் சித்தி யாகும்
வாமேதா னிதையறிந்து வல்லோ ரெல்லாம்
வகைஞானம் பேசுவார் மார்க்கமாக
நாமேதான் சொல்லிவிட்டோ மிந்நூல் தன்னில்
நலமாக சுயஞ்சோதி யாகும் பாரே. 24

அப்ரேகச் செம்பு

ஆகுமே அப்பிரகச் செம்பு கேளு
ஆதியாங் கைபாக வரிசை யாகப்
பாகுபேர் வழலையினால் செம்பு மாகும்
பதிவாகச் செம்பைவிட்டால் செம்பே யில்லை
தாகுமே வடிவான தங்க மார்க்கந்
தாட்டிகமாய்ச் சொல்லுகிறே னுற்றுக் கேளு
வாகுமே யெல்லாமுஞ் சித்தி யாகும்
வடிவாக விந்நூலை மருவிப் பாரே. 25

பாரென்ற அப்பிரேகஞ் சேரு வொன்று
பதிவாக அரப்பொடியாய்ச் செய்து நீயும்
தானென்ற தாளகமுஞ் சேரு வொன்று
தாட்டிகமாய்த் துருசதுவுஞ் சுட்ட நீறும்
வானென்ற கல்வத்தி லிட்டுத் தானே
வாடிவாக விருஜாமம் பாணி யாலே
நானென்று ஆட்டியே கதிரி லிட்டு
நலமாகப் பாகமதை நவிலக் கேளே. 26

நவிலவே நல்லெண்ணெய் சேரு வொன்று
நல்மான வெடியுப்புச் சுன்ன மொன்று
கவிலவே நல்ல தண்ணீர் சேரு மொன்று
கனிவாகத் தண்ணீரை விட்டுச் சுன்னம்

பவிலவே கடைந்துநீ யிறுத்துத் தானே
பதிவாக நல்லெண்ணெய் தனிலே விட்டுத்
தவிலவே முறியுமட்டும் பால தாகத்
தாட்டிகமாய் முறித்துநீ பின்பு கேளே. 27

கேளுமே முன்னரைத்த அப்ரே கத்தைக்
கெடியாக முறித்ததொரு பாலி விட்டு
வாளுமே கொதியிட்டுப் பொங்கா மற்றான்
வடிவாக வெண்காரம் பொரித்துப் போட்டு
நாளுமே வொட்டயெரி குகையி லிட்டு
நன்றாக வுருக்கிடவே மணியு மாகும்
பாலுமே வெள்ளிபொன்போற் கண்விட் டாடும்
பதிவாகக் கல்வத்தி லிட்டி டாயே. 28

இட்டுமே காரமது சேரு வொன்று
இதமாக விட்டுமே பழச்சாற் றாலே
நட்டுமே விட்டரைத்து உண்டை பண்ணி
நலமாகக் குகையிலிட் டுருக்கித் தீரு
பட்டுமே வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
பதிவாக அப்பிரகச் சத்து மாச்சு
வட்டுமே சத்தெடுத்துப் புறம்பாய் வைத்து
வடிவாகச் சிங்கியது பலமுங் கேளே. 29

அப்ரகச் சத்துடனே மிருதார்சிங்கி சேர்ந்த சிந்தூரம்

கேளுமே மிருதார சிங்கி தானும்
கெடியாகப் பலமதுதான் சேரு மொன்று
வாளுமே சிங்கியெடை துருசு சேரு
வடிவாக விவையிரண்டுங் கல்வத்திட்டு
நாளுமே யிருஜாம மரைத்து வில்லை
நலமாகக் கட்டியே கதிரி லிட்டுப்
பாளுமே போகாது புடமும் போடப்
பதிவாகப் புடம்போட் டெடுத்து பாரே. 30

எடுத்துமே சிங்கியது சிந்தூர மாகும்
இதமாக அப்பிரகச் சத்த தோடே
அடுத்துநீ சேர்த்துஅரை அமுரியாலே
அடைவாக விருஜாமஞ் சென்ற பின்னர்க்

கடுத்துநீ வில்லைதட்டிக் காயப் போடு
கனிவாகப் பெரியபுடம் போட்டெ டுக்க
நடத்துநீ சிந்தூர முருக்கம் பூவாம்
நலமாக வேதையிலே ரொம்பக் கேளே. 31

மேற்படி வேதை

கேளுமே வெள்ளியது எட்டுத் தானுங்
கெடியாக ரண்டுமது சேர்த்துத் தானே
ஆளுமே யுருக்கிடவே தங்க மாகும்
அடைவாகத் தங்கமது பத்து மாற்று
ஏலுமே யருகுகட்டி யிறங்கும் பாரு
இதமாக இதைவிற்று ஜீவ னத்தை
நாளுமே யுண்டுநீ ரேச கும்பம்
நலமான வாசியதைச் செய்திடாயே. 32

செய்திடவே அப்பிரகச் செம்பைப் போல்
செகத்திலே கிடையாது சித்தி யாகும்
நய்திடவே சத்தியுட நாத மாச்சு
நலமான பொருளாச்சு நல்சித் தாதி
கைதிடவே வாதவெள்ளைக் கிணறு மாச்சுக்
கனிவாகச் சிந்தூரம் பண்ணி யுண்ணப்
பைதிடவே நரைதிரைக ளற்றுப் போச்சுப்
பதியான விதியாளி காணு வானே. 33

வெள்ளிவித்தை-சூதபாஷாணக் களங்கு

காணவே பூரணத்தில் வெள்ளி வித்தை
கனிவாகச் சொல்லிவிட்டேன் கனிந்து பாரு
ஊணவே சூத்திரத்திற் சுருக்க மாக
உறுதியாய்ச் சொல்லுகிறே னுற்றுக் கேளு
வாணவே சூதத்தின் பதங்கந் தானும்
வடிவாகப் பலம்பத்து நிறுத்துக் கல்வம்
மாணவே பாஷாணஞ் சேரு வொன்று
மடைவாகப் பொடித்துநீ கடத்திற் போடே. 34

போட்டுமே மேன்மூடி சீலை செய்து
பதிவாக வடுப்பேற்றி யெரித்துப் பாரு
நாட்டுமே வெள்ளையென்ற பாஷா ணத்தில்
நலமாக விருந்தஎண்ணெய் தீயோ யேறும்

காட்டுமே பதங்கமது மிடையே சேர்த்துக்
கனிவாக வரைத்திடவே வேண்டும் பாரு
வாட்டுநீ யிதையரைக்கப் புகைநீர் கேளு
வடிவான சீனமது சேரு வொன்றே. 35

சீனத் திராவகம்

ஒன்றாக இட்டுநீ பொடித்துத் தானும்
உருவாக வாலையென்ற சட்டி மூடி
நன்றாக இருஜாம மெரித்திட் டக்கால்
நலமான புளிப்பான புகைநீ ராகும்
வன்றான இந்நீரி னாலே யாட்டி
வடிவாக வுண்டைபண்ணிக் காய வைத்துக்
கன்றாக வுப்பிலிட் டெரிக்க நீயும்
கனிவாக வோடாம லிருக்கும் பாரே. 36

மேற்படியால் வெள்ளீய நீர்வாங்க அண்டோடு கிளிஞ்சல் சேர்ந்த சுன்னம்

ஆச்சப்பா களங்காக விருக்கும் பாரு
அருள்பெருகும் பூரணத்தை நோக்கித் தானே
வாச்சப்பா வெள்ளீயம் நீரை வாங்க
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மை கேளு
பாச்சப்பா அண்டோடு சேரு பத்து
பதிவாகக் கிளிஞ்சிலென்ற ஓடு பத்து
நாச்சப்பா உவர்மண்ணுஞ் சுண்ணாம்பு நேரே
நலமாகப் படியொன்று கரைத்திடாயே. 37

கரைத்துமே பாணிவிட்டுத் திரிநாள் வைத்துக்
கனிவாகத் தெளிவிறுத்துப் பின்பு கேளு
நரைத்துமே அண்டோடு கிளிஞ்சி போட்டு
நலமாக வொட்டளரி கட்டிப் போகும்
முரைத்துநீ பாண்டத்தி லோட்டி லெண்ணெய்
முனிவாகக் கழன்றுபோ மிதையெ டுத்துப்
பரைத்துமே கழுவியே காயப் போட்டுப்
பதிவாக வுரலிலிட் டிடித்தி டாயே. 38

இடித்துநீ பொடியாக்கி யெட்டுக் கொன்று
இதமாகச் சீனத்தைப் பொடித்துப் போடு
நடித்துமே கலந்துநீ நினைவ தாக
நலமாக சுட்டகுகை தனையெ டுத்து

வடித்துமே மாவதனைப் பாதி யிட்டு
வடிவாக வெள்ளீயங் குகையி லிட்டுப்
படித்துநீ அதன்மேலே மாவைக் கொட்டிப்
பதிவாக உலையில்வைத் தூதி டாயே. 39

ஊதிடவே வெள்ளீயம் நீர்க ளெல்லாம்
ஊதவே விஷநீர்க ளற்றுப் போகும்
காதிடவே வெள்ளிபோல் நிறமு மாகும்
கனிவாக வோசையது காணு நன்றாய்
வாதிடவே யிந்தவெள் ளீயந் தன்னில்
வடிவாக நூற்றினுக் கொன்று தானும்
மாதிடவே முன்சொன்ன களங்கந் தன்னை
மயமாகக் கொடுத்துருக்கி மாற்றுப் பாரே. 40

மாத்தாகும் வெள்ளிதான் பத்து மாற்று
மயமாக வங்கத்தைக் கொடுத்து ஊத
கூத்தாடி ஓடாது பத்து மாற்று
குணமாக விந்தவெள்ளி நல்ல தாகும்
வாத்தாடி யிதைவிற்று ஜீவ னத்தை
வடிவாகச் செய்திடவே வடிவு மெத்த
நாத்தாகக் கண்டுகொள்ளு நாடிப் பாரு
நல்லசித்தா மாகுமது நம்பிப் பாரே. 41

பாருநீ யிந்தவெள்ளி வித்தை தானும்
பதிவாக விற்றுநீ வாசி யோகந்
தாருநீ பார்த்திடவே சகல சித்தும்
தானாகும் வேதைகுரு தாண்டி யோடும்
பாருநீ சூத்திரத்தில் சுருக்கிச் சொன்னேன்
படிவாக விவையிரண்டு மொத்துப் பாரு
காருநீ வைத்திடவே சித்தி யாகும்
கருணையாய் ஞானத்தைக் கண்டி டாயே. 42

கண்டிடவே வேண்டுமென்றால் சொல்லக் கேளு
கனமாக வெள்ளீயம் நீரை வாங்கி
முண்டிடவே யிதைவிற்று ஜீவ னத்தை
முடிவாகப் பண்ணிவிட முத்தி முத்தி
பண்டுபழங் கதையைநீ பேச வேண்டாம்
பதிவாகக் கைபாகங் கண்டெ டுத்துத்
தொண்டுநீ செய்தாலே சகல சித்துந்
துடியாக வெல்லாமுஞ் சித்தி யாமே. 43

வெடியுப்புச் சுன்னம்

சித்தியே யாகவென்றால் சொல்லக் கேளு
சிறப்பாக விந்நூலில் சொன்ன சொல்லை
முத்தியா யதைப்பிரித்துச் சூத்தி ரத்தில்
முனிவாகச் சொல்லுகிறேன் முனிந்து கேளு
நத்தியே வெடியுப்பு ஐந்தாங் காய்ச்சல்
நலமாகப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
நத்தியே பழம்புளிதான் பலமோ ரைந்து
நலமாக விரண்டுமென்றாய்ச் சேர்த்தி டீரே. 44

சேத்துநீ வுலக்கையா லிடித்து நையச்
செம்மையாய் மூன்றுநாள் கதிரி லிட்டுப்
பாத்துநீ புதுச்சட்டி யடுப்பி லிட்டுப்
பரிவாக எரியிட்டுப் பார்க்கத் தானும்
வாத்துமே யெரிந்துமே யுருகி நிற்கும்
வடிவாகக் கடுஞ்சுன்ன மாகக் காணும்
ஊத்துமே வழித்துநீ புறமே வைத்து
உறுதியா யிந்தெடைக்குப் பாதி தானே. 45

பாதியாய்ச் சுடர்க்கொடியோன் பாதி யிட்டுப்
பாகமா யெலுமிச்சம் பழச்சா றூட்டி
நாதியாய் வில்லைதட்டிக் காயப் போடு
நலமாகச் சுண்ணாம்புக் குள்ளே யிட்டுச்
சோதியாய்ப் பத்தெருவில் புடத்தைப் போடு
சுயமாகச் சுன்னமது கசிவு நீங்கிக்
கோதியா யிருக்குமது பின்பு கேளு
குணமாகக் கைபாக வரிசை கேளே. 46

வரிசையாய்ச் சுன்னத்தி னிடையே சீனம்
வடிவாகச் சேர்த்து அரை பழச்சாற் றாலே
கரிசையா யிருஜாம மரைத்துத் தானே
கனிவாக வில்லைதட்டிக் கதிரி லிட்டுப்
பரிசையாய்க் கரியில்வைத் தூதிப் போடு
பதிவாக வெடியுப்புச் சுன்ன மாச்சு
நரிசையாய்ச் சுன்னத்தைப் பனியில் வைக்க
நலமாகப் பலபலென ஐயநீ ராச்சே. 47

வெடியுப்பு ஜயநீரால் தாளகச் சுன்னம்

ஆச்சென்ற ஜயநீரை யிறுத்துக் கொண்டு
அடைவாக வதன்பின்னர்த் தாள கத்தை
நாச்சென்ற அங்கிதனைக் கட்டக் கேளு
நலமான வளையலுப் பொட்டி ரெட்டி
பாச்சென்ற பாணிவிட் டரைத்துக் கொண்டு
பதிவாகத் தாளகத்தின் மேலே கட்டி
காச்சென்ற கரியோட்டில் குமுற வாட்டிக்
குணமாகத் தண்ணீரில் போட்டி டாயே. 48

போட்டிடவே வுப்பெல்லாங் கரைந்து போகும்
புகழாகத் தாளகந்தான் சிவந்து நிற்கும்
காட்டிடவே யதையெடுத்துக் குறட்டி லேதான்
கனிவாகப் பிடித்துநீ ஜயநீர் தன்னில்
வாட்டிடவே துவைத்துநீ பாக மாக
வடிவாக வாட்டிப்பார் கட்டி தானும்
மூட்டிடவே சிவந்துநிற்கும் தாள கந்தான்
முனிவாகக் கவசமது மொழியக் கேளே. 49

கேளுமே வெடியுப்பு ஜயநீர் முன்னே
கெடியாகச் சுண்ணாம்பைக் கல்வத் திட்டு
நாளுமே யொட்டிரெட்டி பழச்சாற்றாலே
நலமாக விருஜாம மரைத்துத் தானே
வாளுமே தாளகத்தின் மேலே கட்டு
வடிவாகக் கதிரிலிட்டுக் காய வைத்துப்
பாளுமே போகாது புடத்தைப் போடு
பதிவாகக் கட்டியைத்தா னுடைத்தி டாயே. 50

மேற்படி தாளகச் சுன்னத்தால் துருசுச் சன்னம்

உடைத்துப்பார் தந்தம்போல் சுன்ன மாகும்
கெடியான சுன்னத்தின் பெருமை தன்னை
விடைத்துநீ சிவனாலும் சொல்லப் போமோ
விதமாக வதையெடுத்துக் கல்வத் திட்டுப்
படைத்துநீ முன்ஜயநீர் தன்னா லாட்டிப்
பதிவாகத் துருசின்மேற் கவசங் கட்டு
நடை த்துநீ கதிரிலிட்டுக் காயப் போடு
நலமாகப் பத்தெருவிற் புடத்தைப் போடே. 51

போடவே தீயாறி யெடுத்துப் பாரு
பொலிவாகத் துருசதுவுஞ் சுன்னமாகும்
ஆடவே துருசதுவுஞ் சுன்ன மானால்
அண்டரண்டந் துளைத்தாடு மநேக வேதை
கூடவே தாளகத்தின் மேலே தானே
குணமாகக் கட்டியதைத் துவைத்து வாட்ட
நாட்டவே தாளகந்தான் சுன்ன மாகும்
நலமான நவலோகம் நூற்றுக் கொன்றே. 52

கண்டாலும் பேசார்கள் சித்தர் மார்க்கம்
கனிந்தகனி போலாகுந் தாள கந்தான்
பெண்ணாகும் பூவுலகின் போக்கு மெத்த
பேசினுமே தெரியாது சண்டி கட்கு
நன்றாகச் சொல்லிவிட்டேன் சூத்தி ரத்தில்
நானறிந்த படிபாரு நன்மை யாகு
முண்டாகச் சொல்லாதே முனிந்து பாரு
மூவுலகும் படைத்தசிவன் மொழிந்திட் டாரே. 53

தாளகத் தங்கத்தால் கணபதிசெய்து பூஜிக்க

மொழியவே தாளகத்தின் தங்கத் தாலே
முனிந்துநீ கணபதியைப் பண்ணி நீயும்
பொழியவே வைத்துநீ எட்டெ முத்தைப்
பொருத்தமாய்ப் பூசிப்பாய் பூசை செய்து
தழியவே சிவபூசை பண்ணிக் கொண்டு
தாட்டிகமா யுண்டுடுத்திக் கவனம் பாரு
நழியவே கவனவழி யோட்டிப் பாரு
நாதாந்த மெய்ப்பொருளின் நாட்டம் பாரே. 54

தாளகச் சுன்னத்தால் தாம்பிரச்சுன்னம்- வேதை

நாட்டமாந் தாளகத்தின் சுன்னந் தன்னை
நலமாகக் கல்வத்தி லிட்டுத் தானே
வாட்டமா யரைத்துநீ தாம்பி ரத்தில்
வடிவாகத் தட்டியே காய வைத்து
ஒட்டமாய்ப் பத்தெருவி லடுக்கிப் போடு
உற்றுமே தாம்பிரமுஞ் சுன்ன மாகும்
கூட்டமாய் ரசபதங்கஞ் சேர்த்து நீயும்
குணமாக எடைசமனாய்ச் சேர்த்தி டாயே. 55

சேர்த்துநீ யெடை..சமனாய்ச் சேர்த்துக் கொண்டு
துடியான வெடியுப்பு ஐயநீ ராலே
பார்த்துநீ யரைத்துமே வில்லை தட்டிப்
பதிவாகப் பத்தெருவி லடுக்கிப் போடு
சாத்துமே யெடைபோகாச் சுன்ன மாகும்
சரியான வாதமிதி லடங்கிப் போகும்
காத்துமே நவலோகம் நூற்றுக் கொன்று
கனிவாக இட்டுருக்கு மாற்றுப் பத்தே. 56

பத்தான மாற்றுள்ள பொன்னை விற்றுப்
படியாக வுண்டுடுத்தி வழியைக் கேளு
நத்தான வழிதேடு நல்ல யோகம்
நலமாகப் பார்த்திடவே சித்தி சித்தி
முத்தான யோகமது பண்ண வேண்டாம்
முனிவான சிவயோக மொழிந்து கூடு
வித்தான விவேகத்தைக் கண்டு தேறு
விதமாக வெல்லாமும் மொழிந்து பாரே. 57

தாளகச் சுன்னத்தால் தங்கச்சுன்னம்- வேதை

மொழியவே தாளகத்தின் சுன்னந் தன்னை
மோகமாய்க் கல்வத்தி லிட்டுக் கேளு
நழியவே வெடியுப்பு ஐயநீ ராலே
நலமாகக் கடிகையே யதுதா னாழி
பிழியவே யரைத்துத் தங்கத்தின் மேலே
பெலமாகக் கட்டியே காய வைத்துச்
சுழியவே பத்தெருவில் புடத்தைப் போடு
சரியாகத் தீயாற்றி யெடுத்தி டாயே. 58

எடுத்துநீ பார்த்தவுடன் தங்கச் சுன்னம்
இதமாக விருந்துவிடும் தங்க நீற்றை
அடுத்துமே நவலோகம் நூற்றுக் கொன்று
அடைவாக இட்டுருக்கப் பத்து மாற்று
நடுத்துமே தாம்பிரத்தின் ஜல்லி நூறு
நலமாகச் சட்டிதனி லிட்டுத் தானே
கடுத்துமே வறுத்துநீ தங்கச் சுன்னம்
கனிவாகப் பணவெடைதான் போட்டி டாயே. 59

போட்டுவறு தாம்பிரமும் பத்து மாற்று
புகலரிய வுப்புக்குங் காவிக் கப்பா
நாட்டுமே யோடாது நல்ல வித்தை
நாதாந்த சாரமது நாட்டுள் ளோர்க்கு
வீட்டுமே திரியாதே தங்க நீற்றை
விதமாகப் பணவீத முண்டு தேரு
தேட்டுமே யிதுரொம்பத் தேட்ட மாகுஞ்
சிவயோக வழிதானே செல்வ மாமே.

மேற்படி தங்கச்சுன்ன பலன்

ஆமேதான் னந்திசந்தி பணமவ் வீதம்
அடைவாக வுண்டுவர நோய்தான் போகும்
நாமேதான் நரைதிரைக ளற்றுப் போகும்
நாதாந்தப் பேரொளியி னடத்தை காணும்
தாமேதான் சாவில்லை நோய்கள் தீரும்
தாட்டிகமாய்க் கவனவழி தீர்க்க மாகும்
காமேதான் கனகமிது பாரு பாரு
காதலுட னெல்லாமுங் கண்டு பாரே.

கண்டுபார் தாளகத்தின் சுன்னந் தன்னைக்
கனிவாகக் கல்வத்தி லிட்டுத் தானே
முண்டுபார் வெடியுப்பு ஜயநீ ராலே
முனிவாக விட்டுநீ முடிய ஆட்டி
கண்டுபா ரயத்தகடு மேலே கட்டு
கனிவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
தொண்டுபா ரயமதுவும் நீறிப் போகும்
துடியாக வெடுத்துநீ தொன்மை கேளே.

கேளுமே நவலோகம் நூற்றுக் கொன்று
கெடியாக யிட்டுருக்கு மாற்று எட்டு
வாளுமே வுப்புக்குங் காவிக் கப்பா
வடிவாக வோடாது வொழிந்தி டாது
நாளுமே யந்திசந்தி பணமவ் வீதம்
நலமாக வுண்டுவரத் தீரும் நோய்கள்
தாளுமே விந்திறுகு மண்ட வாதந்
தப்பாம லோடுமது நடத்தை தானே.

தானென்ற நரைதிரைக ளற்றுப் போகும்
 தாட்டிகமாய்ப் பசுநரம்பு தானே மின்னும்
நானேதான் சொல்லிவிட்டேன் சூத்தி ரத்தில்
 நலமாக வாதசித்தி க்ஷணத்தி லாகும்
வானேது விண்ணேது நிறைந்த தங்கம்
 வடிவாக வெல்லாமுங் கைக்கு ளாகும்
ஊனேது வுடலிறுகு மயத்தின் போக்கு
 உற்றுநீ பார்த்திடவே வுண்மை யாமே. 64

வாதி முறைமை

உண்மையாய் வழலைதொட்டு வாதம் பாரு
 உற்றுநீ அயத்தினுட போக்கு மெத்த
கண்டபேர் தமக்குமே சொல்ல் வேண்டாம்
 கனிவாக வழலையென்ற பேரைத் தானும்
முண்டைநாய் ஞானிகள்போல் பிதற்று வார்கள்
 முக்கியமாய் மருந்துகளைப் பார்த்தோ மென்பார்
சண்டாள ரிவர்முகத்தைப் பார்க்கா தேபார்
 தனித்துமே வாதிக்கு முறையி தாமே. 65

ஆமேதா னூலில்லா வாதி மார்கள்
 அடைவாகப் புலம்பிய நூல் பார்த்தோ மென்று
நாமேதான் நூல்வளமை தெரியா தாலே
 நலமாகச் சாஸ்திரத்தைப் பொய்யென் பார்கள்
வாமேதான் யூகிமுனி நூலெல் லாம்பார்
 வடிவாகச் சாஸ்திரத்தை மருவிப் பாரு
தாமேதான் பண்டிதத்தின் சித்தி பாரு
 கருவான பூரணத்தின் நிலையைப் பாரே. 66

யூகிமுனி சாஸ்திரக்கோவையைப் பார்த்தபின் சகலமுஞ் சித்தியாமெனல்

பாருமே வாதகாண் டத்தைப் பாரு
 பதிவான கும்மியெல்லாம் பழக்கம் பாரு
நாருமே முன்காண்டம் பின்காண் டம்பார்
 நலமான வாதவுலா தன்னைப் பாரு
காருமே பள்ளெல்லாம் பிரித்துப் பாரு
 கருக்கிடையும் குறுக்கிடையும் கருவாய்த் தோன்றும்
ஏருமே வுழுததுபோல் நூல்க ளாகும்
 இதமான நூலெல்லாம் பாரு பாரே. 67

பார்த்திடவே நூல்களெல்லாம் சித்தி தோன்றும்
பதிவாகச் சத்துருவு மித்துருவுந் தோன்றும்
காத்திடவே நூல்களிட மர்மந் தோன்றும்
கனிவாகச் சித்திதருங் கண்டு பாரு
நாத்திடவே யெல்லாமுஞ் சித்தி யாகும்
நாடினா லெந்நூலை நயந்து பாரு
வாத்திடவே சகல சித்தி யுடனே யாகும்
வடிவான சாஸ்திரத்தை யடுத்துப் பாரே. 68

பாருமே உலகத்தில் வாதம் பொய்யோ
பரிவான வழலைபொய்யோ பரிந்து கேளு
நாருமே சரக்குகள் தாம் பொய்யே யென்பார்
நலமான யோகமென்ன பொய்யே யென்பார்
தாருமே கைபாகம் தெரியா தாலே
தண்மையாய்ச் சாஸ்திரங்கள் பொய்யென் பார்கள்
ஏருமே விழுதாலே யிதக்கப் பட்டு
இதமாகச் சேறாகு மின்ப மாமே. 69

ஆமேதான் சரக்குகளை வைத்து வைத்து
அடைவாகக் கைபாக மறியா தாலே
வாமேதான் மயங்கியே யலைந்து லைந்து
வடிவாக நல்லவழி காணா தாலே
போமே தான் புலம்பியே மாய்ந்து மாய்ந்து
பொல்லாத துரோகியாய் வைவா ரப்பா
தாமேதான் தபித்துமே யேங்கி நொந்து
தாட்டிகமாய் வைவார்கள் வாதி யோரே. 70

வாதிகள் ரசங்கட்டில் சகலமுங் சித்தியாமெனல்

வாதிதனக் காகவே யின்ன மொன்று
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மை கேளு
நீதியா யிரதமது நெருப்பில் நின்றால்
நிலைக்குமே காயமது காயந் தானும்
நாதியாய் நிலைக்குமது காயந் தானும்
நலமாக நரைதிரைக ளற்றுப் போகும்
பாதிகொள் சடைமுடியர் போலே யாகும்
பதிவாகப் பார்த்திடவே பலனு மாமே. 71

ஆமேதா னெல்லாமும் பார்த்துத் தேறி
யாடலாம் கோடிவித்தை யண்டந் தன்னில்
வாமேதா னாடலாங் கோடா கோடி
வடிவாக வித்தையிதில் வடிவு காணும்
நாமேதான் சுருக்கத்தி லெல்லாஞ் சொன்னேன்
நலமாக யூகிமுனி நூலைப் பாரு
தாமேதா னெல்லாமும் நூலி லாகும்
தாட்டிகமாய்ப் பார்த்துணர வெல்லாஞ் சித்தே. 72

வேறு வழலை

சித்தாக யின்னமொரு வழலை மார்க்கம்
செப்புகிறே னுலகத்தில் தேர்ந்து பாரு
முத்தான வழலையது சுட்ட சாம்பல்
முனிவாகப் படிநாலு அளந்து விட்டு
நத்தாகப் பாணியது யெட்டு விட்டு
நலமாகப் பாணிதனில் கரைத்து நீயும்
வித்தாக நல்லெண்ணெய் படியி லேதான்
விதமாக விட்டுநீ வைத்தி டாயே. 73

மேற்படி வழலையில் அயவகைச்சத்து

வைத்திடுவாய் பாலாக முறியு மட்டும்
வடிவாக முறிந்தபின்பு மார்க்கங் கேளு
நைத்திடுவாய் கௌரியென்ற பாஷா ணந்தான்
நலமாகப் பலம்பத்து கரைத்து விட்டு
கைத்துமே கொதிக்கவைத்துப் பின்பு கேளு
கனிவாக அரப்பொடியும் பலமும் பத்து
நைத்துநீ வழலையிலே கொதிக்க வைத்து
நலமாக வொட்டவே காய்ச்சி டாயே. 74

காச்சிட்டப் பின்புதான் குகையி லிட்டுக்
கனிவாக வுருக்கிடவே யுருகி யாடும்
வாச்சிட்டு வெள்ளிபொன்போல் கண்விட் டாடுர்
வடிவாகச் செழும்புதா னெடையே சேர்த்துப்
பாச்சிட்டு உருக்கிடவே யுருகி யாடும்
பரிவாகக் கல்வத்தி லுடைத்துப் பின்பு
நாச்சிட்டுக் கெந்தியது முக்கா லிட்டு
நலமாகப் பொடித்துநீ பின்பு கேளோ

கேளுமே வழலையென்ற தைலந் தன்னில்
கெடியாகப் பொடித்துநீ போட்டுக் காய்ச்சி
நாளுமே ஒட்டவெரி குகையி லிட்டு
நலமாக வுருக்கிடவே சத்து மாகும்
வாளுமே வெண்காரம் பாதி சேர்த்து
வடிவாகக் கல்வத்தி லிட்ட ரைத்துப்
பாளுமே வில்லைதட்டிக் காயப் போட்டுப்
பதிவாகப் புடம்போட்டு எடுத்தி டாயே. 76

மேற்படி அயவகைச் சத்தில் மிருதார்சிங்கி சேர்ந்த சிந்தூரம் :- வேதை

எடுத்துமே குகையிலிட் டுருக்கித் தீரு
இதமாக வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
அடுத்துநீ புறம்பாக வைத்துக் கொண்டு
அடைவாக மிருதார சிங்கி தானு
மடுத்துமே பலம்பத்து நறுக்கிக் கொண்டு
மயமாக அவ்வெடைக்குத் துருசு கூட்டி
நடுத்துமே அமுரிவிட் டரைத்து நீயும்
நலமாக வில்லைதட்டிக் காயப் போடே. 77

போடவே பத்தெருவில் புடத்தைப் போடு
பொலிவாக வெடுத்துநீ சொல்லக் கேளு
ஆடவே முன்னுருக்கு மயத்தி லேதா
னடைவாக எடைசமமாய்ச் சேர்த்துக் கொண்டு
கூடவே யமுரியா லரைத்து வில்லை
குணமாகச் செய்துநீ காயப் போடு
வாடவே பெரியபுடம் போட்டெ டுக்க
வடிவாகச் சிந்தூர மாகுந் தானே. 78

ஆகுமே சிந்தூர முருக்கம் பூப்போல்
அடைவாகத் தானிருக்குங் குகையி லிட்டு
வாகுமே காரத்தைக் கூட்டு ருக்கு
வடிவாகச் செம்பாகும் மார்க்க மெத்த
பாருமே செம்பொன்னா யிருக்கும் பாரு
பதிவாக இச்செம்பில் வேதை கோடி
தாருமே வெள்ளிதனில் நூற்றுக் கொன்று
தாக்கிடவே மாத்தாகுந் தன்மை பாரே. 79

பாருமே வழலையினா லெல்லா மாச்சு
பாதிவான கைபாகத் தாலே யாச்சு
நீருமே வழலையென்ற எண்ணெய் விட்டால்
நிதமாக வொன்றுமில்லை யின்ப மாக
தாருமே தவிக்காதே காரம் பாரு
தாட்டிகமாய் வாதசித்தி க்ஷணத்தி லாச்சு
பாருமே வாதவெள்ளக் கேணி யாச்சு
வளமான நூலறிய வெளிதி லாமே. 80

அப்பிரகச் சிந்தூரம்

ஆமேதான் தளுக்கில்லாத அப்பிர கந்தா
னாதியா யின்னமொன்று சொல்லக் கேளு
நாமேதா னப்பிரகம் பலமும் பத்து
நலமாக நவநீதம் பண்ணக் கேளு
வாமேதான் வீரமது பாதி யிட்டு
வளமாக இருஜாம மரைத்துப் பின்பு
சாமேதான் வெண்ணெய்போ லாகும் பாரு
சரியாகக் கல்வத்தி லிட்டி டாயே. 81

இட்டுநீ மேல்மூடி சீலை செய்து
இதமாகச் சூட்டடுப்பி லெரித்து நன்றாய்க்
கட்டுநீ பார்த்திடவே உயர வேறுங்
கனிவாகப் பதங்கமெல்லாஞ் சுரண்டி வாங்கி
நட்டுமே தூரவைத் தடியில் நின்ற
நலமான அப்பிரகந் தனையெ டுத்து
மட்டுமே கல்வத்தி லிட்டு நன்றாய்
மதியாக வெடியுப்பு மெடையே சேரே. 82

சேர்த்துநீ யிருஜாமம் வாழைப் பாலால்
சிறப்பாக வரைத்துநீ வில்லை தட்டிப்
பார்த்துநீ பெரியபுடம் போட்டெ டுத்துப்
பதிவாகத் திரும்பவுமே வெடியுப் புத்தான்
காத்துநீ வெடியுப்புச் சமனாய்ச் சேர்த்துக்
கனிவாக முன்பாலா லரைத்துக் கொண்டு
வாத்துநீ வில்லைதட்டிக் காயப் போடு
வடிவாகப் பெரியபுடம் போட்டி டாயே. 83

போட்டுநீ கல்வத்தி லிட்டுத் தானே
பொலிவாகப் பாணியது படி ரண் டுக்குள்
பாட்டுமே விட்டுநீ யரைக்கத் தானும்
பதிவாக அப்பிரகம் தளுக்க அற்று

காட்டுநீ அப்பிரகம் தன்னைப் பாரு
கனிவாக யிருக்குமது கண்டு பாரு
மூட்டிநீ தெளிவைத்தா னிறுத்துப் போட்டு
முனிவாக அப்பிரக மெடுத்துக் கொள்ளே. 84

எடுத்துநீ வாழையென்ற பாலி னாலே
இதமாக வரைத்துநீ ஆண்மை கேளு
அடுத்துமே பெரியபுடம் போட்டெ டுத்து
அடைவாக வெடுத்திட்டு ஆண்மை கேளு
நடுத்துமே ஆலமரம் பழம்போ லாகும்
நலமாக வெடுத்துநீ தூர வைத்து
படுத்துநீ யின்னமொன்று சொல்லக் கேளு
பதிவாக வெடியுப்புப் பலமும் பத்தே. 85

வெடியுப்புத் திராவகம் செய்து ரசம் பூர்க்க வைத்து, மேற்படி அப்பிரகம் சேர்த்துச் சிந்தூரம் செய்தல்

பத்தாக நிறுத்துநீ சீனந் தானும்
பதிவாகப் பலமிருபத் தைந்து மாகும்
கொத்தாக இவையிரண்டும் பொடித்து வாலை
கனிவாக இட்டுநீ வாலை மூடி
நத்தாகத் தீயெரிக்க முன்னீர் வீழும்
நலமாக வந்தநீர் தன்னைத் தள்ளு
வித்தாகப் பின்னீரை வாங்கி மைந்தா
விதமாக வைத்துநீ விரும்பி டாயே. 86

விரும்பியே சூதமது சேரே யொன்று
விதமாகப் பீங்கானி லிட்டுக் கேளு
அரும்பியே புகைநீரைச் சூதத் திட்டு
அடைவாகக் கதிர்தனிலே வைத்துப் போடு
நரும்பியே வெண்ணெய்போ லாகும் பாரு
நலமாக வெண்ணெயெல்லா மெடுத்துக் கொண்டு
திரும்பியே புகைநீரைக் கொஞ்சங் குத்து
துடியாகச் சூதமெல்லாம் பூத்து வாங்கே. 87

வாங்கியே யெடுத்துநீ சேரே யொன்று
வடிவாக முன்செய்த அப்பிர கந்தான்
தாங்கியே சேரொன்று நிறுத்துக் கல்வம்
தாட்டிகமா இட்டுநீ புகைநீர் குத்திப்

பாங்கியே யரைத்துநீ யுமிநெ ருப்பில்
பதிவாக வறுத்துநீ பாகங் கேளு
தாங்கியே கடத்திலிட்டு மேலே மூடித்
தண்மையா யடுப்புதனி லேத்தி டாயே. 88

ஏத்தியே கமலம்போல் தீயை மூட்டு
இதமாக விருஜாம மெரித்துத் தீரு
நாத்தியே தீயாற்றி யெடுத்து நன்றாய்
நலமாகப் பீங்கானி லிட்டுக் கேளு
வாத்தியே புகைநீரை யதிலே யூற்றி
வடிவாக உமிநெருப்பில் வறுத்துப் போடு
சாத்தியே முருக்கம்பூப் போலே யாகும்
சரியாக முப்புபோ லெரித்தி டாயே. 89

எரித்திட்டு எடுத்துப்பார் முருக்கம் பூவாம்
இதமாக வைரவர்க்குப் பூசை பண்ணி
நரித்திட்டுச் செம்புதான் பத்து ருக்கு
நலமாக வொன்றுகொடு தூக்கி நீயும்
வடித்துநீ பார்த்திடவே தங்கம் போலாம்
வடிவாகச் செம்பொன்னா யிருக்கு மப்பா
உருக்கிநீ வெள்ளிதனை யூதி நீயு
முறுதியாய் நாலாறு சேர்த்துக் கொள்ளே. 90

சேர்த்துநீ யுருக்கியே மாற்றைப் பாரு
செழுஞ்சுடராந் திருமேனி சிவனைப் போலாம்
பர்த்துநீ எடுத்துப்பார் தங்க மாகும்
பதிவாக உப்புக்கும் காவிக் கப்பா
நாத்துமே யிறங்கிவிடும் இதனை விற்று
நலமான வழியைநீ யடுத்துக் கூடு
மாத்துமே அப்பிரகந் தனில்பிறந்த
மதயானை சத்தியுட நாதந் தானே. 91

சத்தியுட நாதமது அப்ரே கந்தான்
சரியான செம்பதுவுங் கட்டிப் போகும்
புத்தியாய் அப்ரேகச் சிந்தூ ரத்தைப்
புக்கிநீ வைத்துரசந் தன்னைக் கட்டி
நத்தியே வாதத்தைப் பார்த்துத் தேறு
நலமாகச் சொல்லிவிட்டேன் சிவனுக் கொப்பாய்
முத்தியா யிந்தநூல் தன்னைக் கண்டால்
முக்கியமாய் வாதமது ஏவல் தானே. 92

தானென்ற அப்ரேக சிந்தூ ரத்தைத்
தண்மையா யமிர்தசர்க் கரையில் தானே
வானென்று வுண்டிடவே காய சித்தி
வடிவாக மேகநீ ரெல்லாம் போகும்
கானென்ற பித்தமுதல் வாத மெல்லாம்
கடல்புக்கும் க்ஷயரோக மனைத்தும் போகும்
நானென்ற மகோதரமும் போகும் பாரு
நலமாக வெல்லாமுஞ் சித்தி யாமே. 93

அரிதாரச் சுன்னம்

ஆமேதான் வெகுசுருக் கரிதாரச் சுன்னம்
அடைவாகச் சொல்லுகிறோம் அறிவுள் ளோர்க்கு
வாமேதான் வெடியுப்புப் பலமும் பத்து
வடிவாகப் பழம்புளியும் பலமு மைந்து
நாமேதா னிரண்டுமொன்றா யிடித்து நைய
நயமாக வில்லைதட்டி யடுப்பி லிட்டு
வாமேதா னெரித்திடவே தீப்பி டித்து
வடிவாக வெரித்துப்பார் சுன்ன மாமே. 94

ஆமேதான் சுன்னத்தைக் கல்வத் திட்டு
அடைவாக வரைத்துநீ பனியில் வைக்க
சாமேதான் பலபலென ஜயநீ ராகும்
சரியாக நீரெல்லா மிறுத்துக் கொண்டு
பாமேதான் தாளகமும் பலமும் பத்து
பதிவாக வளையலுப்பைக் கவசங் கட்டி
நாமேதான் கரியோட்டில் குமுற வாட்டி
நாடியே தண்ணீரிற் போட் டிடாயே. 95

போட்டுமே பார்த்திடவே வளைய லுப்புப்
பொருமியே கரைந்துவிடும் தாள கத்தை
நாட்டுநீ பார்த்திடவே சிந்தூ ரம்போல்
நலமாக விருக்குமது கல்வத் திட்டுக்
கூட்டுநீ வெடியுப்பு ஜயநீ ராலே
குமுற அரை ஜாமமது நான்கு மாகும்
வாட்டுநீ வில்லை தட்டிக் காயப் போடு
வடி வாகக் கற்சுன்னம் சட்டியிட்டே. 96

இட்டுநீ வில்லைதனை யுள்ளே யிட்டு
இதமாக இருஜாமந் தீயெரித்து
முட்டுநீ பிரித்தெடுத்துக் கல்வத் திட்டு
முனிவாக வெடியுப்பு ஜயநீ ராலே
கட்டுநீ வில்லைதனை யரைத்துக் கட்டிக்
கனிவாகச் சுண்ணாம்புக் குள்ளே யிட்டுப்
பட்டுநீ புடம்போடு வில்லை தானும்
பதிவாகக் கருப்பாக விருக்கும் பாரே. 97

இருக்குமே வில்லைதனைக் கல்வத் திட்டு
இதமாக வெடியுப்பு ஜயநீ ராலே
பெருக்கவே யிருஜாம மரைத்து வில்லை
பிசகாதே பிடித்துநீ காய வைத்து
நெருக்கவே அகல்தனிலே சுன்ன மிட்டு
நேர்படவே வைத்துநீ புடத்தைப் போடு
பெருக்கவே தாளகந்தான் சுன்ன மாகும்
பேரான சுன்னத்தின் பெருமை கேளே. 98

கேளுமே துருசதுவும் நீறிப் போகும்
கெடியான சரக்கெல்லாம் சுன்ன மாகும்
பாருமே போகாது தொந்த மேறும்
பதிவான சரக்கனைத்துங் கட்டும் கட்டும்
வாளுமே யெல்லாமுங் கண்டு தேரு
வடிவாக வெல்லாமுஞ் சித்தி மெத்த
தாளுமே தூக்கவே யெல்லா நூலும்
தாட்டிகமாய்ப் பார்த்துநீ தண்மை காணே. 99

காணவே நோயெல்லாந் தீர்ந்து போகும்
கனிவாகத் தாளகத்தின் சுன்னத் தாலே
வாணவே வகைவிவர மாக வைத்து
வடிவாக யோகசித்தி வாத சித்தி
நாணவே நாநூறு மறுநூ றும்பார்
நலமாகச் சூத்திரத்தை நவின்று பார்த்துத்
தோணவே கைபாக மாகச் செய்தால்
தொல்லுலகில் ரசவாதம் சித்தி தானே.

யூகிமுனி பூரணம்- 100
முற்றுப் பெற்றது

உ

யூகிமுனிவர் அருளிச் செய்த கரிசல்- 151

காப்பு

திருவி லுயர்ந்தோர் தேடியுங் காணா
அருவுரு வான ஆதியே காப்பு. 1

திருவள ருலகில்
கருவினி லுதித்தோர்
வருவினை யகற்றும்
கரிமுகன் துணையே. 2

ஆதி யந்த நடுவில் நிறைந்த
சோதியே யென்றன் தொடர்பவ மகற்ற
நீதியா யொற்றைக் கொம்புடன் வந்த
கோதிலா வைங்கரன் குணகழல் காப்பே. 3

காப்பெனவே யென்குருவா மகத்தீசர் பாதம்
கருணையுள்ள மஹேஸ்வரத்தின் பாதம் போற்றித்
தாப்பான வாலைநீர் வாணி பாதம்
தவம்பெற்ற புஜண்டர்முதல் பெரியோர் பாதம்
கோப்பான சப்தரிஷி பாதம் போற்றிக்
கூறுவேன் தாயெனக்குக் குணமாய்ச் சொன்ன
வாப்பான உலகிலுள்ள மானி டர்க்கு
வரும்வினைகள் தீருதற்கு வசனித் தாளே 4

வசனித்த நூல்தனக்குப் பேர்தான் கேட்டேன்
வாமிசிவ காமிதிரி சூலி நீலி
நிசமாக நாதனுரை செய்த வண்ணம்
நீமகனே கேளென்று நிமலி சொல்வாள்

கசடற்ற கரிசலென்று நாமந் தந்து
கடவுளர்தா மெனக்குரைத்தார் கருணை கூர்ந்து
பிசகில்லா துனக்குரைத்தேன் யூகி யப்பா
பேருலகில் பெரும்பிரம நிலையி னில்லே. 5

நிலையினில் நில் லென்று நிமலி யுரைக்கவும்
கலைதெரிந் தென்குரு கருணையின் மிகுதியால்
அலைவிலா வெண்பா அருங்கலி விருத்தமும்
மலைவிலாச் சரிகவி வசனித்தேன் கரிசலே. 6

கரிசலிலே லேகியங்கள் சிந்தூ ரங்கள்
கனமான சுன்னமுடன் களங்கு பற்பம்
நெரிசலிலா மாத்திரைகள் தைல மெண்ணெய்
நேரிழைமார் கர்ப்பக்கோ ளகன்றே யோடப்
பரிசனமாந் தம்பனத்தின் குளிகை யோடும்
பாங்கான ஆண்பெண்ணுக் கிடும ருந்தும்
வரிசையுடன் வியாதிகட்குத் தகுதியாக
மானிலத்தில் பண்டிதர்தாம் பிழைக்கச் சொன்னேன்.7

பிழைக்க வென்று சொன்னதுவு முலகத் தோரைப்
பேரின்ப வாழ்வில்மனம் பெலக்க வென்று
தழைக்கவே சிவஞான வைராக்ய மோங்கிச்
சதாநித்தம் பெரியோர்கள் தாள்ப ணிந்து
புழைக்கையோன் அருள்பெற்றுத் தலமுந் தாண்டிப்
புவனைபரா சத்தியுட வருளும் பெற்றுத்
தழைத்திடவே பண்டிதம்செய் தவனி யெங்கும்
தான்பெருகப் பேர்வாங்கிப் பிழைத்தி டாயே. 8

பிழைத்திடவே சொன்னநிலை தன்னை விட்டுப்
பேதையர்மேல் மையல்கொண்டு பினத்தி டாதே
அழைத்திடவே வைத்தியனென் றுலகி லுன்னை
அவனியுள்ளோர் கொண்டாடிப் பேர்தான் பெற்றுத்
தழைத்திடவே உலகிலுள்ள மனிதர்க் கெல்லாம்
தான்வந்த வியாதிகளைத் தலைகெட் டோடச்
செழித்திடவே ஜெயகம்பம் நாட்டி வெற்றி
செய்துகொடி கட்டிப்பண் டிதம்செய் வாயே. 9

வாய்ச்சாலம் பேசுவதி லொன்று மில்லை
வாதிமக னானாலே வைத்யஞ் செய்வான்
பேய்போலே யலையாதே மௌன மாகிப்
பெரியோரைப் பணிந்துமவ ரருளைப் பெற்றுத்

தாயான மனோன்மணியைப் பணிந்து போற்றித்
தந்தையாஞ் சதாசிவத்தி னருளும் பெற்று
ஓயாமல் வாசிமனக் குதிரை யேறி
உலகமென்ற அண்டமெல்லாம் சுற்றிப் பாரே. 10

பாரென்று சொல்லிவிட்டே னறிவுள் ளோனே
பார்ப்பது மனமடங்கப் பார்க்க வேண்டும்
காரென்ற மேகம்போற் கருணை கூர்ந்து
கடாட்சித்த குருவருட்குப் பாத்ர னாவாய்
தேருதற்கு வழிகாட்டும் வேதந் தன்னைத்
திடம்பெறவே மனதுறுதி யாகக் கொண்டு
சார்பென்ற அதிரசத்தை யுண்டு தேறிச்
சாயுஜ்ய பதம்பெறவே சரத்தைப் பாரே 11

சரமென்றால் ரவிமதியாஞ் சுழினை மூன்றும்
தானறிந்து சோடசத்தை ரவியில் சேர்த்துப்
பரபரப்பாய்த் துரிதமுடன் பழக்கஞ் செய்து
பாழ்போகா வண்ணம்ரோ கணியை யுண்டால்
நேராக மூன்றுமுந்தன் வசமே யாகும்
நிலைத்ததடா முப்பூவின் மறைப்பெல் லாந்தான்
காரான முப்பூவும் வழலைப் போக்கும்
கருமான முள்ளவெல்லாம் கைமேற் காணே. 12

காணலாம் வாசிவச மானால் மைந்தா
கனமான உபரசமும் சரக்கெல் லாந்தான்
தோணவே யுள்விழியால் நோக்கும் போது
சொன்னபடி கேட்டுனக்குத் தொழில்கள் செய்யும்
வீணான மாயையாலா ணவமே மிஞ்சி
வீணனைப்போ லலையாதே விழலா காதே
கோனாக வுன்மனியி லிருந்து வாழும்
குருபரனை யறிந்துகொண்டு கோபந் தள்ளே. 13

கோபத்தா லிறந்தவர்கள் கோடா கோடி
கொடுமைகொண் டலைந்தவர்கள் கோடா கோடி
பாபத்தால் வருங்கொடுமை தனைக்கா ணாமல்
படுபாவி மாய்கைதனில் பட்டார் கோடி
தாகத்தால் கானல்தனை நீரென் றெண்ணித்
தவித்தலைந்த மான்போலச் சாவா வண்ணம்
பாபத்தை வேரறுக்க வழியைக் காட்டும்
பரமகுரு பாதத்தைக் கதியென் றெண்ணே. 14

எண்ணியே யுடல்பொரு ளாவி மூன்றும்
ஏகமன தாயவர்க்குத் தத்தஞ் செய்து
கண்ணியனாய்க் கரிசலுட பொருளைக் கேட்டுக்
கருவறிந்து பொருள்தெரிந்து கருத்தா யுன்னிப்
பண்ணியதோர் மருந்துகட்குச் சாபந் தீர்த்துப்
பழவினையி னிலையறிந்து பரிகா ரஞ்செய்
தெண்ணியதோ ரெண்ணமெல்லாம் பலித மாக
இயம்புகின்றேன் பஞ்சசூத மெழுகாதி தானே. 15

பஞ்சசூத மெழுகு

ஆதியாய் வேதாந்தப் பொருளாய் நின்ற
அன்பான மஹேஸ்வரனைப் பணிந்து போற்றிச்
சோதியாய் விளங்குகின்ற ஆத்தாள் பாதம்
துணையாகக் கருத்தில்வைத்துத் துன்பம் நீங்க
நீதியாய்ப் பெரியோர்கள் பாதம் போற்றி
நினைவுதனில் மறவாமல் சுருக்க மாக
வாதியென்று பேரெடுத்து வந்தோர்க் கெல்லாம்
வசனித்தே னவிழ்தமொன்று வசனித் தேனே. 16

வசமான வாண்குறியும் [1] வராகன் ரெண்டு
வகையான நட்சத்திரம் [2] வராகன் ரெண்டு
எசமானும்[3] வராகன்ரெண்டு சிந்தூரம்[4] ரெண்டு
இனிரெண்டு [5] ஏகவைத்துக் கரண்டி யிட்டு
ரசமான நெருஞ்சியின்சார் முருங்கைப் பூச்சார்
நாரியின்பா[6] லிம்மூன்றும் சுருங்கக் கிண்டி
நிசமாக வரைக்கமெழு காகும் பாரு
நியமமுட னெடுத்ததனைப் பூசை பண்ணே. 17

பண்ணவே கணபதிக்கும் மஹேஸ்வ ரிக்கும்
பாங்காகப் பூசைசெய்து தொழுது கொண்டு
என்னமோ வென்றுசொல்லி யேங்க வேண்டாம்
இதமான பஞ்சரச மெழுகு தன்னை
உன்னிதமாய்ச் சித்தரெல்லா மொளித்தா ரப்பா
ஓகோகோ வதன்பெருமை யென்ன சொல்வேன்
சன்னியென்ற பதின்மூன்று மிதன்பேர் சொல்லத்
தலைகாட்டா தோடும்பார் க்ஷணத்தில் தானே. 18

அநுபானம்

பாரப்பா அநுபானங் கூறக் கேளு
பாங்குபெறக் கலசப்பால்[1] கொடுத்தா யானால்
நேரப்பா சன்னிபதின் மூன்றுந் தீரும்
நேரில்லாத் தோஷமேழுந் தீரும் பாரு
சாரப்பா யிசிவுமுதல் சாந்த மாகும்
சகலசுரம் விட்டோடும் தப்பா தப்பா
கூரப்பா சிஷ்யனென்று வந்தா னானால்
கூறுவாய் நிர்மூடர்க் கீந்தி டாதே. 19

ஆமப்பா வஜ்ரவல்லிக்[2] கியாழந் தன்னில்
அப்பனே குன்மமது வெட்டுந் தீரும்
வாமப்பா சித்ரமூலக்[3] கியாழந் தன்னில்
மைந்தனே சூலைமுதல் முடக்கு வாயு
வேமப்பா கிரந்தியோ டரையாப் பெல்லாம்
வெகுசுறுக்கு மிளகுபொடி தன்னிற் கொள்ள
நாமப்பா சொல்லிவிட்டோ மென்று சொல்லி
நவகோடி சித்த ரெல்லா மெச்சினாரே. 20

மெச்சினா ரவிழ்தமிதை யுண்ட பேர்க்கு
வேதனைக ளில்லையப்பா வுலகிற் றானே
கச்சிதமா யொருபுறத்தி னின்ற வாயு
கனமான கால்கைக ணச்சு வாயு
உச்சிதமாய் மார்நோய்குண் டலியின் வாயு
ஒருபக்கம் சூலையது ஒன்ப துந்தான்
அச்சமறப் பயந்தோடு முலகிற் றானே
அருளினோம் வேதமுனி யன்பாய்க் கேளே. 21

கேளப்பா வலிப்பைந்துந் தீருந் தீரும்
கெடியான நாசிகா பீட வாயு
வேளப்பா வெள்ளுள்ளித் தைலந் தன்னில்
விதமான பணவெடைதான் கொடுத்தா யானால்
கோளப்பா பதறுசன்னி தொண்ணூற் றாறும்
கொடியசன்னி பிறவலிப்பு தோஷந் தீரும்
நாளப்பா அநுபான மறிந்து செய்தால்
நாடாது பில்லிவஞ்ச நயந்து பாரே. 22

நயந்துபார் தூதுவளைக் கியாழந் தன்னில்
நன்றாகப் பத்துநாள் கொடுத்தா யானால்
நயந்துபார் காசமொடு மேல்சு வாசம்
நலமான உப்பிசங்க ளீளை ரோகம்
வியந்துபார் விக்கலொடு கக்கல் மூர்ச்சை
விதவிதமாய் ரத்தமொடு பித்த காசம்
நயந்துபார் மந்தார காச மெல்லாம்
நாடாது கபவாத தோஷந் தானே. 23

தானென்ற திப்பிலிதே னுள்ளே கொண்டால்
தவறாத வண்டுகடி பதினெண் குட்டம்
கானென்ற புண்சூலை கிரந்தி சூலை
கைகண்ட நோய்களெலாங் கழன்றே போகும்
வானென்ற வைத்தியர்க்காய்ச் சொன்னோ மப்பா
மைந்தனே யிம்முறைதான் மடையர்க் காகா
நானென்ற ஆணவமே பேச வேண்டாம்
நானிலத்தி லதீதமிந்த மெழுக தாமே. 24

தலைமுழுக- பஞ்சமூல கற்பம்

மிருகமதம்[1] பித்தமணி[2] வேம்புதிரி பலாதி
கரியநிறம்[3] பாலரைத்துக் காய்ச்சி- சிரசிலிட
விண்கற்ப முண்டு விஷமானோர்க் கெல்லாம்
நண்கற்ப மென்றே நவில். 25

இராஜபேதி மெழுகு

ஆறுமருந்[4] துப்பு ஆதிவஜ்ஜி[5] ராயுதமும்
சாரு மரிசஞ்[6] சமன்மூன்றும்-நீரும்
அரைத்து மணிமணியாக ஆனசிசு விருத்தந்
துரைத்தனவி ரேசனமாந் துதி. 26

விஷபேதி ஜன்னிதோஷங்களுக்கு மெழுகு

சிரக்குமாண்குறி[7] சிவன்விந்து[8] வெற்றிசெறி[9] பவனும்
அரன்பூசைக்[10] கேற்றவனல் தீபமாகு[11] மிவ்வைவவரையும்
சரிபாகமே யளிக்கோளுங் கல்லிலாட்டித் தந்திடநல்
அரவார்கடிவிஷம் பேதியும் வாதமறுஞ் சன்னியே. 27

திரிபுரை சிந்தூரம்

ஆகாசம்[1] நட்சத்திரம்[2] ஆதிசிந்[3] தூரமூன்றும்
சாகாரோமஞ்[4] சுற்றித் தானதின்மேல்-வாகான
வத்திரைசுற்றி வயசட்டி மீதுவைத்துப்
பத்திரமா யெண்ணெய் படி. 28

படிவிட்டுப் பொட்டணத்தில் பக்குவமாய்த் தீபமிடக்
கடிதா யெரிந்தடங்குங் கண்டு- துடியான
சுத்திகல்வம் பொடித்துக் சுயதேனி லுண்பவர்க்குக்
சத்திவலி சுரநோய்போந் தான். 29

விதவையைக் கூடிப் பிள்ளையில்லா திருக்க

வீறான *முதலிவித்து[5] கழஞ்சு நாலு
விழுதுபட வேயரைத்து வெல்லங் கூட்டிச்
சேராத சூதகத்தின் மூன்று நாளும்
செயலுடனே விழுங்கிவிட மலடி யாவாள்
தூரான விபசாரி நூலிழந் தோர்க்குச்
சொன்னதல்லால் மற்றோர்க்குச் சொன்னால் பர்வம்
பேரான மங்கையர்க டமக்குக் கேளு
மரணம்வரை குழவியில்லை மனத்திற் காணே. 30

பஞ்சரசக் குளிகை

பிரி[5]திவப்பு[6] தேயு[7] பெலவாயு[8] வாகாயம்[9]
கரியபஞ்ச பூத சரக்குவகை- நிறைசமமாய்
மிளகு சிறுகீரை மேல்தோன்றி விட்டரைத்து
நலமல்லி பிரமாண நாட்டு. 31

நாட்டி நிழல்காய்ந்து நாரணிபூசை புரிந்து
தாட்டிக வெட்டை சுரநோய்தாம்- பூட்டிடவே
பத்தியமோ வில்லை பாலன்ன முண்பார்க்குச்
சத்திபஞ்ச பூதமிது தான். 32

பஞ்சரசச் சுன்னம்

நாதம்[10]விநது[11] வன்னி[12] நட்சத்திரம்[13] தைரியமும்[14]
ஓதுமைந்துஞ் சுத்தித் தோர்நிறையாய்- நாதமது

---

*காசுருக்குவித்து என்று, ஒருபிரதியி லிருக்கின்றது.

ஒன்றாகுஞ் சேடமரை யொழுங்காய் நிறுத்தரைத்து
நன்றாய்ப் பூமறைப்பில் நடு. 33

நடுவாய்ப் புடங்கோழி நற்சில் காய்ந்திட்டு
வடுவிலுயர் வெள்ளை மாசுணமாம்- முடிவான
எல்லா வியாதியும்போ மேகாத தொன்றில்லை
நல்லாய் பஞ்சரசம் நாட்டு. 34

பட்டுக் கறுப்பு- ரசசிந்தூரம்

நாதமொன்று[1] விந்துமுக்கால்[2] நல்லவெள்ளை[3] தானரையாம்
வீதமுர முத்தெண்ணெய்[4] மெழுகுருட்டி - ஓதுசித்தர்
மூலமரைத்[5] தப்பி முழுப்பட்டுசுற்றி சுன்னச்
சீலைசுற்றி மண்பொதிந்து செய். 35

செய்காயிந் துமியில்வைத்துச் செய்யரை நாளுமெரித்து
ஐயமிலாது பொடித்து யாவர்க்கு- மெய்யான
அநுபானங் கண்டளிக்க நோய்போ யகலும்
மனுக்கறுப்பு தீரும் தீ. 36

வெடியுப்புச் சிந்தூரம்

ஓரைந்து[6] கப்ப லோதுபடை ராஜனுப்பு[7]
காரகுகை யிட்டூதக் கனசிவப்பாம்- பாரின்நோய்
வலிவாந்தி நீர்க்குத்தல் வல்பிணியா வுந்தீரும்
பலிசெய்வெடி சிந்தூரம் பண். 37

கருவங்க சிந்தூரம்

குகையிருந்த[8] கப்பலதைக் குண்டுசட்டி யிட்டுருக்கி
வகையாலம் விழுதுகட்டி வறுத்தெடுத்து- மிகவதின்சார்
வார்த்தரைத்துப் பில்லைசெய்து வாருமுழுப் புடமிடவே
சார்வங்கச் சிந்தூரங் காண். 38

காணுமிதை யுண்ணக் கைகால் வெடிகறுப்பு
தோணுந்தேகப் படர்ச்சிதோல் மேகம்- நாணமுற்று
இருந்த திசைசொல்லா தோடுமிதை யுண்டிடவே
பொருந்து பத்யமில்லை பூண். 39

விந்துநாத சிந்தூரம்

விந்து[9]நாத[10]மிரண்டுவிதஞ் சமனரைத் தெடுத்துப்
பந்தமிரு நேரம் பசுவெண்ணெய்- தொந்தமுண்ண

வந்தவெட்டை மேகம் வளர்நீர்க்குத் தல்விலகும்
விந்துசிந்தூ ரம்மிதுவா மேல். 40

சூதவாத சிந்தூரம்

வஞ்சன[1] நாற்றஞ்சமமாய்[2] வாகாக் குகையி லிட்டுக்
கொஞ்ச மேன்மூடிக் கொடுத் தூத- மிஞ்சுகிலா
சிவயமாஞ் சிந்தூரமதைச் சீழ்வெட்டை சூலைரணம்
கவிப்பான நோய்க்கீந்து காண். 41

வீரரச கற்பூரம் தங்கம்

நட்சத்திரம்[3] பலமும் இரவு[4] திரவு[5] பலமெடுத்துப்
பட்சகுன்ம கோடாலி பருகுகைக்குள்- குட்சிவைத்து
மணலிட்டு மேல்மூடி மாகவசஞ் செய்தெரிக்கத்
தினமரையு மாகித் திற. 42

திறந்துபன்றி ரோமத்தால் சிந்தா துரையெடுத்து
அறவெல்லந் தன்னிலதி வாயு- பரபரக்கும்
மேகவரிப் புண்சூலை மேல்மறப்பு வாயுமுதல்
சாகயிடை காட்டுஞ் சரம். 43

வெடிசாரச் சுன்னம்

படிகம்[6] கெடிபலமாம்[7] பகர்கிரக[8] சாரம்ரெண்டு
துடிநாற்[9] பலமதனைத் தொந்தித்து- மடிநுணுக்கிக்
கலசமிட்டுக் காய்ந்துமுழக் காஷ்டமிட் டெடுக்க
நல்லசுன்ன மாகு நனி. 44

நனியாமிச் சுன்னத்தால் நாடாநோய் கேளும்
தனிசூ தகக்கட்டி தாளாது- பனியதுபோல்
இனிவாரா தோடு மிதுகாணீ ரைப்பிரிக்கும்
கனியான சுன்னமிது கல். 45

வீரக்கருவங்கக் களிம்பு

மீனாட்சி[10] மைந்தன்மேல் கடுக்கப்பல்[11] சமமாய்த்
தானாள் வன்றகுந்தன் நெய்தன்னில்- தேன்போல்
பாகமதா யரைத்துப் படர்தா மரைரணத்தில்
சாதவிடு பாரிதைச் சரி. 46

சகல ரணநோய்க்குத் திரி

ஆகாயம்[1] நட்சத்திரம்[2] ஆகவிரண் டுஞ்சமனாய்
வாகாவா வின்கிருதம் வார்த்தரைத்துப்- பாகான
மெழுகுசீலை யிற்றடவித் தீபம்நோக் கிடவே
அழுகுநோய் பேய்போ மறி. 47

அண்டநோய் தீர

நல்லவேளைப் பூண்டு நறுக்கிச் சரிபாகம்
வல்லதேன் மூன்றுமொன்றாய் வார்கலந்து- சொல்லரிய
அண்டநோ யாளர்க் கப்பினினாட் டிக்கொடுக்க
கண்டவுடன் சுருங்குமிதைக் காண். 48

சர்வநோய்க்கும் ரசசிந்தூரம்

சூதமொன்று[3] நாதமரை[4]சோர்பிதகங் காலாம்
வீதமிது வாய்நிறுத்து வென்றிகவ்வும் - நாதமிட்டுப்
பாதகத்தை விட்டுப் பாலநீர் விட்டரைத்துப்
பூதபீங்கா னிட்டிவை போற்று. 49

போற்றிய சூதம்விட்டுப் பீங்கான்மேல் மூடி
காற்றிரவி காய்ந்துகண் சட்டி- ஆற்றுமணல்
இட்டுமேற் பார்த்தெரியை யெரிநான்கு சாமமதை
விட்டுப்பார் சிந்தூரம் விண். 50

விண்மேகசூலை வெட்டை கபங் கிரந்தி
குண்புண் விரைவாயு கோதையரால்- பண்ணுகின்ற
விந்துநஷ்டந் தீரும் வேண்டுபத்ய மில்லை
தந்திடுநல் ரத்தவிர்த்தி தான். 51

தானான சிந்தூரம் தங்கமா மேனி
ஞாநாநந்தம் பேராகு நானிலத்தில்- கோனான
காயந்தான் கற்பம் காணாது நோய்களுநெய்
நேயதே னிருநேர நேர். 52

இரச சிந்தூரம்

சூரன்பா[5] லிங்கம் பூரம் விரடை
தீரவோட்டுக் காந்தம் செயமிளகு- திரமதுரம்

இம்மூன்றும் விரடை இரண்டும் இட்டைமத்தன் சார்
தம்குகையாய்ச் செய்து தனி. 53

தனியா யிதனாட்சூதம் தாக்குவிரடை-ரெண்டு
இனிக்கவசமேழு மெடுத்து நன்றாய்- முனியாமல்
முழப்புடத்தில் வைத்தெடுக்க முன்குகைக்குள் சூதம்
அழிசுன்ன மாகு மெடு 54

எடுத்தரசம் பத்து விதமொன்று சுன்னமிட்டுக்
கொடுத்தூதப் பூர்க்குங் குறையாது- எடுத்துருக்க
இரசவெள்ளி மாற்றுயர்வா மின்னம்பல நோய்க்குத்
திரமா யரிசியெடை தின். 55

தின்னான சுன்னம் தீர்க்கும்வாயு மேகம்
நண்ணாச் சூலைவலிநோய் நாடாது- கண்ணான
பரீட்சைபார் முன்னில் பலிக்குங் குருவருளால்
அரிசுன்ன மாமிதை யறி. 56

வேறு ரச சிந்தூரம்

சூதசிந்தூரம் விரடை சூரனுங்கால்[1] விரடை
பேதமிலாச் சுத்தித்துப் பேணியரை- வாதவலி
வாய்வெண் பதும்போம் வாரிப் பசியெடுக்கும்
தீயுநோய் யாவுமிது திண். 57

சொர்ணசார சிந்தூரம்

கஞ்[2]சூதம்[3] ரெண்டும் வகையோர் பலமாய்க்
கள்ளமிலா துருக்கிக் கலந்திரண்டும்- நல்லகல்வம்
இட்டு வஜ்ஜிரச்சா[4] ரிழைக்கநவ நீதமுமாம்
வட்டுருட்டிப் பார்த்தலம்பி வை. 58

வைப்பூரம் சூரன் மாசீனம் சாரம்
நையாவும் சேர நாட்டியரை- மைசீசா
சீலைபத்து செய்சேர்த் தடைத்துவாய் திறந்து
வேலைசட்டி மீதுமணல் வேய். 59

வேய்வாய் சீசாநடுவில் வேண்டிவை மணலையிட்டு
ஆய்வாய் கழுத்தடிழுண் ணாகவிட்டு- நேயமுடன்
சாமநாலு மெரிக்கத் தங்கம்போல் பஞ்சவர்ணம்
ஏமசிந் தூர மெடு. 60

எடுத்தெந்த நோய்க்கு மிடையூறில் லாமால்
கொடுநெய் தேன்வெண்ணெய் குணமறிந்து- படுநோய்கள்
சொன்னசாரமென்று சொன்னாரென் குரு முருகன்
வர்ணசிந் தூரமாம் வகை. 61

வீரச் சுன்னம்

சூரன்சூத னிரண்டும் சூழநிறை சமமாய்ச்
சேரப் பொடித்தகலில் சேரவைத்துப்- பார்கவசம்
செய்தடுப்பேற் றித்தீபஞ் சேரநாற் சாமமெரி
கைதனத்திற் சுன்னமெடு காண். 62

காண்கருப் புட்டி கவசமதிற் கொடுக்கத்
தோணாது வாயுதொல் மேகம்- வீணான
துர்நோயா வுந்திரும் தூயசுன்ன மாயிதுவும்
கருவாளி யானால்நீ காண். 63

வெடியுப்புக் கட்டுச் சுன்னம்

வெடியொன்று படியரையாய் வெந்தசட்டி யில்லுருக்கிக்
கெடிகெடியாய் மும்முறைகெ ணித்துருக்கித்- துடியான
தங்கநிற மாம்பதத்தில் தான்சாய்த் தகலூற்ற
பங்கமிலாத் தந்தமதாம் பார். 64

பாரானை தந்தம்போல் பளிங்கான விக்கட்டை
சேருநீ கடைப்புடனே தேனிலிட ஊர்வாயு
எல்லா மகலுமினி யநுபாநம் மறிந்தால்
பொல்லாத நோயோடுமிப் பூ 65

தாளக சிந்தூரம்

ஓதகம்போ லொளிமிகுந்த சுவாச காச
மோடுதற்குச் சிந்தூர முரைக்கக் கேளு
பாதகத்தைத்[1] தினம்பொடித்து வயச்சட்டி யிட்டுப்
பாருநீ சுகதுக்கப் பச்சிலைச்சார்[2] பெய்து
சாதகமா யுலையிட்டுச் சார்சுருங்கத் தேய்க்கச்
சாமிகுக னருள்தன்னாற் றளதளென வுருகும்
தீதகலப் பலகைதனி லிட்டுநன்றாய்ப் பொடித்துத்
தீங்குள்ள காசமெல்லாம் தீருநா ளீயே. 66

திரிநட்சத்திர பதங்கம்

மும்மகர மெற்சுண்ணம் முடிவா மிடைநிரதம்
கொம்மைமுலை மாதேவி குழன்முடிப்பூ- சிம்மம்
தலைநாலுங் கூட்டித் தான்கவசஞ் செய்துலர்த்தி
நிலைதீயின் மேலெடுக்க நீர். 67

நீறின சுன்னமின்னம் நீட்டித்தீ யைந்துதரம்
வாரியெடுத் தெரிக்கமா சுன்னமாம்- தேரியுண்
பாலர்முதல் சகல பாட்டனோ யாவுமினி
காலன்கால் கிட்டாது காண். 68

தைரிய நட்சத்திரக் கட்டு

சூரன்பூர மிரண்டுஞ் சுக்கரைத் தெழுவகையாய்ச்
சீர்கவசஞ் செய்தீபஞ் சேர்வட்டிட்- பார்சத்த
கேட்டவுடன் வேறு கெடிகவச மிப்படியே
வாட்டியெழு தரம்பார்த்து வை. 69

வைகட்டா மித்தை வாகநுபானம்அறிந்து
கைகுழந்தை யாவர்க்கும் கண்டிழைக்க- நையுநோய்
சட்டிசுட்ட கையதுபோல் சாருலைநீங் கியநோய்
அட்டியிலா தோடு மறி. 70

வெள்வங்கக் குரு

ஆகாயம் நட்சத்திரம் ஆகிய காடிகாரம்
வாகாய் நிறைசரியா யிவைபொடித்துத்- தீக்காய்ந்த
சட்டியில் மணலிட்டுச் சாரியதன் மேல்மருந்து
அட்டியிலாச் சீலைசெய் தறி. 71

அறிந்தடுப்பி லோர்சாமம் அதை யெடுத்து வேறுசட்டி
புரிலவண மிட்டதன் மேல்பொடிவைத்துச்- சரிசாமம்
இப்படிமூன் றும்மடக்கேற் றியெடுக்க வங்கமதில்
கைப்பிடிபத் தொன்றீயக் காண். 72

காணும் வங்கம்பத்தில் கட்டிச்சுன்ன மொன்றீயத்
தோணுமக்குவெள்ளி மாற்றெட்டாம் சோர்வில்லை- காருங்காண்
குருமுறை தப்பாது குணமாகச் செய்பவர்க்கு
வறுமையிலை நன்மையில்வாழ் வான். 73

சீன நட்சத்திர பஸ்பம்

நீர்க்குத்தல் வெட்டை நிலையில்லா தோடுதற்குப்
பார்ப்படிகம்' நட்சத்ரம் பகர்சமமாம்- நேரான
ஆவெண் ணெயிலரைத் தங்கியொடு ஜாண்புடமாம்
நீவெண்ணெயி லுண்டிடுவாய் நேர். 74

சூதவஞ்சக சிந்தூரம்

சூதசிந்தூ ரம்பலமாம் சொல்தயிரி யஞ்சமமாம்
பேதமறச் சுத்திசெய்து பேணிகல்வம்- சாதகமாய்ப்
பொடித்துநெய் தேனி லுண்ணப் பொல்லாவாயு மலத்தை
இடித்துப் பசியுண்டா மிது. 75

வெள்ளி சிந்தூரம்

இரசித சிந்தூர மின்புற்றுக் கேண்மின்
நிரைரூபா யெடைவெள்ளி நீயெடுத்து- அறவுருக்கிக்
குடுக்கைசெய்து சூதமலம் கொண்டடை தமரிட்டு
இடுவயக் கம்பியிதன்மே லீ. 76

ஈவா யதிற்கட்டி யிடுநாதஞ் சேர்பொடித்து
மாகுடத்தன் மத்தியிட்டு வாகதன்மேல்- தாவாமல்
மேற்குருக்கை கம்பியிட்டு மேற்கவசஞ் செய்தடுப்பில்
காலறிந்தோர் சாமமெறி காண். 77

காணுமிர சிதக்குடுக்கை கண்கொள்ளாச் சிந்தூரம்
பூண வவிழ்த்தெடுத்துப் பூசித்துத்- தோணுகின்ற
நோய்விலகுந் தேக நோவாது ரத்தவிர்த்தி
வாய்க்கினிது கற்பமிதாம் வை. 78

திரிசூதப் புகை

சிந்தூரம் பூரம் செயசூரன் விரடைசமன்
பந்து புரமெரித்தான் பாலிலரை- தந்துரவி
காட்டிப் பொடியெடுத்துக் காண்புளி பரணியனல்
வாட்டிபுகை கரணங்காட்ட வை.. 79

வைப்பா ரண்டப்புற்று வகைகெட்ட யோனிப்புற்று
நைமூலப் பவுத்திரமு நாணிடுமே- மையலினால்
வந்தவெட்டை கிரந்திமாறி விடுமிம் மகாபுகை
தந்தகுக னடிமலரைச் சார். 80

சர்வவிஷ ஜன்னிபேய்க்கு ஆக்கிராணம்

கண்டனைசுட் டந்நிறைக்குக் காணுஞ் சிவப்புக்காவி
ரெண்டையு மொன்றாய்ப் பொடித்து- மண்டைசுற்றும்
பித்தவிடஞ் சன்னிபிரமை பேச்சடங்கிச் சொக்கும்பேய்
கத்தவிடும் தேள்விடம்போங் காண். 81

பேய் நோயுண்டாகக் குளிகை

நாபிகௌரி வெள்ளை நாடரிச்சுக் கான்சுன்னம்
பாபினிலை சமனாய்ப் பார்மத்த- னிலைச்சார்
விட்டரைநீ குளிகைமணி வீதமிடு பகையாளி
கெட்டவர்க் கீடுகொடு கேள். 82

கேளாமது முதலாய்க் கேலியுரை பலநோயும்
வாளாயுத குடலை வாட்டுமது - கோளான
நீலியின்வேர் கியாழம் நீட்ட வியாதியிலை
கூலிகொடா தார்க்குக் கொடு. 83

நீரிழிவுண்டாக்கு மீடு

நீரிழிவுண் டாக்க நீபார் காட்டோணான்
பார்த்திலையைச் சாணிக்குள் பஸ்மித்துச்- சீர்மறந்த
போக்கிய நீரிழிவாம் பேதிக்கு மூடல்பற்பம்
ஆர்க்கிய நோய்போ மறி. 84

கருவங்கச் சிந்தூர பற்பமுறை

திருவாகத் தேகமது செப்பக்கேள் பஸ்பமொன்று
கருவங்கச் சிந்தூரங் கண்டெடுத்து- குருபஸ்பம்
இரண்டும் புகைநீரா லினியகல்வத் தரைத்து
இரண்டோட்டிற் சீலைசெய் திரம். 85

திரமாய் முழப்புடத்தில் தீதில்லா வெண்ணீராம்
உரமாய்ப் பொடித்தெடுத் துள்ளகுரு- பரன்பூசை
செய்நோய் பேய்மேகம் திசைவிட் டகன்றுவிடும்
கைகண்ட பஸ்பமிது காண். 86

காணும்வெட்டை பாண்டு கால்பிடிப்பு கிராணிரத்தம்
நாணுரண்டு மேகநற் கிரந்தி- பாணலிங்கப்
புற்று யோனிப்புற்றுப் பெண்ணா ணிருவர்க்கும்
சுத்தகரு வங்கபற்பம் சொல். 87

கருவங்கச் சுன்னம்

ஓரைந்து கற்பமது உறுதியா மிக்காயம்
நேரடிவிட்டைப் பழச்சார் நேரரைத்துக்- கார்வங்கம்
தகட்டிற்பூசி முழத்தின் தக்கபுட மிடச்சுன்னம்
செகசிற்றே ரண்டசுன்னஞ் சேர். 88

சேர்த்திரண் டொன்றாக்கி ஜெயநீரால் மையவரைத்து
வார்காசெடை கனமாய் மாவில்லைசெய்- நீர்காய்ந்து
முழப்புடமிட் டெடுசுன்னம் மூர்க்கவியாதி விலகும்
பழந்தேகம் பாலியமாம் பார். 89

ஆலாத்தி கற்பூர மிதின்வைப்பு வகைவிவரம்
பாரேழாங் காய்ச்சல் வெடியுப்பு பலமெட்டாம்- நேர்சூடன்
பாதியிட் டிரண்டுமொன்றாய்ப் பாரித் தரைமூங்கிற்
சாதிகுழலி லடைத்துச் சார். 90

சாலிநெல் வைத்தற்குள் தலைமூடி யோர்திங்கள்
பாலித் ததைப்பார்க்கப் பக்குவமாம்- சோலியலா
வாதவித்தை யாஞ்சூடம் வைப்பறிந்தோரின் வருகை
பாதகமெல் லாந்தீரும் பார். 91

கருவங்க பற்பம்

கருவங்க பற்பங்கா ணிப்போ துரைப்பேன்
கருவங்க மொன்றற்குக் கால்சாரம்- குருசுன்னம்
நீர்விட் டரைத்தப்பி நீள்கவச முழப்புடமாய்
கூர்வங்க மதையெடுத்துக் கொள். 92

கொள்குரு நீர்விட்டுக் கோதில்சிலா சத்துவெட்டிச்
சொல்லிரண்டு மாட்டியரைத் தோர்காசாய்- வில்லைசெய்து
காய்ந்துமுழப் புடமிடவே காசினியி னோய்விலகும்
தேய்ந்தவுடல் கர்ப்பவலு தேர். 93

தேள்விடந்தீர ஜயநீர்

கண்டன் கற்பூரம் சமன்கல்வ மதிற்பொடித்து
கொண்டுநல்ல நீர்விட்டுக் குலுக்கியதை- அண்டைகூட்டும்
தேள்விடத்தின் வாயில் தெரிந்தோர் துளிகைவிட
ஆள்சிரிப்பான் பார்த்தே யறி. 94

பூரபற்பச் சுன்னம்

நட்சத்திரம் சூதம் காசண்டன் ஒன்றரைக்கால்
பட்சிஜயநீரா லரைத்துப் பார்குகைவை- நிச்சயமாய்
மெள்ளவூ திப்புகையை மேலாகா மற்கனலில்
கொள்ளபூர பற்பமிதைக் கொள். 95

கொள்வாயு புண்வெட்டை கொடிய கிரந்திசூலை
நல்லதேக வெள்ளை ரண நாடாது- கொள்ளுமுன்னே
நோய்விட் டகன்றுவிடு நோயிலாப் பூரம்
தாயென்பார் மிக்கோர் தனி. 96

மேற்படி பற்பம்

சூதனரை வீரன்கால் சொல்பூர மொன்று
சீதஜய நீராட்டிக் கெடிகுகைவை- சாதகமாய்
வைபுகையா தூதி மறுத்தக் கினியில்லை
கைபாகம் வெள்ளைவருங் காண். 97

காணவிதை யுண்பார்க்குக் கால்பிடிப்பு வெட்டை
தோணுங் கிரந்திபுண் தூரம்போம்- பூணரிய
பாலர்யார்க்குங் கொடுக்கப் பத்தியமே யில்லை
ஞாலம்புகழ் பூரபஸ்பம் நாட்டு. 98

நீரிழிவு

தெங்கின்பாளை வாழைப்பூ சினத்தமாதுளை பாதிரி வேர்
பொங்குமுலைப்பால் புடமிட்டுப் புதியாவிமையம் மேல்தூவி
செங்கண்சிவந்த விதியாரே தேன்விட்டருந்த வல்லீரேல்
அங்கங்கெடுத்த நீரிழிவு மன்றேதீரும் கண்டீரே. 99

வீர சிந்தூரம்

பாறையில் பட்டசுப்புரம் பாகமிடை தைரியமும்
கார்கன்னி கலசப்பால் காட்டியரை- சீர்நிறமும்
பவளமிதற் கொவ்வா பதனமா யுண்ணோயும்
திவலையிலா தோடுந் திடம். 100

அயக்காந்த மெழுகு

மங்களமா யயமெழுகை மகிழ்வாய்க் கேளும்
மனிதருக்கு விடயமிஞ்சி ரத்தங் குன்றித்

தங்கிமலந் தீய்ந்து வயிற்றுவலி யுண்டாகித்
தணிவதற்குச் சரக்குவகை சமமாய்க் கேளு
அங்கியிட்ட எணவதுவும் அதன்தாயி வாறா
னழகுமிகு திரிகடுகு திரிப லாதி
பங்கமிலாக் கோக்கனிச்சார் ரெண்டு சாமம்
பதியவரை வகைக்குபதம் பலமாம் பாரே. 101

பாரேநீ பின்னாறும் பொடித்தெ டுத்துப்
பாங்குகருப் புட்டிமுட்டிச் சமமாய்ச் சேர்த்துச்
சாரேநீ நிறையவிட்டுக் குழைத்து எண்ணெய்
சரிபடிகால் விட்டெரிக்க மெழுகாம் நல்ல
வாரேநீ பூசித்துக் கழற்சி வீதம்
வார்மிகுந்துண் பார்க்குப்பத் தியமே யில்லை
மாறாநல் மனச்சுடரோன் கீரை சேர்க்க
வாயுமுதற் றீர்ந்திரத்த வடிவாம் பாரே. 102

பட்சவாத முதல் சகல வாய்விற்கும் மருந்து

விதிபிறந்த பதியதனைக் கண்டெ டுத்துப்
பிசரிசமன் கூட்டியிள நீர்விட் டரைத்து
முதிர்முளரி வித்தெனவே யுண்டை செய்
துரைக்கவினி யனுபான வுண்மை கேளு
ததியுரையா முன்பதியி லுரைத்தா யாகில்
தக்கதொரு பெருவாயு பட்சவாதம்
பதியைவிட்டு நரம்பெல்லா முறுக்க மேறிப்
பண்டுபோல் நடைகொடுக்கும் பரிட்சை பாரே. 103

பால சந்திரோதய மாத்திரை

காந்தரிப்பகை பொறிபூரம் தொடைகடையாதி
சாந்தமொன்றது அரையது மூன்றது சம்பீரம்
தேர்ந்தரைத்திடு மணியள வாகுமித னாமம்
சாந்த சந்திரோதயமிது வழல்நோய் தரியாதே. 104

காளி எண்ணெய்.

வாதாடுங்காளி வல்லாரைக் கண்ணியும் வறுத்தமுத்தும்
கோதாடுநெய்யு மிளநீரும் பாலும் குமரியன்னம்
போதா தெடைச் சமம்பூரஞ் சுமாரதில் போட்டருந்தச்
சூதாடும் வெட்டைகண மாந்தமேகந் தொலைந்திடுமே. 105

அஷ்டபாலக சூரணம்

இனியெடு நரம்புடன் மடந்தைமதி
டங்கண மினத்துடன் கருஞ்சீரகம்
இன்பமுட னொவ்வொரு வகைக்கு வொரு
வராகனெடை யிடமான தந்தியதிலே
தனியெடு இரண்டுடன் வராகனெடை
தகர்த்திடி தூள்செய் ததில்
தகா துவர்ப்புக்கா யிரட்டிப்பு
சேர்த்திட்டுத் தானரை யிரண்டுசாமம்
கனியெனப் படர்பொடி யநுபான மதுவதில்
கண்டுகொண் டேயருந்து
கனமான மலஜலம் கபகாச மீளையும்
கதி த்திடு வாதங்களும்
பனிமேக மூவேழு மறு பத்து நான்குசுரம்
பாலர்க்கு வருநோய்களும்
பறக்குமே பொடியிது அஷ்டபாலக சூரணமெனப்
பண்டிதர்க் கருள் செய்ததே. 106

குறிப்பு:-
இனி- சூதம் - நரம்பு - கந்தகம் - மடந்தை - தாரம்
டங்கணம் - வெங்காரம் மதி - இந்துப்பு.
தந்தி -வாளம். துவர் - கடுக்காய்.

பஞ்சசூத உப்பு

உப்பில் பஞ்சசூத முரைக்கக் கேளு
தப்பில் வெடிகரி கல்லுதானிந்து - அப்புநீர்
ஐந்தாம் பிருதிவப்பு ஆனதேய்வாய் விண்ஏமற
சொந்தமுடன் கண்டறிந்து சொல். 107

முப்பு ஜெயநீர்

கார ஜெயநீர் கைபாகமாய்க் கூறுவேன்
நாரம் பனிரெண்டுபடி நற்பூநீர் - சேர்நிறைகேள்
இரண்டரையாஞ் சீன மெழிற்சிப்பிச் சுன்னமிவை
கூறிசே ரென்றேகால் குணம். 108

குணமாய் மூன்றும் பொடித்துக் கொண்டுமெரி
இளஞ்சிறுநீர் குறுணிவிட் டரைத்துக் - கனபூமி

புடமூன்று நாளிருத்திப் பின்னெடுக்க வேகொதிக்கும்
திடங்கார ஐயநீராந் திண். 109

திண்ணான விச்சயநீர் தேகந்தீண்டிற் புண்ணாம்
வண்ணா னிதின்பரீட்சை வகையமுக்கை - கண்ணாகப்
போட்டெடுக்கத் தின்றுவிடும் பூதசரக் கானவெல்லாம்
நீட்டுமு னெண்ணெய்நீங்கு நீர். 110

நவலோக மாரண மெழுகு

நாதம் சூதம் சாரம் நல்லவெள்ளை சீனம்வெடி
தீதில் வீரம்பூரம் தெரிந்தெட்டும் - ஓதுநிறை
சமமாகச் சம்பீரச் சாற்றிலரை மெழுகாய்
எமனாகும் லோக மிடு. 111

இடுலோகஞ் சமன்மெழுகை யேற்றித் தகட்டிற்பூசி
நடுமுழப் புடமிடவே நவலோகம் - படுபற்பம்
கெந்திசமன் வீரம்கள் கெனிதபழச் சாற்றில்முழும்
முந்திபுட மிடப்பற்ப மாம். 112

உண்டால் சகலவித முறுநோயா வும்விலகும்
கண்டா ரதிசயிப்பார் காயமது -நன்றாகும்
பத்தியமே யில்லை பாலர்முதல் ரத்தமுண்டாம்
சுத்திபற்பம் தேகபற்பஞ் சொல். 113

லோகமாரண சுன்னம்

அறவுமண் களின்நாதம் அரவிந்து மடையன்நான்காம்
ஒருபதம் பதமரைக்கா லொன்றதாய்ச் சேர்த்துக்கொண்டு
வருகுங்கோ ளரிமுன்நீரில் வார்த்தரைத் திட்டுவில்லை
எருவினில் புடத்தைப்போட் டெடுத்திடச் சுன்னமாமே. 114

ஆகுமிப் படியேவங்கம் அயமுதல் லோகமெல்லாம்
போகுமே நீறதாகும் பொன்னிதில் விளையுஞ்சொன்னேன்
பாகமாய்ச் சுருக்கறிந்து பாங்கதாய்ச் சுத்தித்தோர்க்குத்
தாகமாய் ரோகநீங்கித் தயிரியங் கற்பமாமே. 115

அறுவகை சங்கத் திராவகம்

பொட்டிலும் வளையலுப்பு பொருந்திய சீனக்காரம்
இட்டமாய் வெங்காரந்தா னியல்நவாச் சாரமைந்தும்

கட்டளை யாகச் சேர்த்துக் கருதியே மயேந்திரத்தில்
திட்டமாய் வடிக்கச்சங்கத் திராவ மீதென்பாரே. 116

மகாசங்கத் திராவகம்

வெடிமதி சூர்மம்சாரம் விடமன்ன பேதிநீலி
படிகிபூ நாதநீறும் பலம்பொறி காரமீதோ
டரிதிரி யுபயம் ஏகம் ஐயரைக்காலோ ரையங்கால்
பதவுரைக் கால்மூன்றேகம் மறைபொடி படுவதாக
அதைவளை கடமுமீது அதில்வறு மைந்தோ டாறு
இடைவெளி தைலமாகு மிவைவரும் வாறுபோல
தரமதில் நீர்கள்சோறும் தனித்தனி லோகம்தாது
உரமுட னீரதாகு முபரசம் நீறிப்போகும்
மார்வலி அஷ்டகுன்மம் வலியொடு மேகஞ் சங்கம்
நீரினி லனேககோடி ரோகங்கள் நீங்குந்தாமே. 117

பாண்டு, மகோதரம், வீக்கம், நீர்க்கட்டு இவற்றிற்கு சலமஞ்சரி சிந்தூரம்

சலமஞ்சரி முறைகேள் சண்டைவெடி நான்குபலம்
கல்நார் மதஞ்சத்து காந்தமயம்- நல்கெந்தி
காரஞ்சீனஞ் சாரம் கற்காவி சங்குபொடி
பார்விரடை யிரண்டு பார். 118

பார்பொடி யுருக்குப் பாகமதில் கட்டிவிட்டுச்
சார்பாயிஞ்சி தேன்வெல்லந் தனிற்காசு- நேரிடையாய்த்
தாக்கு இருநேரந் தங்காது பாண்டுவர்க்கம்
வீக்கமுந் தீரும் விரும்பு. 119

அயவீர தசாங்க சிந்தூரம்

கரிய லோகந் தயிரியம் காண்த சாங்கமுடன்
அரிய சிந்தூர மறிகுகனி- கரியுலகு
பலமொன்று மீனாட்சி பட்சமுள்ள மைந்தனொன்று
கருகுமரி நீராற்கரை. 120

கரையவரைத் தேரவியிற் காய்ந்துகண் சட்டிதனில்
முறையாய்ப் புகையடங்க முன்வறுத்து - வுறவரைத்து
எடுக்கச் சிந்துரமா யிதைப்பூசித் தினிகேள்
கொடுகடுகு திரிபலாதி கொள். 121

கொள்வால் மிளகொடு ரோகணி தந்தி
விள்வா யதிமதுரம் விரடைவகை- அள்ளிடித்துச்
சூரணத்தில் கோகனிச்சார் சூட்டியரை யொருநாள்
காரண சிந்தூரங் கல. 122

கலக்கு முறைகேள் கனபடைசூ ரணம்பத்து
கலசிந் தூரமென்று கலந்தரைத்து- நிலைபூசித்
துலகில்பல வாய்வுமுடல் விஷபாண்டு குன்மம்
குலைகுலைந்து போம்பார் குணம். 123

குணமாம்பத் தியமில்லை கூசாமல் பிணியுண்ணக்
குணமாய் மலசலநோய்க் கூடகலும் - பணவெடைதேன்
கூட்டியுண்ண ரத்தவிர்த்தி கூடுந்தாது பலமாம்
நாட்டிமண் டலமுண் நரை. 124

நரையாவும் வாராது நற்றேகம் தான்கனகம்
முறையிருநே ரமுமுண்டு முனையில்வரத்- திரையகன்று
மால்மகனாய் வாழ்வாய் மாட்சிமையா யிவ்வுலகில்
கால்பலமாம் போகமுண்டு காண். 125

வீரச் சுன்னம்

எழுதாதி யம்பலத்தைக் கலசஞ் செய்து
எழிலைந்து பூதத்தி னடுவே வைத்துப்
பழுத்தபின்பு மீனாட்சி மைந்தன் தன்னைப்
பாய்ச்சிவிட்டு மேல்சட்டி கொண்டு மூடு
வழுத்துகின்றோங் கடுங்காரச் சுன்ன மாச்சு
மாநிலத்தில் முப்புகுரு விதற்கீ டல்ல
சுழுத்திவிடா ஞானிமகன் செய்வான் பாரு
தொண்டை கட்டுஞ் சிலேத்துமநோய் தொலையுமன்றே.126

இந்துவர்ண மெழுகு

விந்துவிந்து சிந்தூரநாதமொடு வீரமானசிவகாமி மால்தேவியும்
வெள்ளைசிங்கி நட்சத்திரம்பகரும் வீறு மாண்குறியு மெட்டபின்
சொந்தமான முருகன்புராண மரிதூபதீபமது சமனெடை
சுத்தியாவதிலை பாருபாருபரி சுத்தமான கலுவத்திலே
சிந்தைகொண்டு பதினான்கு மொன்றுபடச் சேர்த்தரைத்துவிடுதூளதாய்ச்
சீக்கிரத்திலிருநாதமாமதனை சேருநாதகருத் தைலமாய்
முந்தவிட்டு மொரு சாமநாலுமரை போதுமாமெழு குளுந்ததாய்
மோசமின்றிப் பனைவெல்லமாகுபெற ஓங்குபத்தியமு
மில்லையே. 127

இல்லையில்லைகப வாதசந்நிசுர மெட்டுகாசமொடு குட்டமும்
ஏறுகின்றவிரை வாதசூலைரண வீளைதோஷவட்ட குன்மமும்
சொல்லுகின்றதொரு மாரடைப்புநெடு சூதகத்தொடு மகோதரம்
சோகைமஞ்சட் காமாலைசத்திவயிற் றொல்லைபோக்கொடு
பவுத்திரம்
கல்லடைப்பு குலைவலி கிரந்திபுரை கண்டமாலைசல தாரையில்
கண்டநீரிழிவு குத்தலானமுகிற் காசரோகமுத லானவும்,
எல்லைவிட்டெழு கடல்கடந்துபிணி என்னபாடுபடு மறிகிலேன்
இந்துவர்ண மெழு குகந்தநாளுமுயி ரெண்ணலாகுமிஃ
துண்மையே.128

உண்மையுண்மை தாயுரைத்த வுறுதிதன்னைப் பாரடா
உற்றதோர் சரக்குகட்கு முரியசுத்தி கேளதை
தண்மையான தில்லைதன்னில் நானுரைத்தேன் முன்னமே
வண்மைதன்னை நீயறிந்து வலிவுதள்ளி யுறவதாய்
நன்மையாகச் சேர்த்தரைக்க நல்லசாஸ்தி ரங்களாய்
எண்ணமிட்டுக் கவலைகொள்ளா திம்மருந்துசெய்துகொள்
கன்னமிட்ட கள்வர்போல எண்ணமிட்டுப் பற்றிநிற்கும்
வின்னப்பட்டு வியாதியெல்லா மெய்யைவிட்டு ஓடுமே.129

ஓடுதற்குத் தாயைப்போற்றி யுன்னகத்திற் பூசைசெய்
வாடிடாதே யப்பனே மனதுள்ளே பணிந்துகொண்டு
பாடுபட்ட மெழுகதைப் பகரும்போது பத்தியம்
பகருகின்ற கடுகுமஞ்சள் மச்சம்வற்றல் திலதநெய்
சாடுபிரம பத்திரம் சனியன்மாயை மதுவொடு
போதுநீக்கி நீயந்தப் பிணிகளா லுழன்ற ஆவி
கூடுவிட்டுப் போனஜீவன் மீண்டுவந் துடல்புகும்
தோடணிந்த வீசர்பாதம் தொண்டுசெய்து கண்டுகொள்.130

கண்டுகண்டு தேருதற் காசான் வேண்டும்
....
பண்டுசெய்த நல்வினையு மீள வேண்டும்
பண்பான ராசியொடு கிரகம் வேண்டும்
தொண்டுசெய்து பெரியோரைப் பணியவேண்டும்
துஷ்டருட நேசத்தை நீக்க வேண்டும்
வண்டுநிகர் குழல்மாது வாலாம்பிகைப் பெண்
வாஞ்சையற்று நீதவங்கள் பண்ணு பண்ணே. 131

திரிமூர்த்தி தீபம்

பண்ணிப்பார் மாமரத்தின் படிகங் கேளு
பலமொன்றாம் கடிதடத்துக் கிறைவனவ் வாறு
கண்ணிழந்த பகவானும் புஜண்ட ரோசை
கத்திவெட் டுக் காரனந்த னிடையே றாகன்
எண்ணியே பசும்பாலில் மூன்றாந் தம்பி
எடுத்துக்கொள் பலமொன்றாய்ச் சேர்த்த ரைத்துப்
புண்ணியமாய்த் திரிமூர்த்தி தீபங் காட்டில்
போகாத நோயெல்லாம் போகும் பாரே. 132

நோய்போக இன்னமொரு வீரங் கேளு
நுணுக்கமாய்த் திரிமூர்த்தி தீபம் போடு
காய்மாறிக் கனிந்தபழம் போலே யப்பா
கசடறவே நோய்களையுஞ் சண்ணுஞ் சண்ணும்
தாய்ப்பாலைக் காணாத சேயைப் போலத்
தளர்ந்துவிடும் நோயினுட வலிவு தானும்
பேய்பூதம் பில்லிமுதல் சகல ரோகம்
புகைபட்டால் போகுமடா கண்டு தேரே. 133

ஜலதோஷங்களுக்கு வெங்கார மாத்திரை

வெண்பலித்திடு டங்கணத்தரை வேகபூரிய தேகமாய்ப்
பெண்ணுரைத்திட ரக்கரித்திவம் பேசுமுந்திய திரட்டியாம்
கண்கவர்ந்திடு விருசகண்டமரைகடியமாடநிறை சுட்கமாய்ச்
சண்ணுமேசுர வாத தோஷமல சகலரோக அஜவியாக்கிரமே.134

கேசரிக்காய் லேகியம்

ஆதிசிவன் வேதன்விஷ்ணு ஐவர்பதம் போற்றி
மேவியெனை யீன்றெடுத்த மேன்மையாள்- சோதிமயம்
அம்பிகையாள் பாதமதை யன்பாய்த் துதித்தேத்தி
நம்புமோர் லேகியத்தை நாட்டக்கேள்- வம்பில்லா
அம்பிகையாள் தன்னுடை பருங்கனியிற் சதமும்
நம்பிக்கை யாய்ப்பிழிந்து நாட்டக்கேள்- சம்பிரமதாய்க்
காண்டம் வடிகட் டிக் கல்மிஷமெல் லாம்போக்கித்
தாண்டவனார் சர்க்கரையைத் தான்கலந்து - ஐந்துபலம்
வலிய அடுப்பேற்றி வகைஜாதி யோர் விறகால்
சலியாம லேபாதி தான்சமைத்துப் - பொலிவான
கடையின் சாக்கைக் கணக்கா யுரைக்கக்கேள்

படியிலுளோர் கொண்டாடும் பார்மிளகு - துடியாக
நற்சீ ரகமிரண்டும் நாடும் பலமாகும்
பொற்கோஷ்டம் சுக்கு புகழ்பெரிய- கற்கம்
திப்பிலியுந் தாளிசமுஞ் சேர்ப்பாய் வகைக்குவகை
தப்பிதமே யில்லாமற் சாற்றக்கேள் - திக்கெனவே
விராகனெடை யாமேவுஞ் சாதிக்கா யதுவும்
வாறா யுரைத்தபடி வாங்கியே -வேதம்
ஜாதிபத் திரியுஞ் சமசமமாய் வாங்கிப்
பொன்போல் வறுத்ததனைப் பொடிசெய்து- சீலைதனில்
வடிகட்டிக் கொண்டு வைத்துமது ரச்சரக்கைத்
தனியாக வேபொடித்துத் தான்கூட்டித் - துடியாகப்
பாகதனிற் றூவிப் பற்றாம லேகிண்டி
வேகமுடன் கீழிறக்கி வெண்சாரை - நெய்யதனைத்
தாகமா யைந்துபலம் தான்விட்டுக் கிண்டியதைக்
கேவலமென் றெண்ணாதே கேள்மகனே - ஓதுகிறேன்
ஆதிவிக் நேஸ்வரர்க்கு மம்பிகைக்குஞ் சண்முகற்கும்
நீதியாய்ப் பூசையது நீசெய்து - சத்தியமாய்ப்
பாக்கள விருநேரம் பண்பாகக் கொண்டுவர
நோக்கிச்செல்லும் வியாதிதனை நுகரக்கேள்- சாக்கியமாய்ப்
பித்தமது நீர்ப்பதும்போம் பெலத்த கிராணியும்போம்
பத்தமில்லாச் சோகை பறந்தோடும் - சித்தர்களின்
பாதம் வணங்கிப் பகர்ந்தே னுலகோர்க்குச்
சாதகமாய்ப் பண்டிதர்கள் தாம்பிழைக்க -ஓதியதோர்
லேகியத்தின் பெருமை நோயாளியே யுணர்வான்
சாதகமாய்க் கண்டு செய்வாய் தான். 135

ஞானவிர்த்தி

பண்ணுவது பெரியோர்க்குப் பாதபூசை
பரிவாகச் செய்தவர்கள் மனம்பூ ரித்துக்
கன்னல்மொழி மாதுமையா ளருளுண் டாகக்
கருணையுட னவர்களுப தேசம் பெற்றுச்
சொன்னமொழி தவறாம னிலையி னின்று
சூட்சாதி சூட்சமெல்லாஞ் சுருதி யாய்ந்து
விண்ணவர்கள் கொண்டாடப் போகத் துற்று
வேதாந்த நாயகியை விரைவில் காணே. 136

காணவென்றால் வாசிவச மாக வேண்டும்
காசினியில் தலங்களெல்லாங் காண வேண்டும்
தோணாத சூட்சமெல்லாந் தோண வேண்டும்
சொன்னதுபோல் வாசிதொழில் செய்ய வேண்டும்
நாணாம லின்பதுன்பஞ் சரியென் றெண்ணி
நானிலத்தோ ருனைக்கண்டால் மதிப்பு மெய்தக்
கோணாமல் ஞானமது கொழுந்தோடிப் படரும்
கோதையர்மே லாசைவிட்டுக் குருபரனை நாடே. 137

நாடுவது மொருமனதாய் நடனஞ் செய்யும்
நாயகத்தை நன்னினைவாய் நாடியேதான்
காடென்றும் வீடென்றும் மலைக ளென்றும்
கழிநதிகள் சுனைதோறும் தலங்க ளென்றும்
பாடுபட்டு மனமலைச்சல்பட் டுழல வேண்டாம்
பாழ்மனதை யோர்மனதாய் நிலையில் வைத்துக்
கூடுதனைச் சுமந்தலைக்கும் பரம நாதன்
குருபரனை யனுதினமுங் கூர்ந்து நோக்கே. 138

நோக்கியிந்த வுடலுயிரை யறிந்தா யாகில்
நொடிக்குமுன்னே யஷ்டசித்தி கைக்குள் ஞானம்
பாக்கியவான் நீயாவாய்ப் பரமு மாவாய்
பத்தர்முத்தர் சித்தரையும் பார்ப்பா யோகம்
வாக்கில்வரும் பொருளெல்லாம் திரம தாகும்
மனவாக்குக் கெட்டா மௌனம்வாய்க்கும் மாய்கை
நீக்கியுன்னைக் கண்டாலும் விலகி யோடும்
நிராதாரப் பெருவெளியாம் விண்ணைப் பாரே. 139

விண்ணென்றா லகாரமடா மேவிப் பாரு
விளங்குபஞ்ச பூதமதி லொடுக்கம் பாரு
மண்காற்று நெருப்புசலம் வெளியோ டைந்தும்
மாபூதம் தனியாகத் தொண்ணூற் றாறும்
திண்ணமுடன் கருவிகர ணாதி யெல்லாம்
தேவர்முதல் மானிடர்க்குஞ் சேர்ந்தொன் றாகும்
நன்னயமா யிருவர்க்கு முடல்வித்தி யாசம்
நான்சொல்வேன் விவரமதை யறிந்து கொள்ளே. 140

கொள்ளவே ஸ்தூலமென்றுஞ் சூட்ச மென்றும்
கூறுவார் சாஸ்திரங்கள் குணம்வே றாகக்
கள்ளமில்லாச் சூட்சவுடல் தேவர் தேகம்
கனமான ஸ்தூலவுடல் மனிதர் தேகம்

விள்ளவென்றால் தத்துவ நூல் பரிசோ தித்து
வேதாந்த ஆசானை யடுத்துக் கேட்டால்
தெள்ளமுதம் போலவவர் தெளிவாய்ச் சொல்லிச்
சிந்தைதனி லுள்ளவெல்லாந் தெரிவிப் பாரே. 141

தெரிந்துகொண் டதன்வழியிற் செலுத்திச் சிந்தை
திடம்பெற்று மௌனமுற்றுத் தேசி யேறிச்
சரியென்று மதியதனை ரவியிற் சேர்த்துச்
சாயுஜ்ய பதமறியத் தவவேடம் பூண்டு
நரிதந்திரம் பரிவேகம் நயந்து கொண்டு
நாராசமென்ற மேல்வாசல் வழியைக் கண்டு
தரியலர்க ளென்றபகை வேரைக் கெல்லித்
தாய்பதத்தை யெந்நாளும் தனித்துப் போற்றே. 142

தனித்திருவென் றுனக்குரைத்தேன் மகனே கேளு
சங்கைநங்கை யற்றுமனம் தனிவே றாமுக்
கனிரசம்போ லினித்தறிவை மேலே நோக்கிக்
கசடுற்ற தத்துவத்தைவே ரறுத்துக் கீழாய்ப்
புனிதமுள்ள வறிவதின்சொல் மனமதுதான் கேட்கப்
போதத்து அவிவேகப் பூட்டதனை யுடைத்துப்
பனிபறக்கும் வாறதுபோல் மனச்செயலைக் கெடுத்துப்
பருதியென விவேகமதைப் பாவித்துப் பணியே. 143

ஞானம் - சிவவாக்கியம்

பணியபூசை செய்யுமென்ற பான்மையை யறிந்திலீர்
கணியவே மனதுருகிக் காணவேணு மறிவதைத்
திணியவே திடத்துடன் சிவனையறிந்த வேரைவிட்டுச்
சனியனான மாய்கையும் தலைதெரிந்து ஓடுமே. 144

ஓடுமே வினைகளெல்லா முடலைவிட்டு அப்புறம்
காடுமே சுற்றிசுற்றிக் கண்கலக்கப் படுவதேன்
வீடுவிட்டு வெளியறாத விமலியை யறிவிரால்
பாடுபட்ட கூலியும்கை பலிதமென்று காணுமே. 145

காணலாகுந் தாயையும் கருத்தையுள் ளிருத்தினால்
பூணலாகு மஷ்டசித்தி பொன்னுலக போகமும்
தோணலாகு மஷ்டதிக்கு சோடச திசைகளும்
வேணலாப முங்கிடைக்கும் மெல்லிபூசை கேளுமே. 146

சத்திபூசைச் சக்கரம்

கேளடா வென்தாயார் பூசை தானும்
 கேவலமே யல்லவடா கெட்டி கெட்டி
நாளடா வறுகோணங் கணக்காய்க் கீறி
 நன்மைபெற வதின்மேலே வட்ட மிட்டுச்
சூளடா பதினாறு இதழு மிட்டுச்
 சொகுசுபெற வறுகோண மத்தி தன்னில்
வேளெரித்த சிரம் போலைங் கோண மிட்டு
 விதமாக மேல்வளைய மிதழ்பனிரெண் டாமே. 147

ஆமடா ஐங்கோண மத்தி தன்னில்
 அடைவாக வட்டமிட்டுத் திரிகோண மிட்டு
காமடா திரிகோண மையந் தன்னில்
 நலம்பெறவே விந்திட்டு ஏகம் போட்டுத்
தாமடா மேல்கீழும் வாலை பீசம்
 தனைவரைந் தைங்கோண மதனிற் கேளு
போமடா பஞ்சகர்த்தர் தம்மை நாட்டிப்
 புகழ்பெறவே யறுவரையு மதன்மேல் நாட்டே. 148

நாட்டுவாய் மேல்வளைய மூன்று மிட்டு
 நலமாகப் பூரணையா யிதழை நாட்டிப்
பாட்டிலுள்ள படியேதா னைம்பத் தொன்றும்
 பக்குவமா யிதழதனில் எழுத்தைப் போட்டுக்
கோட்டை யது போலாக மூன்றுவரை கீறி
 கோணாமல் வாயிலது நான்கும் விட்டுத்
தேட்டமுட னஷ்டகஜ மஷ்ட நாகம்
 தீவிரமாய்ப் பாலரொடு தெரிந்து நாட்டே. 149

தெரிந்திடவே பஞ்சபட்சி பஞ்ச மூலம்
 தேகமென்ற அஷ்டசத்தி வடுக னெட்டும்
பொரிந்திடுவாய் நாற்புறமும் கணபதியுங் கந்தன்
 புகழ்பெரிய சண்டிகேசன் தட்ச ணாயன்
சொரிந்திடுவா யவரவர்கள் பீசந் தன்னைச்
 சோர்வுபடாக் கிரந்தவட் சரத்தா லிட்டுத்
தரித்திட வே யந்திரமோ தகடு தங்கம்
 தண்ணைபெற மூலவகை சாற்று வேனே. 150

சாற்றுகின்றே னெனையீன்ற வாமி வாலை
சாம்பவியாந் திரிசூலி மகிடற் காய்ந்தாள்
காற்றினிலு மதிவேக மாய ரூபி
காணவென்றால் மாற்றுயர்ந்த தங்க மேனி
போற்றிடுக்குஞ் சடமெல்லா மவளே யல்லால்
பின்னையொன்று மில்லையில்லை பேணிப் பாரு
கூற்றுவன்றன் கொடுமைதனைக் கெடுப்பா ளாத்தாள்
குணமுடையோர் தங்கள் குல தெய்வங் காணே. 151

காணவே திறவுகோல் முப்பதுங் கரிசற்காகும்
கன்னியுட மூலமுதல் கருவெல்லாங் காணும்
தோணவே கொங்கணவர் நடுக்காண் டத்தில்
தொகைவிவரஞ் சக்கரத்தி னுணுக்கஞ் சொல்வார்
ஆணவத்தை யொழித்துவா சானைக் காத்தால்
அவர்சொல்வார் யந்திர வடக்கம் ராா
பாணம்போல் பாடிவைத்தேன் கரிசல் தன்னைப்
பாருலகில் நூற்றைம்பத் தொன்று முற்றே. 152

யூகிமுனி கரிசல் - 151
முற்றுப் பெற்றது.

தேவிபாதம்.

யூகிமுனி கரிசலை முப்பத்தாறு

துதி

உமையவள் பதமல ரடியிணை சிரமேற்
றமியனு மநுதின நினைவினி னினைவாம். 1

காமனை யெரிசெய்த வாமனை நினைவில்
சோமன் பதமல ரிணைநீ துதியே. 2

மூவைந் தொகைவகை முனியரு ளியசொல்
பாவைச் சுருதியிற் பதியரு ளியதே. 3

வாதமு மநுதினம் வகையது பாராய்
நீதிசேர் ஞானமு நிலைபடு முன்னே. 4

பாயிரம் - அகவல்

உடலுறு கருவியி லுதித்த வியாதிகள்
திடமதா யகல விளங்கொளி யவிழ்தம்
யாவையும் விளக்க வவிழ்த பாகமும்
கோவையாய் மொழிகள் குணமுள முனிவர்
பகர்ந்தது ஜைமினி பகரவே சுருக்கி
முழுவது முனிவ ரருளிய மூவறு மொழியே
குணகடல் குமரி குடகம் வேங்கட
மெனுநான் கெல்லையி னிருந்தமிழ் யாவரு முணர்ந்தோர்
தொகைவகை விரியி லருள்கெனத் துன்னா
றிகலற முந்நூல்
பெருகவே சுருக்கிப் பலமுள நூலாய்
தன்மத வாரணந்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்
கருங்கடல் வெண்குடைக் கார்நிகர் பொதிகைத்

திருந்திய செங்கோற் சீயகங்க
னருங்கலை விநோத மார்பன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே வைத்தியத் திந்நூற் சூத்திரம்
பெயரென வகுத்தனன்.
பொன்மணி பொதிகை மஹாமுநி யருளிய
கரிசலின் முந்நூற்
சுருக்கியே குருமுநி சொன்ன சூத்திரம்
ஜெகதல மானிடர் செய்யும் வைத்தியம்
தொகை வகையாகத் துரிதம துரைத்த
மகாவித சூத்திர மறைப்பையுந் துறந்து
ஜெகமூ துரைபோற் றெளிடந்திட னன்றே. 1

சற்சீடரியல்பு

பாலுடன் கலந்த நீரதைப் பிரித்துக்
குடித்தது போல வன்னமா ணாக்கர்
ஆவு தண்ணீ ருண்டது போல
ஏவல்மா ணாக்க ரிருக்கவு நன்றே. 2

அசற்சீடரியல்பு

கிளிபோற் பேசும் சீட ராகாத்
தூறினி லுடைந்த குடநீர் போல
சீறிய சீடன் சிந்தையு மாகா
எருமை குழப்பி நீரது குடிக்கு
மமையாச் சீட னவனுமே யாகா
சிரித்தல் சோம்பல் மானமாய்ச் சொல்லல்
காமி கள்வன் பிணிய னேழை
பிணக்கன் சினத்தன் றுயில்வோன் மந்தன்
தறுகணன் சாத்திரந் தடுமா றுளத்தன்
கேட்டான் பாவி புறட்ட னின்னோர்க்குக்
காட்டார் சாத்திரங் கொடுக்கார் நூலே. 3

இந்நூலிற் கூறிய பொருள்

களங்கம் பஸ்பம் சிந்தூர லேகிய
முளங்கொளு மெழுகு முறுதியாந் தைலம்
சுன்னங் கிருதம் பதங்கந் திராவக
நன்னய மாக நவின்றனர் முநியே. 4

மாரசம் ஜயரச மயமான சாரசம்
யோரசம் சண்ட ரசமது சொல்லல்
பாத ரசமும் பகர்வீர ரசமுஞ்
சாதனை யயரசஞ் சரக்கிலே சேர்க்கலே. 5

மந்திரம்

பீஜ மிலக்குமி பீஜ நமாவென
வியாதிநா சாஞ்சனி பிணிகள் நாசனீ
யோகிநி வேதாஞ்சநி உருத்திர நாசனீ
சத்துரு நாசனி சங்கிலி ஓமென
வித்தையி லாஞ்சனி விடுத்திடப் போகுஞ்
சிந்தையி னினைத்த தெல்லாந் தந்தருள்
விந்தையாம் லோக மாதா வென்ன
முந்த வுரைத்திட மருந்துகள் சித்தி
அஷ்ட தந்திர அஷ்டவித் தைகளுஞ்
சிஷ்டர் புரிந்தால் ஜெயசித்தி யாகுமே. 6

இரசங் கட்டும் வகை

அரன் பீசங்கட்ட வறைகுவன் கேளு
திரமான விரதம் ஜெகஜால வித்தை
யாகுமே கட்டி லருளாய வானந்தம்
சோகுமே மணியே துப்புற வாகச்
செய்தாற் பலனாம் ஜெயமாக வித்தை
பையவே கேளு பலிப்பதா மந்திரம்
மருந்துகள் சித்தி மஹாவித மாகும்
அருந்தவே ஜெபித்தா லடைவாய்ச் சித்தி
ஆமே சொல்வே னடைவுடன் கேளு
மதிபல முருக்கி வகையாய்க் குகையில்
அதியவே யிலுப்பைநெய் யடைவாக விட்டு
யெரிகையி லிரத மின்பமா மதியின்
தரிசின மாகச் சிக்கவே யிட்டுப்
பத்தி யெரியப் பதமாக விட்டுச்
சித்தியாய் ரசமதில் சேர்ந்துமே யுருகும்
பெருங்குகை யாகப் பிலக்கவே யிட்டு
வருங்குகை தன்னில் வளமாய் நெய்யை
யிலுப்பை நெய்யை யிதமாய் விட்டுப்
ப்ருகவே துரிசைப் பதமாய்க் கரியில்

ஊதிடநீறு முறுதியா யெண்ணெயில்
நீதியாய்க் களஞ்சு நேருள குகையில்
போட்டுமே கடையில் போக்கோ டெடுத்து
நீட்டுமே வுண்டையாய் நேரா யிடவும்
மிச்சம் பழத்துளே மிதமாய்ச் செலுத்தி
நச்சர வாக நாடியே நூறு
புடமிட யிறுகும் போக்கொடு கேளு
நடமிடப் புடமிடு நாட்டியே விசைவிசை
யொவ்வொரு பழத்தி லூதுமே யொருதரம்
கவ்வவே புடமிடு காட்டநா லெருவில்
கரியி லுருக்குக் கனமுள மணியாய்ப்
பரியவே யிருபத் தொருமணி செய்து
தமரது விட்டுத் தாழ்வடங் கோத்து
அமரவே ஜபங்க ளாதியாய்ச் செய்து
அக்ஷரஞ் செபிக்க ஆதியாய்ச் சித்தி
நிச்சய மாக நீடுழி கால
மிகுந்திடச் சித்தி யியல்பாய்க் கேளு
பொருந்து வினைகள் போக்கோ டேகும்
எல்லாஞ் சித்தியா மியல்புட னன்று
சொல்லால் முனிவர் சொன்னது சூத்திர
மெல்லையில் வாழு மின்பமா மனிதர்
செய்துமே வைத்தியந் திரமுடன் வாழ்வீர்
பையவே மாமுனி பகர்ந்த கரிசலின்
முந்நூற் றறுபத்து நான்குசூத் திரத்தைச்
சின்னூ லாகத் தெளிந்திடப் பாடி
வாத வைத்தியம் வகையுடன் பாரே
நாதனார் சொன்ன நன்மா முனியே. 7

வீரரசபதங்கமும் - அதனாற்றீரும் வியாதியும் வண்ணம்

வீரரச மேயொரு சேரெடு நீதழ
லுப்பொடு செங்க லிட்டெரி கடமதில்
பருவந் தனிலெடு பணவெடை மதுவிடு
திரிவ மனாளத் திரிதனில் வெகுநோய்
அறிகுண நயமிது வபயம் நோயறு
மதிவெகு புண்புரை வயிற்றுவலி கூறாம்

படுவரை யாப்பு பரிகெடும் வெகுரண
மதிசய க்ஷயமீளை யாதியா நோயறும்
பதிவலி மேகம் படுமுறை திரிநாள்
கடல்புகு நோய்கள் கதிபெறு ரசமதில்
ஈறது கட்டில் கருவே
லறுகு முளகுட னதில்வெகு கியாழமாய்
வைத்திடு கொப்புளி வீறது அடிபடும்
செயசய புளிபுகை யிலையது வகல
நயமுள பாத ரசமது பற்பங்
குறுமுனி யருளிய மொழியது பாரே. 8

அயக்காந்தச் சிந்தூரம்

காந்தமும், அரப்பொடி நேரிடு அலைவறு
சிந்தையி னினிபுகை நீர்தனி லரைவறு
முந்தவே நிறமது பவளம தாமினி
சிந்தையி லெடுமினி செய்வன நீறதி
லிடையிடு வாலை நீரதி லரை
திரிநே ரடையிடு
இடுகட மதிலெடு யிடுமுத் தீயெரி
யிடுவது வடிதனில் விடுமதை யரைபுகைநீ
ரரைகட மரையெடை யெரியிடு திரிநேர்
அடிதனி லுருகிடு மதையெடு பணவெடை
திரிகடு வாளம் நேர் கரிக்கிடு
வெருகடி தனிலிடு மதுவிடு குழையுண்
நாலே ழிருபொழு துண்டிரு
புளி புகையிலை தள்ளிடில் பிளவைகள்
ரண மினிதுள மிளிர் கூர்மம்
படுவரை யாப்புக ளடுபிணிக் குட்டம்
கபமுட னீளைக ளெலிகடி யதுவற
வலிவுட னிசிவுகள் வாதம் பொடிபட
நொடிபடு பித்தம் மெடுபடு நோய்கள்
தவிடது பொடிபோ
லடிபடும் பிணிக ளிடிவிழப் பொடிபடும்
முனிசொல வருளிய பெருவழி நூலி
லதையறி யூசிக் காந்தயம் பவளமே. 9

இரச பஸ்பம்

ஈரறு ரசமிட்டு யினிதான பண்ணை
யிதிலானபாதி இடவே ரசத்தை யடைவாய்
காரறு புகைநீர் தன்னைக் கடிதாகவூற்றி
கனிவாக வேகக் கலமான கல்வமதிலே
வாரறு ரவியில் வளமாக வைக்க
வடிவாக நீறும் வகையான பண்ணைநேரே
சாரறு வரைத்து வில்லை சரியானசட்டி
தனிலிட்டு வுப்பு தனிநான்கு படிவிடுகவே. 10

விடவே வறுத்து விதமான தூறில்
விடுபூவு மிட்டு விடமேலை வில்லைவைத்து
திடமாக மூடி திருவான சீலை
திரிநேரு செய்து திடமாயெரிப்பு நூறு
படவே யெரித்து பதமாக விட்டு
பதியா யெடுக்க மதிபோ
லடைவான நெய்யி லதிலிட்டு வுண்ண
அகமான வியாதி போமே. 11

போமேக மேகும் புழுவான வெட்டு
புகழான வெட்டை விரணம்
தாமேகு மெல்லாந் தனியான குட்டந்
தயவான காசமேகம்
காமேகு நோய்கள் கடலிட்டு புக்குங்
கனிவாக புகையிலை தளு
வாமே யுனக்கு வலுவுள்ள நோய்கள்
வகையாக முனி பகர்வதே. 12

பேதி அயக்காந்தம்

அயக்காந்த நேரே யளவாய் நிறுத்து
அதிற்கையா நீரை யடைவாக விட்டு வரைநேர்
பயமாக வில்லை பதியா யுலர்த்தி
பரிவான நூறு பதிவாக வெருவில்போடு
நயமாக விட்டு நலமா யெடுத்து
நகையான செக்க ரடியான நானிறமதாம்
தயவா யெடுத்துத் தசமாக வாறு
தனியே நிறுத்து ததியாய் நறுக்கிபொடியே. 13

பொடிசெய்து சூதர் புலனாக நான்கு
புதிதான கெந்தி பதிவாக முன்னீரையிடு
வடிவான நேரே வகையா யரைக்க
வளமாய்க் கறுக்கும் வகையான ஜாமமேகம்
துடியா யரைத்து தொகையான வாளம்
துரையாயிரண்டு துடியாய் நிறுத்து அரைநேர்
படியான சுக்கு பதமா விரண்டு
பதமான மிளகு பதமிரண்டு தானரையிடே. 14

இடவே கடுக்கா யிதிற்பத்து ஆறு
இதில் நெல்லி முள்ளி இனிதான பத்து ஆறு
திடமாக விட்டு திறமா யரைத்துத்
திரியான கையான் திரமான நீரிலரைநேர்
படமாக தானே பதிவாக வெண்ணெய்
பரிவா யரைத்துப் பதமாக தானுலரவே
வடமாக மூன்று விரலா லெடுத்து
வகையான தேனில் வழியோடு கொள்ளுமெனவே. 15

எனவேக மூன்று இதமான நாளி
லினிகொள்ள நோய்க ளிதமான புளிபுகையிலை
தனவேக மாகத் தனியாகத் தள்ளு
தயவான நோய்கள் தடையில்லை சோகைபோகும்
வனவேக மேக காமாலை போகும்
வடிவான பாண்டு வகையோடு வாதமேகும்
கனமான பித்தங் கனிவான மாலை
கடலான சூலை கதமான பித்தமறுமே. 16

சுரத்திற்கு மலங்கழிய மாத்திரை

நாத்தமுந் தானிரத நல்லநாடியே நான்குபலம்
அரைக்கிறவி சிலமதனை யென அரைநேர்
பாத்துமேதான் கடுக்காய் நெல்லி முள்ளியு
முன்னிடைசேர உடைபோம்பாடு இதில்
முன்னிட தாணியிநேர்
சாற்றிட வாள மூன்று உடைதானே பருப்பெடுநீ
அதையதில் பொடிபட இடஅரை யெனநேர்
வாத்தியே வாளமூன்று இதில் வாக்கான தோலெடு
உடைபோடு தொடியிடு சிறுபயரளவாய்
நேத்தியாய் இஞ்சிதனிலிதை நேருண்டையொன்றிடவே

சுரமறுங் கபம்வீடு மெனநினைநினையே
சித்தமாய் வாதசுரந் துளசிதன்னிலே தானிடவே
அதம் விதம் பதம் அறுபத்து நான்கு சுரம்போம்
நத்தியே சீதசுரமிதில் நாடியே யோடிவிடு
முனிவருள் திருவருள் முறையென வறியே. 17

இலிங்கரச அயக்காந்த சிந்தூரம்

ஜகதலம் விளங்கும் ஜைமினி சொன்ன
நகைமகி முலகர் நாடியே பார்த்தெடு
அயமுடன் காந்த மதித நயமென
நயமுடன்பாக நவின்ற சிந்தூரம்
வாதமு மாகும் வியாதிகள் நாசமாம்
சேதம் வராது தெரிந்துகொள் வைத்தியர்

அயச்சிந்தூரம்

அயமது ஏக மதிலிடு வீரம்
நயமதா யையரை நாடியே யிட்டு
திராவக மதனால் திட்டமா யரைத்து
பராமுக மாகப் பதியவே வறுக்கப்
பவழம தாகும் பதமா யெடுத்துத்
தவடிதாய்ப் பரம தந்திட வைத்து

காந்தச் சிந்தூரம்

ஓட்டுக் காந்த முண்மையா யேகந்
தாட்டிக மாகத் தடையற நிறுத்துக்
காணக் கியாழம் கடிதாக விட்டுத்
தோணவே யரைத்துத் தொக்கவே புடமிட
அருண நிறமதா மடைவுட னெடுத்து.

அயக்காந்த மிரண்டுஞ் சேர்த்தல்

தருணமாய் முன்னெடை யயத்தினிற் சேரு
அரைத்துமே யிரண்டையு மடைவாக வில்லை
நிரைத்துமே யொன்றாய் நிலவர மாகவே
வில்லையாய்த் தட்டி விதமான குக்கிடத்
தெல்லையிற் போட்டுத் திரமா யெடுக்கப்
பவழம் தாகும் பதியவே வைத்துக்
கவலையைச் சொல்வேன் கருத்துடன் கேளு

யூகிமுனி கரிசலை - 36

இலிங்கரச மெடுத்தல்

லிங்கமுஞ் சரியாய் நேராய் நிறுத்துத்
துங்கமாய்த் திராவகத் தாலே யரைத்து
உமிநெருப் பிட்டு உண்மையாய்க் காய்ச்சித்
தமியவே யொட்டத் தவமா யுதிர்த்துக்
கடமதி லிட்டுக் கடமதால் மூடி
கடமதி லிட்டுக் கடமதால் மூடி
கடமதி லுளுந்து சீலைசெய் துடனே
எரியிடு தசமா மினிதுடன் கேளு
தரிப்பதாய் மலருந் தாஷ்டிக மாக
விருப்புடன் பிட்டு விதமாய்ப் பார்த்திட
சிறப்பதாய் மேலே சேர்ந்தே நிற்கும்
கரிபோற் கறுத்து கனக்கவே மேலே
நிற்கு மதனை நேர்மயிற் குச்சால்
தக்கவே யெடுக்கத் தயவாய்ச் சுரண்டு
எடுத்து பீங்கா னிலியல்பெற விட்டு
அடுத்துமே தேய்த்திட வடைவான வாலை
ரசமது வாகும் நலமுள ரசத்தில்
பிசகிலாத் திராவகம் பிலக்கவே விட்டு
வைக்கவே ரவியில் வளமாய் நீறும்
நீறது உபயம் நிலவர மாகவே
பார்த்து முன்னம் பகர்ந்த சிந்தூர
மெடைக்கெடை சேரு இன்பமாய்த் திராவக
நடைபெற விட்டு நலமா யரைத்துக்
கடத்தினி லிட்டுக் கடமேற் கடமுந்
தி[illegible]மதாய்க் கவிழ்த்துத் திட்டமா யுளுந்தால்
நட[illegible]மிடக் கவச நலமாய்ச் செய்து
எரித்திடு ஏக வின்பமா யுள்ளே
வரித்தியே தீயெரி வளமா யிரத
மேலே யிருக்கும் விருப்பமாய்த் தேய்க்கக்
காலாக வேதான் கடிதான் பாத
ரசமது வாச்சு நலியவே கேளு
பிசகிலாத் திராவகம் பிலக்கவே யூற்றி
விட்டுமே ரவியில் விருப்பமாய் வைக்க
கட்டுமே காளான் போலது நீறாம்
நீற்றை யெடுத்து நேராங் கடத்தில்

வார்த்தையாய்ப் படியில் வளமாஞ் சிந்தூரம்
சிந்தூ ரந்தனை சிறக்கவே ரவியி
லவிந்திட இருபதி லொன்றிடத் தங்கம்
தங்கமதாகும் தடையிலை பாரு
உங்கட் கிரங்கி யுறுதியாய்ச் சொன்னேன்
விற்றுச் செலவுசெய் திட்டுமே ஞானம்
சித்துகள் யோகம் சிறப்புடன் செய்யவே
சொன்னேன் ரசத்தைச் சுயம்பெறக் கொல்ல
நன்னய மாகு நாடியே பாரு
முன்னமே செய்து முடிக்கப் பலனாம்
கன்னல்போ லாகும் கனிவான வாதம்
சொன்ன படிக்குச் சுயமாய்ச் செய்து
இந்நிலந் தன்னி லின்பமாய் வைத்தியந்
தனியே செய்து தாக்கிடச் சித்தி
லிங்க ரசவயக் காந்தச் சிந்தூர
முங்கள் குலத்தி லொருபண வெடையிடு
மண்டலங் கொள்ள மகாவெகு நோய்போம்.

இதற்கு அநுபானமும், அதனாற்றீரும் வியாதிகளும்

திரிகடு தனிலிடு ஜெயமாம் பித்தமுந்
துரியமாய் நாற்பத் தெட்டு மொழிந்திடும்
பத்தியங் கைப்பும் பதையாமல் தள்ளு
சித்தியாந் தேகஞ் ஜெயமாய் நின்றிடும்
சுக்கு மிளகு வாள மிரண்டு
மிக்கவே கடுக்காய் தானிரண் டாகும்
நெல்லி முள்ளி நேர்பதி னாறு
எல்லாம் பொடித்து இன்பமாய்க் கேளு
கரிப்பா னீரால் காண வரைத்து
தரிப்பா ரவியில் தானிடு காயம்
வைத்துப் பொடித்து வளமாய் வெருகடி
கைத்து எடுத்துக் கனிவா யுளங்கை
நடுவிலே வைத்து நலமாம் சிந்தூரம்
கடுகவே பணவெடை காட்டியே யுண்ண
வுண்டிடும் போது உறவாம் வியாதிகள்
நன்னய மாக நவிலுவேன் கேளு
வாதமும் வாயுவும் வளமாய்த் தானறுஞ்
சேதமாய் மேக வாய்வுகள் போகும்

கால்கைக் குடைச்சல் கனமாம் பீனிசந்
தூலமாய்த் தந்த வாய்வுகள் போகும்
மேக ரணமும் விடுபடுங் குன்மமுந்
தாக மொழியுந் தனியான அஷ்ட
குன்மமும் போகும் குணமுள வவிழ்தஞ்
சூலைவிப் புருதி தொலையும் பெரும்பாடு
வாலையைப் போலே மகத்தான தேகமாம்
கிராணி கழிச்சல் கனமாக நின்றிடும்
வராணி மகோதரம் வடிவாய்ப் போய்விடும்
சயத்திற் கநுபானஞ் சாற்றவே கேளு
பயத்துடன் தூது வளையின் புஷ்பம்
பூவை யெடுத்துப் பெரிய கடத்தி
லாவலாய்ப் பாணி யதிலிடு காலாய்
தேவையாய் வாயில் திட்டமாய்ச் சீலை
கட்டியே மேலிடு கனமாம் பூவை
திட்டமா யதன்மேல் திடமாய்ச் சட்டியை
மூடியே யெரிமேன் முக்கிய மாகத்
தேடியே புட்டாய்த் திடமா யவித்து
நாடியே பிழிந்து நலமாய்ச் சொல்வேன்
பணவெடை சிந்தூரம் பதியவே யிட்டு
குணமதாய்க் கொடுக்க குணமுள காசம்
அகமதாய்ப் போகு மதுபனி ரண்டுந்
தீராக் குட்டந் தீர்ந்திடக் கேளு
நிமிரது எட்டி மரமுடன் றோலை
சீவியே பொடியாய்த் திட்டமாய் ரவியில்
காயவே பொடித்துக் கனமாய் வைத்திடு
நோய்க்கு வெருகடி நுகரவே யிட்டு
சிந்தூரம் பணவெடை செப்பமா யிட்டு
விந்தையாய் வெந்நீர் விருப்பமா யிட்டு
குழைத்துண்ண மண்டலங் குறைநோய் குட்டம்
பிழைத்துமே யோடும் பிலமா நல்லெண்ணெய்
ஆகா தென்று வரைந்தனர் முனிவர்
தாகமா யண்டம் பௌத்திரந் தீரும்
ஈளை யிரும லெலிகடி தீரும்
கோளைநீ ரிழிவு குடிகெட்டுப் போகும்
விந்து விறுகும் விருப்பமாய்ச் சித்தி
சேர்ந்திடப் பெண்களைச் செயலான போகம்

ஊற்றது போல வூறுமே காமம்
சேர்த்திட வடைப்பு மலஜலம் பிடுங்கும்
வாத மெண்பதும் வகைதொகை நாசமாம்
சேம வளியது சேர்த்திடப் போகும்
பொதிகை மலையில் பொருந்தவே யிருந்து
வதிசய மான கரிசலைப் பாடி
இதையுஞ் சுருக்கி யிதைமுப்பத் தாறாய்
விதமுடன் பாடினேன் விருப்பமாய்ப் பாரு
மாமுனி யருளிய மாலிங்க ரசவய
கோமுனி காந்த சிந்தூர மிதனுமே. 18

நாக பஸ்பம் - வேறு

நாகமது பலமேக நாடிகட மிட்டு
நலமா யுருக்குமுகந் தன்னிலுபய மிளகு
வேகமா யுருக்குமுகந் தன்னிலே தாவு
வித்தமாய் நீறியது முத்துபோ லாகும்
ஆகுமது நாகமதை யளவாய் நிறுத்து
ஆதியினி ரசமதனை திரியேகம் விட்டு
சோகமென வெடியுப்பு தீநீரை விட்டு
சுத்தரவி தனில்வைக்க பூர்க்குமது பாரே. 19

பூர்த்தரசந் தன்னிலெடை நாகபற்பம் நிறுத்து
பேரான திராவகத்தா லரைகடந் தன்னில்
சேர்த்துமே யெரித்திடவே ஜெயமாக வேறும்
ஜெயவேதை யேறினதை வழித்துபுகை நீரால்
பார்த்துமே நீர்விட்டு ரவிதனிலே வைக்கப்
பதிவான ரசநீறு பக்குவம தாகுங்
கார்த்துமே யடிநின்ற வாசுகிபற் பத்தில்
கனிவாகச் சேர்த்தரைத்து கடமதினி லெரியே. 20

எரித்திடவே யிப்படியே ஐந்துமுறை செய்ய
இயல்பாத ரசந்தானு மடியிலே நிற்கும்
வருத்திடவே செம்புதனில் நூறொன்று இடவே
வகையான ஆணிக்கி யெட்டரையே காணுந்
தரித்திடவே யிதைவைத்து ஞானவழி பாரு
தருவான சுழுமுனையில் வலுவாக நில்லு
கருத்திடவே கைபாகந் தப்பினா லாகா
கருணைபெறப் பாகமாய்ச் செய்திடவே சித்தி. 21

இதனாற்றீரும் வியாதிகள்

சித்தியாம் பணவெடை தாநித்த மண்டலமே
சிதறாத வலிகுன்மம் பித்தமுதல் போகும்
நத்தியே காசமுதல் வாதமுதல்தீரு
நலமான மேகரணம் மேகவாய் வெல்லாம்
முத்தியே பெருவயிறு தந்தமுதல் வலியு
முனையான மகோதரமு முதிரவலி தீருஞ்
சத்தியமா மிம்மொழிக ளாகுமது பாகந்
தவறாமற் செய்திடவே மாமுனிவர் சொல்லே. 22

தாம்பிர ரசச் சிந்தூரம்

பொடிரவி ராசனன்னை போமரை மூன்றுநேரே
யிடுவன சங்கநீறா யிதையரை வில்லைசெய்து
யினிரவி காயவைத்து
நடையிடு புடமதாக நவிலவே பவழமாகும்
மதையெடு யேகமாக வன்னியும் பாகமாகும்
வலுவுள புகைநிறுத்து வருநிலப் புகையுமாகு
முன்னியே கடமுமிட்டு முறுதியி லெரிக்கவேறு
முண்மையும் வாலையாகும்
உறுதியாய்ப் பீங்கானிட்டு வுறுபுகை நீரையூற்றி
வுக மதில் நிறம தாகும்
வருமென கடமுமிட்டு வகையதா யெரிக்கவேறும்
வழி யது யெடுத்து மைந்தா
நலமுடன் ரசமதாகு நவிலவே புகைநீ றுற்று
நலமூடனீரில் தந்தம் கலமதில் ரவிசிந்தூரரங்
கடுகவே யரைத்து வில்லை
கனமதாய்க் கடமுமிட்டு வளமதா யிதுபோலைந்து
வகையதா யெரித்துப் பாரு
ஜெகதலம் பவளமாகுஞ் சேருமே ரவிநூறொன்றில்
அகமது பத்துமாற்று அதிசய புடமிறங்கும்
அலம்வரு ஞானயோக மதில்வெகு நயமதாகு
மணுகிடில் மேகவாயு வதுபொடி கர்மமெல்லா
மலம்வரும் வாதமேக மதில்வரு பித்தமேகந்
தணலது மேனியாகுந் தணிமகோ தரமுமேகுந்
தகைபெறு காசம்போகுந் தடையிலை காயசித்தி
கனல்ரவி யிரதமான கடிதொரு சிந்தூரந்தான்
கதிபெறு மாமுனிவர் கனிந்துதா னுரைத்தசொல்லே.

வாளபேதி மாத்திரை

ஆதி மாமுனி யருளிய கரிசல்
நீதியாய் முந்நூற் றறுபதிற் சுருக்கி
வேதபாராயண முப்பத் தாறாய்க்
காதலாய்ப் பாகங் கைமுறை சரியாய்ச்
சொன்னதிற் சூத்திரஞ் சுருக்கம் பெருநூல்
நன்னய மாக நவின்றொத்துப் பார்த்துச்
செய்திடச் சித்தி ஜெகமுறை வைத்தியம்
பையவே பேதி வகையாகச் சொன்னதில்
பச்சை யென்பது பசிவான வாளமாம்
இச்சையாய் வறுக்கச் சொன்னது வாளம்
இதுவிரண் டொன்று இனியரச வாதிகேள்
பதிவாய்க் கையின் பாகம தறிநீ
அறிந்திடப் பாக மடைவது கேளு
பிரிந்திடச் சொல்வேன் பிசகற வைத்தியா
வேர்க்கொம்பு திப்பிலி மிளகினோ டிந்து
நேர்கடுகு ரோகணி சிவதையோ டெருக்கும்
பார்வன்னி யொன்று பதமா யெட்டிற்கும்
சேர்சரி வாளம் ஜெயமா யரைக்க
காழ்பழச் சாறு கடியவொரு ஜாமம்
விட்டு அரைத்திடு விதமாலய் நாளுங்
கட்டுமே குண்டு மணியின் விரையா
யுருட்டி ரவியி லுண்மையாய் வைத்து
வுருட்டியெ முழுதாய் வாகா யுண்டிட
உள்ளே சென்று உண்மையா யுண்டை
கரைத்து கரைந்து கனிவாய்ப் பேதியாம்
உண்டிடு வுண்ண முறுதியாய்ப் பேதி
கண்டுத மான நெஞ்செரி யாது
வாந்திபண் ணாது வகையாய் மலஜலம்
சேர்ந்துமே வழுகும் ஜெயமான போதியாம்
பேதியு நிரம்பப் பொறாத சரீரம்
ஆதியாய்ப் பாலிற் கஞ்சியுங் கூட்டு
கூட்டவே நிற்குஞ் சுரங்குவீர் சூலைபோம்
ஆட்டவே வாத வெண்பத்து நாலறும்
பெருநூல் கரிசல் பிரபல மாகவே
சிறுநூல் சொன்னேன் சுருக்கத்திற் சுருக்கிப்

பாடினேன் முப்பத் தாறுடன் சுருக்கம்
பெருநூல் சிறுநூ லிரண்டையுஞ் சோதி
திருவான பாகஞ் செய்திடச் சித்தியே. 24

சிங்கமுகத் திராவகம்

சித்தியாய்த் திராவகஞ் செய்திடக் கேளு
முத்திசேர் துருசு முடிவதாய் நிற்கும்
பெருநூல் திராவகம் பேதமா யொளித்ததில்
சிறுநூல் சுருக்குஞ் செயலறப் பார்த்து
திராவகம் வைத்துத் திட்டமா யுபரசம்
பராமுக மாகப் பதையாமல் நீற்று
சிங்கமுகத் திராவகம் திரமாய்ச் சொல்வேன்
உங்கள் குலங்க ளுறுதியாய் வாழ
ரசமது ஏகம் நவிலவே சேரு
பிசகிலா வுப்பு பெரிதா யரைத்து
செங்கல்மா நான்குக் கொன்று சேர்த்து
துங்கவே யரைத்துத் துப்புற வாக
சட்டியி லிட்டுச் சதிபெற வதன்மே
லிட்டமாய் ரசத்தை யினியவே யிட்டு
மேலது மூடி விருப்பமா யுளுந்து
சீலைசெய் யேழு ஜெயமா யடுப்பில்
வைத்துமே யெரித்திடு வாகாய்ப் பனிரண்டு
செத்துமே யேறும் ஜெயமுள பஸ்பமாம்
எடுத்துமே வழித்து இன்பமாய்க் கேளு
அடுத்துமே வெடிதச மன்பாய் நிறுத்து
ரசமா வுப்பையு நவிலவே நிறுத்து
பிசகிலா சீன மிருபத் தைந்து
மூன்றையு மொன்றாய் முடியவே யிடித்துத்
தோன்றவே சக்கர வாலையி னடியில்
போட்டுமே யரைகடம் பொருந்தவே மூடி
காட்டுமே தீபங் கமலங் காடாக்னி
உளுந்து சீலை யுறுதியாய்ச் செய்து
அழுந்தவே வாலை மூக்கினி லரக்குக்
குப்பியை யுள்ளே செலுத்தி யெரித்திடு
திராவக மிரங்குந் தடைமுன் னீரும்
பராமுக மாகப் பதியவே வெள்ளையாம்
ஊற்றி டேன மூற்றிப்பின் நீரை

யேற்றி யேயெடுத் தினியகண பதியைத்
தோத்திரஞ் செய்து தொகையது கேளு
பாத்திர மாகும் பதியவே யேமமாம்
அகமதி லிருந்து அன்புடன் பூசி
ஜெகமதி லோக மெல்லாம் நீறும்
வகையதாய்த் திராவகம் வைத்திடச் சித்தி
தொகைவகை யாகுந் தொல்லுல குள்ள
உபரச மெல்லா முறுதியாய் நிற்கும்
பலமான திராவக மிதுதான்
கும்ப முனிதான் கூறின திராவக
மன்பதாய் வைத்திடச் சித்தியதாமே.

வீரரசமும் - வீரரச பஸ்பமும் சிந்தூரமும்

வீர ரசத்தை விருப்பமாய்க் கேளு
கோரமாய் வியாதி குடிவிட் டோடும்
வாதமு மாகும் வசியமு மாகுஞ்
சேதம் வராது ஜெகதலம் விளங்கும்
அரைக்கையில் வீர ரசம தெடுக்க
முறைப்படி சொல்வேன் முக்கிய மாகும்
வீரந் தசமெடு விருப்பமாய்த் தானே
தாரமாய்த் தண்ட வாளமு மிரண்டு
உடையரை யிரண்டு முறுதியாய் ரசமாந்
தடையது படாமல் தானே கக்கிடும்
கக்கின ரசத்தைக் கருணையா யெடுத்து
மிக்கவே வுப்பி லெரித்திட வேறி
வெள்ளையாய் நீறும் விதமாய்ச் சுரண்டி
துள்ளவே பணவெடை தூக்கிவெல் லத்தி
லிட்டிட நோய்க ளெல்லாம் போகும்
துட்ட ரிடத்தில் சொல்லவே வேண்டாம்
வயித்திய நல்ல முறையிது சத்தியம்
பயத்தினாற் செய்தால் பலிக்கு மவிழ்தம்
வீரபஸ்பத்தில் விதமான திராவகங்
காரமா யூற்று கருத்தாய்க் காய்ச்சி
மேருவி லிட்டு விதமா யெரித்திட
பாருமே பவழம் பதியவே யாகிடு
மண்டல முண்டால் மகாரோகம் போகும்
தொண்டருக் கருளின் தொல்லுல குள்ளோர்

ரவிநூ றொன்றில் நாட்டிடத் தங்கமாம்
கவியவே யிந்தக் கணக்கையும் பாரு
வீர சிந்தூரம் வித்தையி லதிகம்
பாரமாய்ப் பார்க்கப் பதியவே சித்தி
வடநூல் கிரந்தம் வகையுடன் பார்த்துத்
திடமாய்த் தமிழால் திட்டமா யெடுத்துச்
சொன்னேன் மாமுனி சுருதி புலத்தியர்
நன்னய மாக நவின்றசிந் தூரமே
ஏம மோர்நிறை யின்பமாய்த் தான்ரவி
வாம மாகவே வாகா யுருக்கிநீ
காம நாகமுங் காட்டிடு வீரமுந்
தோமம் வேதையாந் தொக்கவே பாருமே.

வீரத்திராவகம்

வீரத் திராவகம் வித்தையினி சொல்வேன்
காரமாய்த் தானே கடிசெலா நீறும்
வெடிபலம் நூறு விதமணி சீனம்
படிபோல் நிறுத்துப் பகரெடை சரியாய்
வீரமு மிருபத் தஞ்சுடன் போட்டுக்
காரமாய்ப் பொடித்துக் கணக்கது கேளு
வாலையி லிட்டு வகையாய்க் கடமரை
பாலை யடுப்பின் பிரியவே யிட்டு
வடித்திடு திராவகம் வகையாய் முன்போல்
துடியா யெடுத்துத் தூக்கிட அரக்குக்
குப்பியி லிட்டுக் குரூரமாய்க் கேளு
தப்பியே போகா தானது பாகமாய்ச்
சரக்கெலாங் கட்டுந் தானது நீறும்
பார்க்கவே பெருமை பகர்தல் முடியா
பாஷாண மெல்லாம் பதையாமல் நீறும்
தேளா முபரசந் தென்பாய் நீறும்
திராவகம் போலே தாக்கிடச் சித்தியாம்
பராமுக மிலாமற் பதமாய்ச் செய்திடு
எல்லாமுங் கட்டு மினிது புலத்தியர்
சொல்லாற் பெரியோர் சொன்னது புத்தி
உப்பி னாலே உறுதியாய் வாதமாந்
தப்பித மில்லை தான்சத் தியமாம்
முக்கிய மாக முன்னே வைத்திடு

மிக்கவே யெல்லாம் விரும்பியே யாகுந்
திடமாய்த் திராவகந் திட்டமா மூலிகை
வடம சாறு வகையான மூன்றுநா
ளிட்டு மேபிழிந் தினிதான் சரக்கைத்
தொட்டிடக் கட்டுந் துடிப்புடன் வேதை
யாகுமே பாரு அதில்வருஞ் சித்தியா
துரிசின் போக்குத் தொகையாய்க் கேளு
பரிசின வேதை பார்க்கவே சொல்வேன்
துரிசையிந் நீரில் துடிப்பறத் தோய்த்து
வரிசையா யெட்டு நாளது போட்டிடும்
பொருமியே நீறும் பொருந்தவே வங்க
மருமையாய்ச் சுன்ன மடைவது கட்டுங்
குக்கிட புடமிடு கொடூரமாஞ் சுன்ன
மிக்கதோர் சூத மிகநல் லேவல்
கேட்குமே கட்டுக் கெவனமாங் குளிகை
தனக்குமே பணவெடை தந்துவாய்ப் போக்கும்
நவலோக மொன்பது நாடியே தங்கமாந்
தவப்பல னாகுந் தர்க்கம்பே சாதே
தாளகந் துவைத்திடு தாக்கவே யெட்டு
வாளகம் போலே வலுவாய் நீறும்
செம்புநூ றொன்றில் சேர்த்திடத் தங்கமாம்
வம்புசெய் யாமல் வகையுடன் பாரு
கெந்தகம் வீரங் கெடியான பூரமுந்
தந்திடு மனோசிலை தக்கதோர் வெள்ளையு
மிப்படி நீற்றிட யின்பமா யேமமாந்
தப்பித மில்லை தானே நீற்றிடும்
வாழ்வு முனக்கு வகையாய் நின்றிடும்
தாழ்வு வராது தாழ்ச்சியு மில்லை
தங்கமு நாகமுந் தானறி வங்கமு
மிங்கித மாக இயல்பாய்க் கரும்பொன்
செம்பு மிப்படி ஜெயமாய் நீறிடும்
நம்பியே வாத நாடியே நின்றிடுஞ்
சுழுமுனை தன்னில் சொக்கியே நின்றிடும்
பணிவொடு பாரு மதத்தால் கெடாதே
வாதி வாதி வளமாய்ப் பேரெடு
ஊதி யூதி யுறங்கவே வேண்டாந்
திராவகத் தாலே சகலமு மாகும்

பராமுக மாகப் பலிக்கா தென்று
நாவினாற் சொல்லி நவில வேண்டாம்
மாமுனி அகஸ்தியர் வடமொழிக் கிரந்தங்
கோமுனி சொன்ன கொடியபுகை நீரே.

ரசச்சிந்தூரம்

சோதிரசந் தனையே சுத்தி செய்து
தூரசணி பீங்கா னிடுபலந் தசம்
கோட்டை யிடிக்கும் படைராசன் பத்துங்
கூட்டிடு சீனமது
ஐயைந்துபலந்தான் பொடி பண்ணி வாலைசட்டியை
சக்கரமேல் கவிழ்த்து உளுந்தாலே சீலைசெய்து
உறுதியா யுண்டெரி தீகமலம்
புகைவரும் வெள்ளைப் புகையைத் தள்ளி
நடு நீரை வித்தகமாய்ப் பிரித்துக்
கடைநீ ருகாரந் தானீரை யெடு
ரசமீ திட்டு ரவியில் வைக்கத்
தானது பற்ப மாகுமெடுத்துப் பின்
நீர்தனையிட்டு வைக்க நீறியிடும்
பின்னெடு பற்பமெலாங்
குப்பி யடை மீதிடுதான் கடத்தில் - உப்பு
இடுநால் விரல்செலுத்தி இதின்பேரில் தான்குப்பி
தானடுவில் வைத்துமேலே தான்கட மேல்கவிழ்த்து
உளுந்துமண் கெட்டியாய்த் தான் கவசம்
பிலக்கவே செய்திடுஆறு நாளுயரவே தானேறி
மேல்சட்டியிற் பிடித்திடுங்
கையினால் தான்சுரண்டிக் குப்பி யடைதனில்
சிவந்திருந்த மருந்ததனைச் சேர்த்து அரைத்திடுநீ
புகைநீரைவிட்டு ரவிதனிலே காயவைத்துத் தானெரி
முன்போ லாறுதினந் திட்டமாய்த் தானெரிக்க
சிவந்திடு மிப்படி யைய்ந்து முறைப்
பாகமாக வின்பமாய்த் தானெரிக்கக்
கடைசியில் சிந்தூரந்தா னெட்டுக்கொன்று தங்கந்தானே
உருக்கியிடு நாகமொன்று சேர்த்திட வெள்ளை யாகுஞ்
சிந்தூரத்தில் தானினிச் சேர்த் தரைத்துக் குப்பியிட்டுத்
தானே யெரித்திடுநீ பவழ மாம்
பாகமாய் மண்டலஞ் செயரசஞ்சாகும்

நாயமார் கற்பனையை யொருவரால்நாம் மதிக்கப்போகா
புவிதனி லொன்பது லோகத்திடு
தனித்தனி கொடுத்துமே நூற்றொன்றில் தங்கமாகும்
இங்கிதமாக வெடுரச வாதஞ் சித்தியே
ஏவல் கேட்கும் புலத்தியா
உண்டிடுமண்டலம் திண்பணவெடை யுண்டையாய்க்
காயசித்தாம்
கதிர்மேனி செங்கதிர் போல் நிறமாம்
வலிகுன்மந் திட்டமாங்
காசமுதல் தலைவலி
வாதமெண்பது போம் பித்தமுதல்
வாகான தந்தவாயுவு அண்டவாயுவு போகுமே
ஜன்னி முதல் தீருமேனி மாந்தளிர்போல் நிறம்
ஜகதலமுன்னை வணங்கியிடும் இதுரசந் தானே
திராவகத்தால் மடிந்திட்ட தானெனச்செம்
பட்டால்
நொடிதனி லேமமு மாகிவிடும்
இதுநலங் கைப்புப் புளிப்புத் தள்ளு
இதையுண்ணு காயமுங் கற்றூணாம்
விந்துகட்டும் மானுடர் புத்தி யில்லார்
பாகமாகச் செய்திட மாட்டா மலே
சூத்திரம் பொய்யென்று சொல்லுவார் பார்
வாதம் பொய்போனாற் சொல்லக்கேளு
உலகத்தில் தான்சிவந்தான் பரமும் பொய்யாகும்
வேதமுஞ் சொற் பொய் யாங்
குருமுனி மாமுனி சொன்னது தான்
சூத்திரத்தில் தான்மொழி சத்தியாம்

வேறு ரசத்திராவகம் - வேறு

நலமதா யெல்லாம்
பிசகிலாநீர் பெருமையைக் கேளு
எல்லாம் ரவிதனி லின்பமாய் நீறுஞ்
சொல்லாற் பெரியவர் சித்தாம்
ரசத்தி ராவகம் பகர்ந்தா ரதுகேளு
பராமுக மாகப் பதியவேபாரு
வெடிதச நிறுத்து விதமாய்ச் சீனம்
படியை யைந்து பாய்ச்சி நிறுத்திடு

வாலையி லரைக்கட மாகவே பொடித்துப்
பாலையிற் போட்டுக் கனிவாயுளுந்து மண்
சீலையுஞ் செய்து சிறுகவே தீயெரி
பாலையின் மூக்கால் வடிந்திடும் வெள்ளைநீ
ரெடுத்துமே தள்ளி யிதமான மஞ்சள்நீர்
அடுத்துமே பிடித்து ஆண்மையைக் கேளு
சுத்த ரசமது ஏகமும் நிறுத்துப்
பத்தியாய்ப் பிடித்துப் புகைநீ ரெல்லா
மூற்றியே மூன்றுநா ளுண்மையாய் நிழலி
லேற்றியே வைத்திட யிதமாய்க் கரைந்து
தண்ணீர் போலாந் தாக்கவே கேளு
மண்ணியே மறுமுறை வாகாய் வெடியுந்
தசமது நிறுத்துத் தாக்கிடச் சீனம்
பிசகிலா யிருபத் தைந்துடன் பொடித்துக்
கடமதிலுருக்கு கிளரவே வெள்ளை நீர்
விடமதாய்ப் போக விட்டுமே பாரு
மஞ்சட் புகைவரும் வருகிற வப்போ
துஞ்சவே யெடுத்து ஆறவே வைத்து
ஊற்றிட முன்புகை நீரதை யதிலே
ஏற்றிடு அடுப்பினி லினியதோர் வாலை
சட்டியை மூடு சடுதியா யுளுந்துமண்
கெட்டியாய்ச் செய்து கிருபையா யெரித்திடு
வாலை மூக்கில் வளமாய்க் குப்பியை
வேலையா யிட்டு வைத்திடு வைத்தால்
புகையும் படாமல் புதுதிரு மேனியி
லிசவா யிருந்திடு யின்பரச வாதி
பட்டால் புகையும் பட்சம் விரிந்திடும்
கெட்டுமே போகாக் கிருந்திடு யிப்படி
ஐந்து முறையது வெவ்வே றாகச்
சொற்படியாகச் சுருக்கமா யுருக்கி வைத்தால்
புகையும் படாமல் புதுதிரு மேனியி
லிசவா யிருந்திடு யின்பரச வாதி
பட்டால் புகையும் பட்சம் விரிந்திடும்
கெட்டுமே போகாக். கிருந்திடு யிப்படி
ஐந்து முறையது வெவ்வே றாகச்
சொற்படியாகச் சுருக்கமர யுருக்கி வைத்தால்

6

புகையும் படாமல் புதுதிரு மேனியி
லிசவா யிருந்திடு யின்பரச வாதி
பட்டால் புகையும் பட்சம் விரிந்திடும்
கெட்டுமே போகாக் கிருந்திடு யிப்படி
ஐந்து முறையது வெவ்வே றாகச்
சொற்படியாகச் சுருக்கமர யுருக்கி
முன்புகை போக முடிவாய் மஞ்சள்
தென்பதாய்க் கண்டு திட்டமாய் முன்ரசத்
திராவக மூற்றி ஜலுதியாய் வடிநீர்
திருவருள் பெற்ற திராவக மாகும்
பிரம்மா விஷ்ணு ருத்திர னாகும்
ஆகுமே திராவக மடைவதுஞ் சொல்வேன்
அரக்குக் குப்பியில் வைத்துமே வைத்து
சிறக்கவே கேளு திட்டமாய் வேகந்
தங்கங் காரீயந் தயவுள்ள பித்தளை
யிங்கித மான செம்பது நீறும்
ஒன்பது லோகமு முண்மையாய் ரவியில்
தென்புட நீறுந் திருநட மாகும்
புகைநீர் வைத்துப் பொருந்தவே நீற்றுத்
தகையாது செல்வந் தானென்ன வருமே
மூலிகை தன்னில் முடிவுட நீற்றல்
கேலியாய்ப் பொய்யாம் கிருபையு மில்லை
தாம்பிரந் தன்னைத் தண்மையாய் மூலிகை
வம்பாய் நீற்றல் வருகா தப்பா
அண்டச் சுன்ன மடைவுடன் பண்ணி
தெண்டமாய்த் தாம்பிரப் பொடியில் சேர்த்து
அரைத்துமே வெண்கரு வாலே வில்லைசெய்
விரைந்துமே யூத வெள்ளையா யிருக்குஞ்
சுன்ன மிதுதான் சுருக்கமாய்ச் சொல்வார்
நன்னய மாக நாடியே பணத்தைப்
பிடுங்குவார் பாரு புத்தியா யிருநீ
திடங்கா ணின்னொரு தாம்பிரஞ் சொல்வேன்
அடமது சொல்லி அடைவாய் வங்கக்
குகையது பண்ணி .யுள்ளே செலுத்தி
வகையாய்ப் புடமிடு வாகாய்த் தூக்கிக்
காட்டுவர் வெள்ளையாய்க் கண்மயங் காதே

தேடே னென்பார் திருடுவர் வாதி
ரவியது நீற்ற நலமுட னுபாயங்
கவியவே சொல்வேன் கணக்காய்க் காய்ச்சித்
தோய்த்திட வெட்டையாய்த் தொக்கவே செய்து
பாச்சிது சுன்னம் பதிவுடன் கட்டினால்
நீறது வாகும் நினைவுடன் சோதனை
பார்த்திட விதனில் பலமா வாகும்
இப்படியாக வியல் பெறச் செயாமல்
தப்பித மாகத் தான்மேல் கட்டினால்
எப்படி நீறு மினிரச வாதிகாள்.

அப்பிரகச் சிந்தூரம்

அப்பிர கத்தை யடைவுடன் வாதி
தப்பித மாகத் தான்மூ லிகையி
லரைத்து நூறு புடமிடப் பவளமாம்
நிரைத்துமே யுருக்க நிச்சயந் தளுக்காம்
இருக்குமே மின்னி யினிதாஞ் சோதனை
பெருக்கவே காட்டுவர் பிரட்டுரச வாதி
சத்துருச் சரக்கால் தகித்தால் தளுக்கில்லை
மித்துருக் கூட்டில் வியாதிகள் போகும்
இப்படி யிருக்க இதமாம் பாகந்
தப்பற மூலிகை தன்னால் அப்பிரக
மெப்படிச் சாகு மினிது புலத்தியர்
பெருநூல் தோறும் பெரிதா மூலிகை
பெரிதெனச் சொன்னேன் பலமாய்நம் பாதே.

காசிபர் காதை

காசிப ரிஷியுங் கனக்கவே வங்கம்
வாசனை யாக வளமாய் நீற்று
துரிசின்மேற் கட்டித் துடிப்பற நீற்று
வரிசையாய்க் கவனம் வடிவாய் ரசத்தைக்
கட்டியே கவனங் கனிவா யேகயில்
திட்டமாய்ப் பொதிகை கடந்துமே யப்பால்
தேவனாம் பட்டணந் தெருவுக ளதிகம்
ஆவலாய் மறையோர் அறுநூறு வீதி
இப்படி யிருக்குந் தெருவொரு வீதி
தப்பித மில்லாத் தானொரு பிராமணன்

வீட்டிலே சென்று விரும்பியே பேச
தாட்டிக நூல்களாய்த் தர்க்க வாதிகள்
வெகுநூல் பார்த்து விருப்பமாய்ச் சரக்குத்
தகுமா சுண்ணந் தடையற வைப்பவ
ரவரிடங் காசிப ரிஷிசொலும் வித்தை
ரசத்தை நீற்றில் வெண்மையாய்ச் சொல்ல
பிசகறத் தாம்பிரஞ் சுன்னமும் வைப்பே
னென்றுமே சொன்னா ரிணையடி தொழுமறை
யன்றுமே பிராமணன் அப்படி நம்பக்
காசிபர் வங்கச் சுன்னத்தைக் கையில்
வீசியே யடக்கமாய் வைத்துமே சென்று
வாக்கினில் வந்த மூலிகை கொண்டா
யென்றுமே சொன்னார் இதைநன்றாய் நம்பி
கொண்டுவந் தார்மறை யோர்களு மப்போ
பண்டுமே வங்கஞ் சுன்னங்கா ணாமல்
மூலிகை தன்னை முடிவற வாங்கி
கேலியாய் வங்கச் சுன்னத்தை யிட்டுப்
பிழிந்துமே செம்பு துரிசில் கலக்கவே
நீர்வடிந் ததுமே வகையறி யாமல்
மூலிகை தன்னில் நீறுஞ் செம்பு
என்றுமே நினைத்து இசைவாய்த் தெரிந்து
போச்சுதே யென்று போனபின் மூலிகை
வாச்சுதே பிரிய வாக்கான செம்பு
நீறவே யில்லை நினைவுதடு மாறி
யேங்கியே திரிந்தா ரிதமாய்ப் புலம்பி
தாங்கியே கண்டது பொய்யோ யில்லை
நாய்தான் கடித்த வெள்ளெலும் பதுபோல்
பேய்போ லலைந்து பிதற்றித்திரி யாதே
தாயக மாகத் தர்க்கிக்கா தப்பா
வாதத்தை நிறுத்த வண்மையாய்க் கேளு
வெடிசுன்ன வுப்பினால் வங்கத்தை நீற்று
ஆதர வாக வப்புறந் துரிசை
நீதமாய் நீற்று நிலவர மாக
அப்புறம் ரசத்தை யடைவுடன் கட்டு
துப்பறக் கவனந் தோன்றியே நாட்டு
என்றுமே மெய்போ லிசைவாய்ப் பெரியோர்

தன்றுமே மலையிடம் நலமாம் வங்கஞ்
சுன்னமுஞ் செய்வார் சுருக்கமாய் மாநுடர்
ஏங்கவே மூலிகை யிட்டுமே பிழிவார்
தாங்கவே மாநுடர் தலைதெரி யாமல்
வனமூ லிகையில் வகையற நீறக்
கனமாய்ச் சொல்வர் கருத்தைநம் பாதே
நம்பவே யென்ன வென்றது கேளு
உப்புத் திராவக முண்மையாய் நீறின்
அப்பினில் வேதையா மளவுகொள் ளாது
உப்பினில் வேதை யுயருமே பாரு
தப்பியே யுப்பை விட்டா லவன்கையி
லொன்றுமே யில்லை யுறுதியா யெனவே
கொண்டுமே பாரு குணமிலா வாதி
அகண்ட பூரண மடுத்துமே நோக்கு
நிகண்டு பாரு நிலவர மாகும்
அடுக்கு மாறா தலத்திலே நிற்குந்
தடுக்கவே யக்ஷரஞ் சுருதியைப் பாரு
சித்த ருரையுஞ் சிதம்பரந் தன்னில்
பத்தனீ ரேகி முனிவரைக் காணு
சிற்சபை தன்னைச் சிறக்கவே தெரிசி
மாமுனி சொன்ன வாகான கரிசலில்
கோமுனி சூத்திரக் கணக்கையும் பாரே.

தாம்பிர பஸ்பம் - வண்ணம்

செம்பு யேகமுந் தானொடு தகடடி
வம்புலாவியே வெடிபடி கையுமுடன்
நம்பியே திரியரை வளிகத்த நீராலே

வம்பு லாவிய நீரது தன்னிலே
தென்ப தாகவே தான்கரி வோடதி
லெம்பிரா னருள் காய்ச்சியே தோய்த்திட
வெட்டை போலாந்

துன்ப மாகவே சீனமு மூதிடு
நன்பதாகவே நீறியே சுண்ணமாம்
வன்பதாகவே நான்கினி லொன்றைத்தான்
வீரம்போடு

வன்பு போலவே தான்குழை ரவிதனில்
தென்பதாகவே மேலிடு கவசமாம்
நன்மை யாகவே புடமிடு நடைபுடஞ்
சங்குபோலாம்

ஆதியாகவே தானெடு பணவெடை
சோதியானதோர் பணமதில் விடவது
வேதியாகவே யுருகிடு மதுபனங்
காய்போலாம்

நாதியானதோர் பணவெடை ரசமதில்
சேதியாகவே யிட்டிட ரசமது
நாதியாகவே கட்டிடு ரசமணி
கவனமாம்

வேதிபேதியாந் தங்கம தாயிடு
மாதிமாமுனி யருளிய கரிசலின்
நீதியாகவே பாகமாய் வைத்திட
குருவதாமே.

அண்டோடு சுண்ணம் படிக்காரச் சுண்ணம், வெள்ளீய ரசங்களைச் செய்து வேதையாட

அண்டோடு அரைத்திடு வெண்கருவால்
கண்டேகரி தன்னிலே யூதிட
வென்றேயினி தானது நீறிடுந்
தந்தம் போலாஞ்

சென்றேயெடு சீனமுமேக மென
அன்றே பொரிதானது நீரறும்
கண்டேயரை வெண்கரு தனிலதை
வடிவாகக்

கண்டேய்தை கரிதனி லூதிட
தெண்டேயது தான்கடுஞ் சுண்ணமாம்
அண்டோடுட நீறுடனே
யிடைசேரு

தானே அரை வெண்கரு தன்னிலே
மானேயொரு வில்லையா யூதிடு
தானேயது நீறிடுந் தான்கடுமை
நலமாக

வியாதிகட்கு இலிங்கரச பஸ்பத்திற் கநுபானம்

இலிங்க பற்பத்தை நினைவாய்க் கொடுக்க
துங்கமாய்ச் சொல்வேன் சூத்திரந் தன்னில்
பேதியே யானால் பெருமையாய் வெல்லத்தில்
நீதியதாக நிமிஷத்திற் பணவெடை
மூன்றுமே கொடுக்க முதிருமே ஜன்னி
தோன்றியே போகுந் துயரமாய்ப் பாரு
சூசிகா வாய்வு சுகமதாய்ப் போகும்
ஆசையாய் மலஜலம் விடாதே போனால்
வன்னி பஸ்பத்தில் வகையாம் வாளமும்
உன்னியே பத்திற் கிரண்டுமே சேரு
அரைத்துமே பொடியா யதுபண வெடையாய்
நிரைத்துமே கொடுநீ நிஜமதாய்த் தீருஞ்
சூசிகா வாயுவில் சுருக்கமாய் மலஜலம்
ஆசியாய்ப் போனால் அடைவுடன் வாளஞ்
சேர்த்துக் கொடாதே சும்மா கொடுநீ
பார்த்திடும் பண்டிதங் கட்டவும் விடவுஞ்
செய்துமே மருந்து வெவ்வேறு செய்திடு
உடலுறும் வியாதி யுற்றுமே போகுந்
திடமாய் மலஜலந் திட்ட மாய்விடின்
வியாதிகள் போகும் மலஜலம் விடாதால்
வாய்வுக ளுள்ளே மருவியே நின்று
தாயாதி யாகச் சத்துரு பண்ணுஞ்
சோகை தந்த வாய்வுகள் போக
ஆசையி னாலே யடைவுடன் கேளு
அயச்சிந் தூர மறிவுட னெடைக்கு
நயமாய்ச் சேர்த்து நலமா யுரைக்க
எட்டுக் கொன்று இன்பமாய் வாளந்
தொட்டுமே யரைத்துத் துயரமாய்க் கொடுநீ
சோகையுந் தீருஞ் சொஸ்தமாய்ப் போகும்
ஆசையி னாலே அறிவுடன் பாரு
சோகையில் மலஜலம் விட்டா லவர்க்குப்
பாகமாய் வாளம் பகரல் சேராதே
காமாலை போகக் கடுகவே கேளு
நேமமாய்க் கீழா நெல்லியின் சாரு
ஆமமாய்க் காற்படி யாவின் பால்காற்

யூகிமுனி கரிசலை - 36

கோனேயிதில் பொட்டலை தானெடைசேர்
கானேயரை வெண்கரு நீரிலேதான்
மானேயிதை வில்லையா யூதிடவே
கொடிதாகுந்

தேனெயெடை வெள்ளீயந் தானுருக
மானேயிதை யுருகிட வீந்திடநீ
கானேரசஞ் சேர்த்துமே யந்திடையே
கனிவாகச்

சீனம்வெடியோ டதுதான் திரிநேர்
கானல்படல் தானது வங்கரசந்
தானல்புடல் தான்சரி நேரிடுநீ
யரைஜாமங்

கோனேயென தானதுவில்லையு நேரே
மானேயிதை ரவிதனில் காய்ச்சிடு
வானேயிதை யஞ்சது சுன்னமுளே
பதிமூடு

ஊணேயதை தானது குக்கிடமுங்
காணப்புடம் போட்டிடத் தான்சிவக்கில்
வேணப்படி முன்முறை சுண்ணமிடு
வெள்ளைபோலாங்

காணே யதைக் கண்டிடக் கலியதுதான்
வேணப்படி யாகுமே நீல நீறும்

பொ ான் ரசங் கட்டிடும்
கவன மேம மாகும்

அநுபவந் தானது தங்கமாகுங் காணுமே
லோகமு நீறிவிடுந் தானுஞ்சொற் பார்த்திட
பாகமது செம்பு நீறாம்

பாகமது இருநூறு அஞ்சதனில்
யோகம் பரிபாஷையாய்ச் சொல்லிட்வே

தாகரச வாதிகள் பாகமது செயமாட்டாது
ஆகமுனி மாதவர் சொன்ன நீதி

வேகம்பட வைத்திட யிரதமுமே
யோகம் வரும் ஞானமு மோதிடுமே
கிரிகை யாமே

சேர்த்துமே யெடைக்கெடை ஜெயமுள வன்னி
பார்த்துமே பஸ்பம் பணவெடை யிடவும்
ஜாதியா மஞ்சட் காமாலை போகும்
வாதகா மாலை வகையுட னவிழ்தந்
திரளாம் பஸ்ப மெட்டி லொன்று
வாளமுஞ் சேரு வகையாய்ப் பொடித்து
திரிகடு பொடியிடு திட்டமாய்ப் போகும்
அறிவுடன் வைத்திய மன்பாய்ப் பாரு
ஊது காமாலை யுண்மையா யவிழ்தம்
பேதமாயயக் காந்தசிந்தூர மெட்டி லொன்று
வாளமும் பொடித்து வகையுடன் கொடுநீ
தூளாய் வியாதி துப்புறப் போகும்
பித்த பாண்டு பிரியமாய்ப் போகச்
சித்தமாய்ச் சொல்வேன் ஜெயமாங் காந்த
சிந்தூரமெட்டிலொன்று ஜெயமாம் வாளஞ்
சிந்தனை யாகப் பொடித்துமே கொடுநீ
மலஜல மிரண்டும் வகையாய்ப் போகும்
விலகுமே வியாதி விருப்பமாய்ப் பாரு
மகோதரந் தனக்கு வகையாங் குமட்டி
தொகையாய் லேகிய மிரத்தினச் சுருக்கம்
அதிலே பாகமாய் அன்புடன் வன்னி
சதியாய் வைத்துப் பற்பத்தை யுண்டிட
மகோதரம் போகு மயக்கமு மில்லை
தொகையாய்ப் பாரு சூத்திரந் தன்னில்
அட்டகுன் மத்துக் கறிவிப் பேன்பார்
இட்டமாய் வன்னி பற்பம் பணவெடை
தூக்கியே வெடிசுண் ணத்தில் வெல்லம்
பாக்கிய மாகப் பதியக் கொடுநேர்
அன்னஞ் சாப்பிட வரைகிறேன் கேளு
பின்னொரு பாகம் பிழையறச் சொல்வேன்
பசுவின்மோ ருபயம் படியவே கடத்தில்
வசிகர மாக வகையா யூற்று
சுக்குடன் பலமுஞ் சுகமாய் நறுக்கு
மிக்கவே கருவேப் பிலைபிடி யாக
இட்டுமே யுப்பு இனமாய்க் கொஞ்சம்
பட்டுமே யிட்டுப் பதிவாய்க் கேளு

ரவிதனி லிட்டு நலமா யரிசி
கவியவே பொங்கிச் சாப்பிட நன்று
பத்துநாள் பொங்கிப் பதியவே யுண்டிடு
சொந்தமு மாகுஞ் சுகமாய்ப் புலத்தியா
புளுக்கைபல் குன்மம் போகவே கேளு
தளுக்கவே வெடியின் தான்கடுஞ் சுண்ணம்
வன்னி பற்பம் வகையுடன் பத்து
வெடியின் சுண்ணம் வகையா யெடைசரி
சேர்த்துமே யெட்டுக் கொன்றிட வாளம்
பார்த்துமே சேர்த்து வகையாய்ப் பொடித்துக்
கொடுத்திடப் புழுக்கை குன்மம் போகும்
அடுத்துமே சோறு பொங்கியே யுண்டிடு
அட்ட குண்மமு மாயிர வாயுகள்
திட்டமாய்ப் போகுந் திருவாம் புலத்தியா
உதிர வாய்வுக ளுண்மையாய்ப் போகப்
பதியாய்த் திரிகடு பதியவே பொடித்துக்
கொடுத்திட மண்டலங் குடிவிட் டேகும்
அடுத்துமே வன்னி பற்பம் பணவெடை
யுண்டிட வுதிர வலியது தீருங்
கண்ட பேருடனே கனிந்துரை யாதே
இடுப்பு வலித்திடி லின்பமாய்க் கேளு
முழங்கால் முழங்கை முதிரவே வலித்தல்
சூலை குடைச்சல் சுத்தமாய்ப் போக
வாதக் கடுப்பு வகையுடன் தீரச்
சீனம்பல மைந்து சித்தமாய்க் கேளு
அன்பாய்ப் பொடித்து அதிலிடு மருந்து
கேள்திரி கடுவகை திட்டமா யிளவறு
அறிவுட னதிலிடு வாகா யொன்றாய்
வெருகடி யெடுத்து விதமா யுளங்கை
தனிலிடு நெய்யிடு தக்கதோர் வன்னி
பற்பம் பணவெடை பதியவே வைத்துத்
தாபரமாகத் தாகமாய்ப் பத்து நாள்
உண்டிட் டிருநீ யுண்மையா யிளைத்துக்
கண்டிடு உடல்தான் கனத்துமே போகும்
பத்தியங் கேளு பழஞ்சோ றாகுஞ்
சத்தியாய் நல்லெண்ணெய் தானே யாகும்
வாய்வுத் தீனி வசமாய்த் தள்ளு

கசப்பு மாகா கத்திரி கூட்டு
இசைவாய்ப் பாரு இருந்திடம் விட்டுப்
போகுமே வலிகள் போக்கோடே பாரு
கரணந் தப்பினால் மரணம் வந்திடுந்
தருணமாய்ப் பாரு தர்க்கஞ் செயாமல்
மலமடைப் புக்கு ஆகவே முன்சொன்ன
பலனதைப் பாரு பிரட்டுசெய் யாதே
கிராணிக் கெல்லாங் கபாடஞ் சொன்னேன்
திராணியால் வன்னிபற் பத்தில் வைத்துச்
சாப்பிடக் கிராணிபோந் தடையறப் பாரு
வாலமாய்க் கண்டால் வகையுடன் சொலக்கேள்
வன்னி ரசத்தை வகையா யெடுத்து
வுன்னியே திராவக மதிலிடு வெண்ணெயாம்
வெண்ணெயைக் குன்றி மணிபோற் குச்சியில்
நன்னய மாக வழித்துமே கேளு
முளைக ளுள்ள மூலக் கிராணி
தளையாய் முடுக்கச் சொல்லவுங் கேளு
வெளிதனில் முளைகள் விட்டுமே வந்திடுங்
களையா யதிலே கனிவாய்க் கொஞ்சம்
பூசிடப் பாகமாய்ப் பிரிந்துமே யொருநொடி
ஆகிடக் கரையு மதுநல பாகம்
கரைந்துமே போனால் கனிவா யெருமை
விரைந்துமே தயிரை யூற்றியே பிசைந்து
கட்ட நீறுங் கனமாய்ப் பாகமாய்த்
திட்டமாய்ச் செய்து திடமாய்ப் பாரு. 26

சண்டரச பஸ்பம்

சண்டரச பஸ்பந் தகுந்தபே ரேது
பண்டாய்ச் சொல்வேன் பதிவுடன் புத்தியாய்
லிங்க வாலை ரசமது வாக்கித்
துங்கமா யுப்பி லெரித்திடப் பற்பம்
இதுதான் சண்ட ரசபற்ப மாகும்
எதுவிது வென்று ஏங்கி யிராதே
வியாதிக ளறிந்து வினாவியே செய்து
பலாபல மாகப் பகர்ந்துரை புலத்தியா
குறிப்புடன் பாரு குணமாய் வியாதி
தெறிப்பாய்ச் சொல்லித் திட்டித் திரியாதே

லிங்கத்தைப் பாரு நினைவா யுனக்குத்
துங்கமாய்ச் செலவுக்குத் தருவார் சிவனும்
வயித்திய சிரோமணி வாகாய்ப் பேர்வருந்
தயித்தியர் போலத் தர்க்கம்பே சாதே
தென்பொதி கையினில் திட்டமாய் வாசமாய்
அன்பதாய்க் கரிசலை யாராய்ந் தெடுத்துப்
பாக மநுமதி பாகமு மெடை வகை
தாகமாய்ச் சொன்னது சரிகா ணிதுநலம்
முனியரு ளியதை முடிவறப் பாரு
தனிகை பாகமாய்த் தடையறச் செய்வதே.

தங்கரசச் சிந்தூரம்

ஜெயவன்னி ரசமெடு செப்பத் திராவகம்
நயமாய்விட்டு நலமதாய் மூன்று நாள்
வைத்திடப் பூர்க்கும் வளமாய்க் கேளு
நைந்துமே பூர்த்த வெள்ளையு மேகம்
ரேக்குத் தகடது நிரையா யேகந்
தாக்குமே யிரண்டுந் தடையற வரைத்து
வாக்கதாய் ஜாம வகைபனி ரண்டு
உருட்டியே வெற்றிலை யுள்ளே வைத்து
நெருக்கியே யுண்டை ரவிபட வுண்டையை
பெருக்கியே மேலே வெற்றிலை யுள்ளே
பொதிந்து மணலது சலங்கை மண்ணை
யெடுத்துக் கனல்நடு வைத்துக் கனக்கவே
யுண்டை மேலிடு மண்ணை விருப்பமாய்க்
கொட்டி யதன்மேற் புடமிடு கொஞ்சந்
தாக்கக் கதிபெற கனமாய் மஞ்சளாம்
எடுத்துமே கணபதி பூஜையும் பண்ணு
தடுத்துமே ஓம்நம சிவாய மெனச் சொல்
என்றுமே நூறு உருவது ஜெபித்து
நன்றுமே ரவியில் நாற்பதி லிரண்டரை
கொடுத்திடச் செம்பு குணமா யெட்டரை
அடுத்துமே நின்று ஆடியே நிற்கும்
எடுத்துச் செலவுசெய் யின்மாய்ப் பாரு
அடுத்துமே ஞானம் யோகம் பலித்திடுந்
தங்கமும் பண்ணு ரசமது வித்தை
யிங்கிதமாகு மினிய புலத்தியா

உப்பு காவிக் கோடாப் புடமுந்
தப்பியே போகா தனைவழி பாரு
சிந்தூரங் குன்றி யெடையிடு உடலில்
சிந்தையாய் மேனி சிறக்கவே கற்றூண்
ஆகுமே கண்தா னல்லிப் பூப்போல்
ஏகுமே மேனி யினியசுகந் தம்பூ
மேலது மாந்தளிர் போல மேனியாங்
காலது வைரங் கனகம் போலாங்
கற்றூ ணாகுங் கனக சிந்தூரங்
கைப்பும் புளிப்புங் கனமாய்த் தள்ள
மெய்ப்புடன் மண்டலம் மெய்ம்மையா யுண்ணு
ஆவின் பால்சே ரடைவாய் நெய்யும்
ஓயாமற் சேரு காந்த வரையில்
மாயா தேகம் வலுவாய் நிற்கும்
வாசி யிறுகும் மாமதஞ் சிந்தும்
ஓசையா யொளியு முடலிலே யாகுந்
தின்றிடக் கற்ப மழியாத் தேகம்
வின்றிட வானோர் விருப்பமாய்ச் செய்வார்
கண்டுமே யுற்றுக் கருணையாய்ச் செய்யப்
பண்டுமே சித்தி பதிவாம் நிரையாம்
நிரையாந் தங்கம் நேராம் லிங்க
மரையது செய்தா லதுபல னாகுங்
காய மிறுகுங் கல்லது போலாம்
மாயமாய்ச் சொன்னால் மயக்கம் வந்திடு
மிப்படிச் சித்த ரியல்பா யுண்டு
தப்பித மாய்த்தான் மூலி யுண்டென
வென்றுமே பொய்க ளிதம்பெறச் சொல்வார்
நன்றுமே சிஷ்யர் மூலிகை தேடி
அலைந்து அலைந்து யதையுண் டென்று
குலைந்துமே தேகங் கெட்டது போகும்
பொய்சொல்லி விட்டால் பேதமாய் வந்திடும்
மெய்யிது சுருக்கம் வினவினேன் பாரு
சித்தியா யோகத் திருக்கவே சொன்னேன்
பத்தியாய்த் தங்கம் லிங்கம்பாரு
ஆப்பிடா விட்டா லதுவே தென்றால்
கூப்பிட் டயத்தைக் கொடியசிந் தூரமாயப்
பண்ணியே யுண்ணு பதிவுட னப்படி

மெயண்ணமாய்த் தேக மினிதாம் பாரு
லிங்க ரசத்தை நினைவுட னெடுத்துத்
தங்கமுஞ் சேர்த்துச் சாத்திடிற் சிந்தூரஞ்
செம்பது பழுக்குஞ் ஜெயமுள புலத்தியா
ஏமமு மில்லா தெளியவ னானால்
காந்தமு மயமுங் கருணையாய்ச் சரியெடை
சேர்த்துமே பவழ மாக்கிடு லிங்கம்
வால ரசமெடு வாகாய்த் திராவகங்
கோலமாய் விட்டு ஊறிடச் சேர்த்தரை
சிந்தூரஞ் செய் சாப்பிடு முன்போல்
முந்தவே சொன்ன தேகமு மாகும்
மாமுனி பொதிகை வாழ்முனி யுண்டது
பாதகம் போல்வடி வான தேகமாஞ்
சிந்தூர மாகும் ஜெயமுள பாதை
தங்கம்போல் வேதை தாக்கிட வயமும்
இங்கித மாக வரைந்தனர் மாதவ
முனியருளிய சொல் முடிவதாய்ச் செய்யே. 27

சௌக்காரம்

ஆதி சிவனருள் பெற்றவம் மைக்குச்
சேதிய தாக ஜெயசௌக் காரம்
வரையறை யாக வகுத்துமே சொன்னது
உரையா யம்மை யுறுதியாய் நந்திக்கு
முறையோ டேசொல முடிவாய் நந்தி
அகத்தியர்க் கருள அகத்தியர் புலத்தியர்க்
ககத்துடன் சொல்ல தக்க புலத்தியர்
மூலர்க்குச் சொல மூலர் கொங்கணர்க்
கருளவே கொங்கண ரன்பாய்ப் போகருந்
திருவாய்க் கேட்டுத் திரமாய் நிகண்டாய்ப்
பாடியே குகையில் பதிவாய் வைத்திடத்
தேடியே மச்ச முனியெடுத் தப்புறம்
நவமாய்ச் சித்தர் நலமாய்ப் பார்த்துக்
கவனமாய்ப் படித்துக் கருதிட வாயிரத்
தெழுநூ றதனிற் பாடிப் படிக்கத்
தயிலங் களங்குசிந் தூரமும் பார்த்து
அயிலமா மெழுகு அடைவுடன் கண்டுத்
திட்டமா யிருக்கும் ஸ்திரமாம் வேதை

இருக்கின்ற தென்று இன்பமாய்ப் பார்த்துச்
சௌக்கார மட்டுஞ் சரியாய்க் கிளையும்
என்றுமே வகத்திய ரின்பமாய்ச் சொன்னார்
கண்டுமே மச்ச முனியவர் களித்துமே
எண்ணெயை விட்டு வாங்கவே பாடிக்
கோத்திடப் புத்தகங் குணமுள சித்தர்
யாவரு மமுரி யெண்ணெயைப் பாடவுந்
தலைகா லாகப் பாடியே கோத்தார்
சூத்திரந் தன்னிற் சுயம்பெறச் சொல்வேன்
பார்த்துமே சௌக்காரம் பண்புடன் பாரு
பூநீர் விளையும் பொட்டில் பாரு
தானது வடியிற் கல்லுகள் மெத்த
உண்டுமே வெட்டி யுண்மையா யெடுத்துக்
கண்டுமே சமுத்திர நீரதில்விட்டு
எரித்திடச் சுத்தி யினியதோர் கல்லைச்
சரித்துட னெடுத்து தானைந்து மரக்கால்
பெரியதோர் காள வாயிலே வைத்து
விரிபெற நீற்றி விதமுள பாணியை
விட்டுமே மண்டலம் விதமாய் வைத்துக்
கெட்டியாய் மேலே தெளிவையும் பார்க்க
அடைபோ லுப்பாம் அதைவழி பீங்கான்
கோடையி லிட்டுக் குணமாய் ரவியில்வை
காய்ந்து எண்ணெயுங் கக்குமே பாரு
கல்லுப்புச் சொல்வேன் கருத்துடன் கேளு
நல்லொத்த வாருதி நாதமு மாச்சுக்
கடல்நுரை கல்லுங் காண வெடுத்துத்
திட்டமாய்ச் சுக்கான்போல் நீற்றியே யெடுத்துக்
கல்லுப் பவ்வெடை கணக்கா யளந்து
வெல்லுமே யிரண்டையும் விருப்பமா யரைத்துப்
புடம்பெரி தாகப் போட்டெ டுத்திட
மாதா பாணியால் கரைத்துமே பீங்கான்
இட்டிட வுப்பா மினிய புலத்தியா
கெட்டியா யெடுத்துக் கிருபையாய்க் கேளு
சீன மூதி சிறப்புடன் சுண்ணமாய்
வான் மீன் போலச் சுண்ணமு மாகும்
எடுத்துமே யப்புற மினிரச வாதிகேள்
அடுத்துமே யெல்லாஞ் சேர்க்கிற பாகங்

மெயண்ணமாய்த் தேக மினிதாம் பாரு
லிங்க ரசத்தை நினைவுட னெடுத்துத்
தங்கமுஞ் சேர்த்துச் சாத்திடிற் சிந்தூரஞ்
செம்பது பழுக்குஞ் ஜெயமுள புலத்தியா
ஏமமு மில்லா தெளியவ னானால்
காந்தமு மயமுங் கருணையாய்ச் சரியெடை
சேர்த்துமே பவழ மாக்கிடு லிங்கம்
வால ரசமெடு வாகாய்த் திராவகங்
கோலமாய் விட்டு ஊறிடச் சேர்த்தரை
சிந்தூரஞ் செய் சாப்பிடு முன்போல்
முந்தவே சொன்ன தேகமு மாகும்
மாமுனி பொதிகை வாழ்முனி யுண்டது
பாதகம் போல்வடி வான தேகமாஞ்
சிந்தூர மாகும் ஜெயமுள பாதை
தங்கம்போல் வேதை தாக்கிட வயமும்
இங்கித மாக வரைந்தனர் மாதவ
முனியருளிய சொல் முடிவதாய்ச் செய்யே. 27

சௌக்காரம்

ஆதி சிவனருள் பெற்றவம் மைக்குச்
சேதிய தாக ஜெயசௌக் காரம்
வரையறை யாக வகுத்துமே சொன்னது
உரையா யம்மை யுறுதியாய் நந்திக்கு
முறையோ டேசொல முடிவாய் நந்தி
அகத்தியர்க் கருள அகத்தியர் புலத்தியர்க்
ககத்துடன் சொல்ல தக்க புலத்தியர்
மூலர்க்குச் சொல மூலர் கொங்கணர்க்
கருளவே கொங்கண ரன்பாய்ப் போகருந்
திருவாய்க் கேட்டுத் திரமாய் நிகண்டாய்ப்
பாடியே குகையில் பதிவாய் வைத்திடத்
தேடியே மச்ச முனியெடுத் தப்புறம்
நவமாய்ச் சித்தர் நலமாய்ப் பார்த்துக்
கவனமாய்ப் படித்துக் கருதிட வாயிரத்
தெழுநூ றதனிற் பாடிப் படிக்கத்
தயிலங் களங்குசிந் தூரமும் பார்த்து
அயிலமா மெழுகு அடைவுடன் கண்டுத்
திட்டமா யிருக்கும் ஸ்திரமாம் வேதை

இருக்கின்ற தென்று இன்பமாய்ப் பார்த்துச்
சௌக்கார மட்டுஞ் சரியாய்க் கிளையும்
என்றுமே வகத்திய ரின்பமாய்ச் சொன்னார்
கண்டுமே மச்ச முனியவர் களித்துமே
எண்ணெயை விட்டு வாங்கவே பாடிக்
கோத்திடப் புத்தகங் குணமுள சித்தர்
யாவரு மமுரி யெண்ணெயைப் பாடவுந்
தலைகா லாகப் பாடியே கோத்தார்
சூத்திரந் தன்னிற் சுயம்பெறச் சொல்வேன்
பார்த்துமே சௌக்காரம் பண்புடன் பாரு
பூநீர் விளையும் பொட்டில் பாரு
தானது வடியிற் கல்லுகள் மெத்த
உண்டுமே வெட்டி யுண்மையா யெடுத்துக்
கண்டுமே சமுத்திர நீரதில்விட்டு
எரித்திடச் சுத்தி யினியதோர் கல்லைச்
சரித்துட னெடுத்து தானைந்து மரக்கால்
பெரியதோர் காள வாயிலே வைத்து
விரிபெற நீற்றி விதமுள பாணியை
விட்டுமே மண்டலம் விதமாய் வைத்துக்
கெட்டியாய் மேலே தெளிவையும் பார்க்க
அடைபோ லுப்பாம் அதைவழி பீங்கான்
கோடையி விட்டுக் குணமாய் ரவியில்வை
காய்ந்து எண்ணெயுங் கக்குமே பாரு
கல்லுப்புச் சொல்வேன் கருத்துடன் கேளு
நல்லொத்த வாருதி நாதமு மாச்சுக்
கடல்நுரை கல்லுங் காண வெடுத்துத்
திட்டமாய்ச் சுக்கான்போல் நீற்றியே யெடுத்துக்
கல்லுப் பவ்வெடை கணக்கா யளந்து
வெல்லுமே யிரண்டையும் விருப்பமா யரைத்துப்
புடம்பெரி தாகப் போட்டெ டுத்திட
மாதா பாணியால் கரைத்துமே பீங்கான்
இட்டிட வுப்பா மினிய புலத்தியா
கெட்டியா யெடுத்துக் கிருபையாய்க் கேளு
சீன மூதி சிறப்புடன் சுண்ணமாய்
வான் மீன் போலச் சுண்ணமு மாகும்
எடுத்துமே யப்புற மினிரச வாதிகேள்
அடுத்துமே யெல்லாஞ் சேர்க்கிற பாகங்

கேளுமே சுக்கா நீறுப்பு நான்கு
வாளுமே கடல்நுரை யுப்புமேயொன்று
சீனச் சுண்ணஞ் சிறப்புட னொன்று
தானமாய் மூன்று முப்பு வாச்சு
எடுத்துமே பீங்கா னியல்பெற விட்டு
அடுத்துத் திராவக மதுமூன்றுஞ் சேர்த்ததில்
ஒன்றுக்கு நான்கு திராவகம் விடவுங்
கண்டுமே கேளு கருத்துடன் பாரு
வெடியுப் புத்தசம் விருப்பமாய்ச் சீனங்
கடிசே ரிருபத் தைந்துமே சேரு
கடமதி லிட்டுக் கிளரவே திராவகம்
வடித்துமுப் புவில் வாகா யிட்டுக்
கொதித்திடப் பொங்காமல் குணமாய்க் காய்ச்சி
அடியாய் குளம்பா மப்பரு வத்தில்
சாம்பலைப் பரப்பி ஜலுதியாய் மேலே
துணிவிரித் தன்மேல் துடியா யூற்றி
உண்டையாய்ப் பண்ணி யுறதி புலத்தியா
ரவியிலே காய நலமாய் வைத்து
ஐந்துசுண் ணத்தி லடைவுட னெட்டுப்
புடமிடு கோழி பின்பு எடுத்து
முப்பு எடையாய் முன்ரச பற்பம்
நப்புடன் சேர்த்து நலமாய்ப் புகைநீர்
விட்டு அரைத்து வில்லையாய்ப் பண்ணி
கட்டுமே ஐந்து சுண்ணத்தில் வைத்து
லகுபுட மிடுபே ரான வழலையாந்
திடமதாய்க் குருவாந் திட்டமாய் முப்பாந்
திருசௌக் காரமாந் திருநட மாதியாம்
ஆதியாய் முடியா மாதி நடுவாஞ்
சாத்திரந் தன்னிற் சலிப்புடன் மறைத்துச்
சூத்திரந் தன்னிற் றிறந்துநான் சொல்வேன்
சித்த ரெல்லாஞ் சிறப்பாய் மறைத்தார்
பூநீர் வாரி புதுப்பாண் டத்தில்
இட்டுக் கரைத்து இதமாய்நல் லெண்ணெய்
விட்டுமே வாங்கச் சொன்னார் பாரு
வாதிகள் கரைத்து வகையாய்நல் லெண்ணெய்
யூற்றிக் குழப்பி யெண்ணெயை வாங்க
வாரா ததனால் வகையிலா வழலை

சேராப் பேருடன் சேர்ந்துமே பிள்ளை
எடுத்துமே வந்து இதமாய் மண்டையை
விட்டுமே வழலை பிரபல மாகவே
யிதுதான் வழலை யெனச்சொல்வார் வாதி
யொன்றையொன் றாய்நினைத் துருகுவார் வாதி
கண்டுமே சித்தர் கருவை மறைத்தார்
வழலை யிதல்ல வாகான முனியே
சொன்னதைப் பாரு சுயபா ஷாண
மெல்லா நீறு மின்பமா யுபரசம்
வெல்லவே நீறும் விருப்பமா யுப்பு
இருபத் தைந்து இன்பமாய் நீறுந்
துருசது நீறத் தொகையது கேளு
வரிசையாய்த் துருசு பலம்பத் தேகம்
நிறுத்துமே வைத்து நினைவுடன் கேளு
விருத்து சௌக்காரம் புகைநீர் விட்டுக்
குழைத்து மேலே தடவு நீயுங்
கட்டுமே நீறுங் கவரது கோடி
வெள்ளீ யம்மேல் விருப்பமாய்த் தொட்டுத்
துள்ளியே தொட்டுப் போடவே நீறும்
வெங்கல நீறும் விதமினி யென்சொல்வேன்
தங்கமு நீறுந் தானேபா பஷாணம்
இங்கித மாக வியல்புட நீறும்
அடியு முடியு மநாதியு மிதுதான்
வழலைச் சுண்ணம் பொய்யென்பர் லோகர்
நிழல்போற் றெரியு நேராம் பாகம்
முத்தியாய்ச் செய்து முனியது பாரு
சித்தர்கள் மறைத்த திறமை யிதுதான்
சுருக்கைப் பார்த்துச் சுருக்கமாய்ப் பாரு
இப்படிச் செய்தால் வழலை முடியும்
முடிந்தது வழலை முதன்மையாய்ப் பாரு
மன்னே யயத்தை முடிவாய்ச் செம்புபண்
பின்னே செலவு பிரித்துட னெடுத்துச்
சௌக்கா ரம்பணு ஜலுதியாய் வங்கம்
நலமாய் நீற்று நல்லதோர் துருசைப்
பாகமாய் நீற்றிப் பதியவே ரசத்தை
யோகமாய்க் கட்ட வொக்கவே நீறும்
ஒன்பது லோக மொக்கவே பாய்ச்ச

இங்கித மாக ஆகிடுந் தங்கம்
இதுதான் பாதை யிப்படி வெகுவிதம்
முதிரவே யொன்று முடித்து எடுத்திடு
தென்பொதி கையில்வளர் சிறந்த தமிழ்முனி
இந்நவ கோடி சித்தர்க்கறி வித்ததே. 28

அயச்செம்பு - வேறு

சுத்திய தயப்பொடியு மேகநிறை யாகுஞ்
சுகமான வெண்காரி பாதியென லாகும்
மத்தினிய செவ்வல்லி சாற்றிலரை யுருக்கு
மணிசிறிய பயரளவு மணியா யிறங்கும்
சிக்கென வெடுத்துநிரை பாதியிடு காரி
ஜெயமா யரைத்துமே யைம்முறை யுருக்கு
மைக்கினிய கருமணிபோ லுருகுமது மணியாய்
மயமான விபரமினி சொல்லுவது கேளே. 29

கேளுமே கால்வாசி வீரமது கூட்டு
கெடியான புகைநீரி லரைத்துவில்லை பண்ணு
தாளுமே புடம்போடு எடுத்தரைசெய் யுண்டை
தானேதான் ரவியிலிடு காயவை மேலே
காளுமே கெந்தியது முக்காலும் பண்ணு
கனிவாக அரைநீரா லரைஜாம மேகம்
வாளுமே யுண்டைமேற் கவசமது கட்டு
வகையான சுண்ணாம்பு மேலிடவே கேளே. 30

கேளுமே மண்கவச மதின்பேரி லிட்டுக்
கெடியான ரவிதனிலே காயவே வைத்துத்
தாளுமே பொடியாக யெருவதனைப் பொடித்து
தக்கதொரு புடம்பெரிதாய்ப் போட்டுமே யெடுநீ
வாளுமே மூசைதனி லுருக்கிடவே கேளு
வங்கயான ரவியெடுநீ பாருமே மேலுந்
தாளுமே மதியெட்டில் கொடுத்திடவே கேளு
தக்கவய தாகுமே சொன்னரவி பாரே. 31

பாருமே யிதைவைத்துச் செலவுதான் செய்து
பண்பாகத் தவத்தோர்க்குத் தொண்டுமே பண்ணு

சேருமே மலைகளிலே சஞ்சரித்துப் பாரு
ஜெயமான சித்தர்களை வணங்கிநீகேளு
சாருமே வெகுவித்தை வந்திடுமே சித்தி
சதகோடி விதிகோடி சத்துமஹா கோடி
ஏருமே யுழுதாலோ வேளாண்மை யாகு
மிதமான ரசவாதஞ் செய்துமே பாரே. 32

கெந்தகசுத்தி மாத்திரை

கெந்தக சுத்தி கிருபையாய்க் கேளு
நந்தி சொன்னதை நாடியே பாரு
நாத்தந் தசமெடு நாடியே யரைக்கப்
பார்த்துமே சீனம் பதினாறு பலமிடி
யுடைத்துமே சட்டியி லுண்மையா யரையிடு
படைத்துமே வாலை பதியவே மூடி
உளுந்துமண் சீலை யுண்டையாய்ச் செய்து
அழுந்தவே திராவகம் அடைவுட னிறங்கும்
வெள்ளைநீ ராகும் வெண்ஜலம் வருகுங்
கள்ளமா யெடுத்துக் கனகமாய்க் குப்பியி
லடைத்துமே வைத்து அடைவது கேளு
துடைத்துமே கெந்தியி லிட்டுமே யரைரவி
காயவே வைத்துக் கனிவாய்க் கேளு
தாயக மா[illegible]வின் பாலை
வாய்ப்பா யரையிடு வகையாய் மேலே
தூசணி வித்துத் துப்பற வாகப்
பாசமா யதன்மேற் பரப்பியே கெந்தியை
மேலே கடத்தை விருப்பமாய் மூடி
எரித்திடப் புட்டாய் யின்பமாய்க் கேளு
பரித்த வடியிற் பரிவாய்த் தீயெரி
எரித்திட மணியா யின்பமா யிறங்கும்
பாகமா யெடுத்துப் பதிவாய் முன்போல்
ஏகமா யிப்படி ஐந்து முறையும்
பண்ணிடச் சுத்தி பவழம தாகும்
எடுத்துமே ரசமெடை யின்பமாய்ச் சேர்த்து
அடுத்து அரைக்க அதுகரி யாகுங்
களங்கமு மாகுங் கரியையெரி யாதே
வளங்காண் வியாதி வடிவுடன் கேளு
இரண்டுமே நின்ற நிறைக்குமே வாளங்

கண்டுமே யரைக்கால் கனிவுடன் சேரு
அரைத்துமே களங்கா யதிலொரு பணவெடை
நிரைத்துமே தேனில் நிண்ணய மாகவே
யுண்டிட மண்டல முற்றுமே வியாதிகள்
கண்டுமே யொளிக்குங் கவலைப் படாதே
எவ்வெவ் வியாதி கணக்கது கேளு
சுந்தர மான வாத மெண்பது
போகுமே முனிவர் பொருந்தியே சொன்னார்
பித்தமு நாற்பது பேர்ந்துமே போகுஞ்
சிலேத்பன மெல்லாந் திட்டமாய்ப் போகும்
வாதமும் பித்தமும் பருவவே போகுந்
தாதைபோ லவிழ்தந் தந்திட நோவு
தவிடு பொடியாந் தக்கதோர் பத்தியஞ்
சுவதே தேகங் கணக்கது கேளு
சூலைவிப் புருதி தோன்றியே யொளிந்திடும்
வாலையு மாவார் வடிவது மெத்த
குட்டம்பதி னெட்டுங் குறைநோய் போய்விடுந்
திட்டமாய் ஜன்னி போகுமே யொருநொடி
கண்கள்செவ் வலரிப் பூவது போலாம்
புண்கொள் வியாதி காட்டப் போய்விடும்
எங்கள் குலத்திற் கிதுதா னவிழ்தந்
தங்கம் போலாந் தக்கதொரு மேனி
ஈளை யெலிகடி ஏகவே கேளு. 33

தாளகச் சிந்தூரம்

காளைபோல் தாளகங் கனிவாய்ப் பொடித்து
மூன்ரச கெந்தியில் முக்கிய மாகத்
தண்மையா யுருக்கித் தாளக மோடு
கிண்டிடு குப்பியில் கிருபையாய்ப் பவழமாந்
தொண்டுசேர் பணவெடை திரிகடு தனிலிடு
க்ஷயமுத லெல்லாஞ் சலிப்புடன் போகும்
பயமிலைத் திரிநாள் பத்திய மாகச்
செலுத்திட க்ஷயமுந் திட்டமாய்ப் போகும்
வலித்திடு நோய்கள் வலிப்புடன் போகும்
எலிகடி நீங்கு மெண்பது வாய்வறு
மண்டலி கடிகள் வலிப்புடன் போகுங்
கண்ட பொழுதே கருணையாய் நீங்கும்

இப்படிக் களங்கி விதமாய் வெகுநோய்
அப்படித் தீரு மதுபல னாகும்
பவுத்திர மெல்லாம் பதைப்பற் றோடிடுங்
கவுத்துவம் போலக் கருணையு மாகும்
போகமு மாகு மிருந்திடந் தனிலே
பாகமாய்ச் சோறு பதைப்பற வந்திடும்
ரவியில் நூறு கொண்டிடச் சொன்ன
கவியவே போக ரேழாயிரஞ் சொன்னா
ரதையறிந் திட்டா லதுரவி பழுக்குஞ்
சிதையறி மேனி செங்கதி ராகும்
வகையாய்க் கரிபோ லாச்சுதே யென்று
தொகையாய்ச் சொல்லிச் சோம்பித்திரி யாதே
சிவனுடை விந்து ரசத்தைக் கூப்பிடு
அழைத்துத் தவமா யென்னைரட் சியுமென்று
தேவியே கெந்தியே திட்டமா யெனக்கு
ஆவலா யருள வென்றுமே கேளு
சகலமுங் கொடுக்குஞ் சமுசய மில்லை
மூலக் கிராணி சோகையு நீங்கும்
வாலையாய் மேனி வடிவுற வாகுந்
தங்க மாமவர் தவம்புரிந் திடுமுனி
உங்களுக் காக உறுதியாய்ச் சொன்னதே. 34

அயச்செம்பு தங்கநாகஞ் சேர்த்துச் சிந்தூரம்

அயத்தின்செம்பு தானெடுத்து ஆனநான்கு யுகமதா
மாதியொன்று தங்கநாக மானநேர்கொள்ள வெடை
தயத்தின்ரெண்டு சேர்க்கவஃது தானெபிட்டு வெள்ளையாந்
தக்கபிட்டைத் தானெடுத்துத் தானே முன்பு ரவிதனில்
கயத்தினோ ராயுருக்கிக் காணநான்கிற்கொன்றுமே
காதலா யுருக்குசேர்பின் காதலா யுடைத்துமே
பயத்தினேரு ரசமோர்பாக மாகவேயக் கெந்திநேர்
பக்குவம தாய்நிறுத்துப் பாகமா யெடுத்திடே.
எடுத்துமே யரைத்திடாய் கரிசலையிற் சொன்னது
ஏகமா யரைத்துரவி தன்னிலேவை பவழமாம்

டுத்துநூறு செம்புதன்னி லாண்மையா யுருக்கியே
யாதியொன்று தாக்கிட வணைத்திடவே
தங்கமாந்
தொடுத்துரச வாதந்தானும் தொன்மையாக நன்மையாம்
சோதியாதி பேதியாஞ் சுகந்தவர்ண மாற்றுமே
கடுத்துமே அகத்தியர் கனிந்தயச்செம் பதனையே
காதலாய்ப் புலத்தியர் களிக்கவே யுரைத்ததே.35

அயபஸ்பம்

வேம்படி தன்னில் விரும்பியே சொல்ல
அம்மையு நந்திக் கருளிய வாதம்
செம்மையாய் வைத்தியந் தீர்க்கமாய்ச் சொல்ல
நந்தியு மசுவனி தேவருக் கருளப்
புந்தியா யசுவனி புத்திய தாகத்
தன்வந் திரிக்குரை செயத்தன் வந்திரி
வன்மையா யகத்திய வடிவார் முனிக்கு
நன்மையாய்ச் சொல்லிட நாடியே யகஸ்தியர்
புலத்தியர்க் கருளின பெரிய கரிசலை
சூத்திர மாக முப்பத் தாறில்
அயபற் பந்தனை யறிவுடன் கேளு
நயமதாய்த் தந்த ஜடநீ ராலே
மூன்றுநா ளூற முக்கிய மாகவே
நன்றாய்ப் பாணியால் நலம்பெற வரைத்துக்
கரைத்துமே பின்னர்க் காணவே கேளு
யரைத்திடப் பண்ணை யதிலரை யிடுநீ
நிரைத்துமே வீழி வேர்த்தோல் பட்டை
சீவியே யிடித்துச் சிறக்கவே பிழிந்து
ஆவலா யரைத்து யதிலிடு புடமுந்
திரிநே ரிட்டுத் திட்டமா யெடுத்து
அறிவுட னயத்தி லரைவாசி வீரஞ்
சேர்த்துமே வீழிப் பட்டைநீ ராலே
பார்த்து அரைத்துப் பதிவுட னெட்டுப்
புடமிடு நீறும் பெரிதா யயமுந்
திடமதாய் வெள்ளையாய்த் திட்டமாய்ப் போடு
வெள்ளை யாகு மட்டுமே புடமிடு
கள்ளமில் லாமற் கனிவாய்ப் புடமிடு
வல்லமை யோவில் லாதே போனால்

யூகிமுனி கரிசலை - 36

நடமதாய்க் கரியில் வைத்துமே யூதிடு
வெள்ளையாய் நீறும் விருப்பமா யிப்படித்
துள்ளவே செய்தால் துடியாய் நீறுந்
தங்கமு மிப்படி தானவ லோகமு
மிங்கித மாக இட்டிட வெள்ளையாம்
பாடது படாமற் போனால் நீறா
ஏடது பொய்யா மினிரச வாதிகேள்
முடிவினிற் சொன்னேன் முக்கிய மாகத்
துடிகொ ளயநீர் பணவெடை மண்டலங்
கொடுக்க வியாதிகள் குரைநோய் குட்டம்
அடுத்துமே போகும் பாகமாய்ச் செய்து
இப்படிச் செயிலய மியல்பாய் நீறுந்
தப்பியே போனால் தானென் செயலாஞ்
சாத்திரம் பொய்யாஞ் சவங்கிடேல் கேளு
பாத்திர மாகப் பரிவாய்ச் செய்தால்
விருப்பமாய் வேலைசெய் வேலைகள் வாதமாம்
ஆலைகள் போலவே யலைந்தால் பயனென்
அயமது பறபம் ரவியினி லிட்டிடக்
கனியவே யெட்டரை கனிவா யாணியாம்
வரிக்கி வரிநான் சொலமுடி யாது
புத்தியாய்ச் சாத்திரம் பொறுமையாய்ப் பாரு
சத்திய மாகச் சாற்றினேன் கரிசலை
முப்பு விபரம் விதமா யிதுதான்
ஏரு உழுதா லிதமாய்ப் பயிராந்
தார்க்கோல் போட்டால் தகுதியாய் காளை
நடக்கும் பாரு நலமாய்ச் சாத்திரம்
வடநூல் கிரந்தம் வண்மையாய்ப் பார்த்துக்
கரிசலில் சொன்ன கணக்கையும் பார்த்துச்
செய்தால் பலனாம் சித்தமாய்ப் பாரு
வையகந் தன்னில் வகையாய்ப் பிழைநீ
பையவே செய்து பதிவுட னில்லு
பாகமாய் நிரைகள் பக்குவந் தப்பினால்
ஏகமும் போகு மெடுத்துமே பாரு
எதனாற் பார்த்தா லெரிபுடந் தப்பும்
மெத்தவே சொ்ன்னேன் முறைபோல் பாரு
வாளமில்லாமல் மருந்துகள் செய்தால்
தேளாம் வியாதிகள் திட்டமா யேகா

பாகத் துடனே பதியவே நிறையாய்
யோகமாய்ச் செய்தா லொழுங்கது வாகுஞ்
சித்தர் மறைத்த சிறப்பையுஞ் சொன்னேன்
சாதனை யாகத் தர்க்கம்பண் ணாமல்
போதனை யாகப் புத்தியாய் விசாரி
எப்படி யெல்லா மின்பமாய் வருகுஞ்
சொற்படி தப்பினால் சுருக்கமும் பொய்யாம்
நற்கட லதனை நலமாய்க் குடங்கையி
லேற்கவே யுண்ட இனிய மகாமுனி
சொன்னது சூத்திரஞ் சுருக்கமாய்ப் பாரு
இந்நிலந் தன்னி லெடுத்துரைப் போரே
பாடினேன் பாகம் பரிவுடன் பார்த்துத்
தேடியே நின்றால் திறமுடன் செய்தாற்
பலக்குமே வைத்தியம் பண்பாய் ஜீவனம்
வலுத்துமே யாகும் வடமொழிக் கிரந்தம்
பார்த்துமே படித்துப் பதிவுடன் சொன்னேன்
சேர்த்துமே பாரு திட்டமாய் வாதமா
மயத்தையே கூப்பிட் டடியேற் கருளெனத்
தயவாய்ச் சொல்லு தவப்பலங் கொடுக்கும்
ரசத்தையு முழைத்தே நயமுடன் வாதம்
பிசகறக் கொடுக்கும் பிரபல மாக
வுப்பையு முந்த உண்மையாய்ப் பாரு
அப்பினா லுப்பையு மடைவாய்க் கட்டு
உப்புச் சுண்ணம் உண்மையாய்ப் பண்ணு
மெய்யுடன் மூலிகை தன்னிலே யிட்டுக்
கைப்பிடி யாகக் கசக்காது கட்டு
வேறுமூ லிகையில் விரும்பிநில் லாதே
தறுகுறும் பனைப்போல் தர்க்கம்பே சாதே
நாய்கள்வெள் ளெலும்பு நலங்கியே கடித்தால்
மாயமாய்த் தன்கடை வாயி லிருந்து
ரத்தம் வருகும் நினைவுட னக்கும்
மெத்தவே எலும்பி லிருந்தவா றதுபோல்
சித்தமாய் நினைக்குந் தெருநா யதுதான்
அப்படிப் போல வாகுமே மூலிகை
சொற்படி போலத் துரிதமா யுப்பை
முந்தியே சுண்ணம் பண்ணியே மூலிகை
சிந்தனை யாகச் சிறப்புட னிட்டுப்

பிழிந்திடச் சாற்றில் பெருமையாய்ச் சரக்கைக்
கழிந்திடக் கட்டு லோகந் தங்கமாம்
உப்பை விட்டா லுண்மையாய் மூலிகை
தப்பாய்ப் பார்த்தால் தானே யுதைநீ
திட்டாந்தஞ் சொல்வேன் செல்வ புலத்தியா
முட்டவே காய முறுதிகா ணுப்பு
இதையறி மனத்தி லின்பமாய்ப் பாரு
அதுவிது வென்று அலையவே வேண்டாம்
உபதேச மாக வுண்மையாய்ச் சொன்னேன்
நிஜமாய்ச் சூத்திரம் நிண்ணயம் பாரு
தட்டான் வைத்த தாயார் தன்னை
யிட்டமா யுறுதியா யின்பமாய் நினைநீ
வாதத்தை முன்னே வகையுடன் பண்ணு
நீதமாய்ப் பசுக்கள் நிச்சய மாகுஞ்
செய்துமே மோட்ச கதியடை நாளும்
பையவே தேகம் பதிவாய்க் கற்பமா
முண்டிட நிறுத்து உண்மையாய் நீற்றுங்
கண்டபே ருடனே கருச்சொல் லாதே
துரிசது நீரால் தொகைரசங் கட்டும்
வரிசை யாகக் கவன வழியது
வாதஞ் செய்தால் வரிசையாய்த் தங்கம்
பாதையாய்ச் செய்தால் பலனது உண்டாம்
அயத்தின் செம்பை யடைவுட னெடுத்துப்
பிசகிலா ஜீவனம் பண்ணியே யெல்லா
நயமதாய்ப் பாரு நாடி புலத்தியா
தனியே யிருந்து தாட்டிக வாதம்
பாரினி லென்ன சொல்வேன் பரிந்து
இதையுஞ் சுருக்கிக் கரிசலைப் பாடினேன்
இதையுஞ் சுருக்கி இனமுப்பத் தாறாஞ்
சுதையாய்ப் பாடினேன் சூத்திரம் பாரு
சாத்திரமெல்லாந் தடையறப்பாரு
சூத்திர மகப்படுஞ் சுருதி புலத்தியா
கேள்வியி னாலே கெடிபெறச் சுட்டுத்
தாழ்வாய்ப் போகத் தப்புநினை யாதே
மனிதர்க ளெல்லா மாயா மலத்தர்
தனியே சாத்திரந் தடையறப் பார்த்துச்
சுட்டா லபிக்குஞ் சுடாவிடில் வருமோ

கட்டாயமாகக் கனிந்துமே சாத்திரஞ்
தேடியே பாரு செல்வ நிலைத்திடுங்
கூடியே சரக்கில் குறிப்பை யறிநீ
எல்லா மறிந்து இன்பமாய்ச் சோதி
சொல்லாற் பெரியோர் சொன்னது புத்தி
சமுத்திரந் தன்னைத் தான்குடங் கையில்
அணைத்துமே வாங்கி யதையுண் மாமுனி
சொன்னது சூத்திர முப்பத் தாறுமே
நன்னய மாக நவிலவே பாரே. 36

யூகிமுனி கரிசலை - 36
முற்றுப்பெற்றது

வாலைமனோன் மணிபாதம்
சீலமுடன்றினம் வாழ்க.

ஓம் தத் ஸத்

கடவுள் துணை

யூகிமுனிவர் அருளிச் செய்த சுருக்க நூற்றின் முகவுரை

இரசவாத சாஸ்திர சகோதரர்களே! இச்சிறிய கிரந்தத்தையச்சிட நேரிட்டகாரணம் பின்வருகிற விதமாம்.

அடியேனால் வெளிப்படுத்தப்பட்ட இரசவாத சிந்தாமணியின் முதல், இரண்டாம் பாகங்களாகிய இரண்டையும் வாங்கி, அவற்றிற் சொல்லப்பட்ட நானாவித முறைகளையும் ஆங்காங்கு கண்டிருக்கிற வகை விபரத்துடன் செய்து சித்திபெற்று ஆனந்தித்து வரும் நண்பர் பலர், கடிதமுகத்தானும் பிறவாற்றாலும் அதை எமக்கறிவித்து மேற்படி இரசவாதசிந்தாமணியின் மற்றப் பாகங்களையும் கூடிய சீக்கிரம் அச்சிட்டு வெளிப்படுத்துபடி வற்புறுத்தி வருகின்றனர். ஆனால் அடியேனுக்கு அடிக்கடி நேரிடும் பற்பல வகையான குடும்பத்தொல்லையாலும் வேறுவகை அசந்தர்ப்பங்களாலும், எம்மைப் பலவிதத்தாலும் ஆதரித்துவரும் கனவான்களின் கோரிக்கையை அவர்களிஷ்டப்படியுடனுக்குடன் நிறைவேற்ற தடைப்படுத்தப் பட்டவனாயினும், கடவுளினது கிருபையாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும், பற்பலபண்டித சிரோன்மணிகளின் அநுக்கிரகத்தாலும் மேற்கண்ட மற்றப் பாகங்களையும் வெளிப்படுத்துவதற்காம் பிரயத்தினங்களிலேயே கவலையுள்ளவனாய் முயற்சிசெய்து வருகின்றேன். ஆனால், இதற்கிடையில் இரசவாத சாஸ்திரத்தில் அநுபவசித்தி மிகுந்த ஒருபெரியவரின் தரிசனங்கிடைத்தது. இரசவாதசாஸ்திரத்தில் அவருக்கிருக்கும் பாஷா ஞானம், வியாக்கியான ஞானம், கைபாகம் செய்பாகம், புடபாகம் முதலியவைகள் மிகவும் வியக்கத் தக்கவைகள். அம்மகான் இவ்வேழை மீது கிருபையுடன் அன்பு பாராட்டி வந்தனர். அவர் அதிக சந்தோஷமாக இருக்கும் சமயத்தில் இரசவாத சாஸ்திரத்தில் சுருக்கமானவும், கூடியவரையில் தெளிவாகவும் தங்களுக்கனுபவமானதாகவும் ஒருநூலை வெளிப்படுத்தினால் அந்தச்சாஸ்திரத்திற்பழகி வருபவர்களுக்குப் பிரயோசனமா யிருக்குமெனப் பிரேரேபித்தேன். அந்தமகான் அடியேன் வார்த்தையை யுடனே யாமோதித்துப் பின்வருகிறபடி சொல்லி யிதனை யநுக்கிரகஞ் செய்தனர்.

இதிற் சொல்லப்பட்ட முப்பூ முறைகள் தமக்குக் கைவல்லியமானவைகளாம். உண்மையான மஹான்கள் பலரிடமிருந்து கைபாகத்துடன் தெரிந்துகொண்ட குருமுறைகள் இச்சிறுகிரந்தத்திற் சொல்லப்பட்டவைகளேயாம். இச்சுருக்கத்தில் தெளிவாயும் விபரமாகவும் சொல்லி யிருப்பதுபோல வேறெந்த சாஸ்திரங்களிலும் சொல்லப்பட வில்லையாம். பல சாஸ்திரங்களிலும் அவை பரிபாஷையாகவே சொல்லப்பட்டிருப்பதால் அவற்றை எல்லோரும் அறிந்துகொள்வது துர்லபமாம், அப்படிக்கில்லாமல் இச்சிறு நூலில் மறைவின்றித் தெரியும் விதமாய்ச் சொல்லப்பட்டு அநுபவத்திற்கும் ஒத்திருப்பதால், லோகோபகாரமாயிருக்கும்படி இந்தச் சாஸ்திரத்தை யச்சிட்டு வெளியிட அடியேனுக்குக் கட்டளையிட்டனர். அவர் கருத்தின்படியே இதனை வெளியிடலாயிற்று. இதிற் சொல்லப்பட்ட முறைகள் மகா உன்னதமானவைகளாகவே காணப்படுகின்றன. ஆனால் இவ்விஷயத்தில் அநுபவசித்தி பெற்றவர்கள் இதன் உண்மையை யறிந்துகொள்வார்கள்.

ஆகையால் லோகோபகாரச் சிந்தையுள்ள இம்மகானுக்கு அடியேன் இருதய பூர்வமாக நன்றியுள்ளவனாயிருப்பது போலவே, இதனைக் கைக்கொண்டு, ஆழ்ந்தகருத்துடன் கையாண்டு அநுபவசித்திபெறும் ஒவ்வொருவரும் அப்படியே நன்றியுள்ளவர்களாயிருக்கும்படி சர்வதயாபரக் கடவுள் உதவி புரிவாராக! ஆமீன்.

முப்பூவின் பெயர்

வழலை	அண்டம்	பிண்டம்	இடைகலை
சுழிமுனை	பின்கலை	அம்பு	எரி
பரிதி	மதி	வில்	அரிதாரம்
இடி	இரண்யகர்ப்பம்	இறையம்	கோசம்
கௌரி	தனித்தியம்	பீசம்	மேகம்
வாயு	அமுரி	உரி	உவர்
உவர்மண்	கடுக்காய்	சிகை	சுண்ணம்
தசைநஞ்சு	திரிகுணஜலம்	நஞ்சு	நாதம்
பாஷாணம்	பூமிநாதம்	வயிரம்	விந்து
அடி	அமாவாசை	அரக்கி	ஊனுப்பு
ஐம்பத்தொன்று	கணபதி	கம்பி	கருநெல்லி
கிரகம்	குயவன்	கொள்ளி	நடு

நவமூலி	நீருப்பு	பிரதமை	பூநீர்
மிதுனம்	முடி	மேடம்	லவணம்
வண்ணாலை	விஷமி	விஷம்	வெடியுப்பு
வெண்சாரை	அனாமி	எழுபிறப்பு	ஐவர்
ஓசை	கண்மணி	கதிர்	கமலம்
கமி	குடிபோம்வீடு	கூற்றன்	சாரி
சிங்கி	சுடர்	சுட்டல்	சுயம்பு
சூடன்	நாயகம்	நிலப்பூடு	நீரன்னம்
பச்சை	படிகம்	பண்ணை	பரமன்
பிடாலவணம்	புஷ்டி	பொட்டல்	மடையன்
மணற்பொடி	மலம்	மவுனம்	மாசி
முயல்	லிங்கம்	விஷ்ணு	கெடி
வெளி	அக்கினிக்கட்டி	அங்கி	அயம்
அவுரி	இந்திரகோபம்	இரசம்	இராசவர்க்கம்
உரம்	உருளை	ஏகசவுக்காரம்	ஏமம்
ஒளி	கடலிற்பாசி	கண்டங்கத்திரி	கண்ணாடி
கத்தம்	கரடு	கரந்தை	கரும்பூனை
கருவி	நளிச்சுண்ணம்	கனல்	கனல்மேலுப்பு
கன்னி	கனமம்	காரீயம்	காவி
குங்குமம்	குரு	குருத்து	கொக்கு
கொச்சி	கொடி	கொன்றை	கோதை
கோமயம்	கோரோசனை	சங்கமம்	சங்கு
சந்நியாசிமண்டை	சமாதி	சாபீசம்	சாளக்கிராமம்
சிங்கு	சுக்கான்	சுத்தம்	சூக்மம்
சூலம்	சொறி	சோடம்	சோதி
சோமநாதம்	தலைப்பிள்ளை	தாது	திருமேனி
துத்தி	துருசு	தூலம்	தேர்க்கால்
தொட்டி	நட்டோடு	நந்தி	நாகம்
நிலவுப்பு	பஞ்சமித்திரம்	படலம்	பரம்
பரி	பாலைநிலம்	புத்தான்	புரியட்டம்
புனுகு	பூரம்	பூர்ணம்	பொன்னூமத்தை வித்து
மரம்	மதனப்பூண்டு	மதி	மந்திரம்
மலைருது	மின்	மீனம்	முட்டை
மூத்தான்	யானைக்கல்	ரவி	வங்கு
வலியான்	வள்ளி	வாசி	வியாக்கிரம்
விருட்சம்	வெண்	கண்டர்	வெண்காரம்

வெள்ளையாரை என்னும் இவை தொண்ணூற்றாறு நாமங்களாம்.

தீக்ஷை நீரின் பெயர்

அண்டநீர்	அகாரநீர்	அப்பு
அமுதம்	அமுரி	அருக்கன்பால்
அறுவகைநீர்	ஆற்றுவெள்ளம்	இளங்குமரிநீர்
உகாரநீர்	உதகம்	உப்புநீர்
ஊசிநீர்	ஐவிரலிநீர்	ஒகாரநீர்
கங்கை	கருநீர்	கல்நீர்
கவந்தநீர்	கழுதைநீர்	கள்ளு
கன்னிருது	காக்கைநீர்	காந்தமலரொட்டிநீர்
காரநீர்	கிளிஞ்சிநீர்	கூதம்பைநீர்
கும்பிடுகல்நீர்	குருதி	கெங்கைநீர்
கெர்ப்பநீர்	சத்தீநீர்	சம்பளச்சாறு
சரஸ்வதி	தீர்த்தம்	சருகுநீர்
சாராயம்	சிப்பிநீர்	சிவதீக்ஷைநீர்
சுத்தகங்கை	சுரோணிதம்	சுண்ணநீர்
செந்தேன்	ஜெயநீர்	சையோகநீர்
சோடநீர்	சோமநீர்	சோரி
தசமநீர்	தண்ணீர்	தயிலம்
தாளிச்சாறு	திராவகம்	திரிபுரை
தீநீர்	தூபநீர்	தூமை
நத்தநீர்	நவச்சாரநீர்	பனிநீர்
நாதம்	பாளைநீர்	பஞ்சதீக்ஷைநீர்
பழச்சாறு	பிரணவநீர்	பிரவாகம்
புகைநீர்	புவனை	பூச்சாரநீர்
போகாப்புனல்	மதநீர்	மதிநீர் மது
முலைநீர்	முன்துளிர்நீர்	மூலப்புளிநீர்
மேனிப்பால்	வண்டு	வஸ்துநீர்
வாலைநீர்	வெண்ணீர்	வேசரிநீர்
வேர்வை	யோகதீக்ஷைநீர்	ரீங்காரநீர்

முதலியவவைகளாம்.

உ

கடவுள் துணை

யூகிமுனிவர் அருளிச்செய்த சுருக்கம் நூறு

ஆதிசிவன் தன்பாத முமையாள் பாதம்
ஆதியாம்க ணேசனுடன் முருகன்பாதம்
வாதியாம் பதினெட்டுச் சித்தர்பாதம்
வடிவான ரிஷிபாதம் போற்றி செய்து
நீதியாய்ச்சகல நூல் தன்னைத்தானும்
நிர்ணயமாய்த் திரட்டியே யிந்தநூலைப்
பாதிமதி யணிந்தபர னருளினாலே
பகர்ந்திட்டேன் பார்த்திட்டால் வாதமாமே. 1

வாதமே சிவன் தானுந் தேவிக்குச் சொல்ல
வகையானதேவிதா னந்திக்குச் சொல்ல
நீதமாய் நந்திதான் அசுவினிக்கு
நிச்சயமாய்ப் போதிக்க வவர்கடானும்
காதலாய்விசுவனுக்கு முபதேசிக்க
கசடன்றி அகஸ்தியரும் புலஸ்தியர்க்கு
வேதமாய்ச் சொல்லிவிட்டார் புலஸ்தியர்தானும்
வினோதமா யுட்கொண்டார் கருத்தாற்றானே. 2

கருத்தாகப் புலஸ்தியரும் தேரையர்க்குச்சொல்லக்
கனிவான தேரையரும் சந்தோசித்து
பெருத்தாக யூகிமுனிக் குபதேசித்தார்
பெருமையா யுலகத்தோர் பிழைக்க வேண்டி
நறுத்தாக வாயுர்வே தத்தைத்தானும்
நலமாகத் தீக்ஷைவிதி யைந்நூற்றுக்குள்
உரித்தாகப்பாடினே னுவமையாக
வுண்மையிது வென்னூலை யுகந்துபாரே. 3

உகந்துபார் வாதகாண்டம் ரெண்டிற்றானும்
உகமையாய்க் களங்குவகை லகுவாய்ச் சொன்னேன்
பகர்ந்துபார் தீகைஷவிதி யைந்நூற்றுக்குட்
பதிவாக சவுக்காரச் சுண்ணம் சொன்னேன்
தகுதிபார் சவுக்காரச்சுண்ணம் வைத்துத்
தக்கதொரு களங்குவகை செந்தூரங்கள்
தொகுதிபார் சேர்த்தரைத்தால் வாதமாகும்
துடியாகப் பாகமதைச் சரியாய்ப்பாரே. 4

பாகமாய்ச் சவுக்காரச் சுண்ணத்தோடு
பதிவான கல்லுப்புச் சுண்ணமாக
ஆகமாய்க் களங்குவகை சிந்தூர மார்க்கம்
அடைவான திராவகமும் கெந்திச் செம்பு
யோகமாய்க் காரீயச் செம்புமார்க்கம்
உண்மையாய் நாகத்தின் ஜெயநீர் மார்க்கம்
பாகமாம் சங்கத்தின் திராவகத்தின் மார்க்கம்
பரிவாக வெடுத்துமே சொல்வேன் பாரே. 5

சொல்லவே யவரெல்லா மோதலாச்சு
சுகமான சவுக்காரச் சுண்ணத்தாலாச்சு
மெல்லவே தூர்த்தருக்குத் தோன்றாதப்பா
விரும்பினானினைவுக்குள் வந்து தோயும்
கல்லவே சவுக்காரச் சுண்ணத்தாட்டுக்
கனிவான சதாசிவனும் காணார்காணார்
நல்லவே நந்தியுமே கேட்டுக் கொண்டார்
நான்கண்டு தீகைஷயிலே சொன்னேன் பாரே. 6

பாருமே சித்தரெல்லாஞ் சவுக்காரத்திற்
பதிவான பூநீரை யளந்து விட்டு
நேருமே மூத்திரத்தை யூற்றச்சொல்லி
நிலவரமாயெண் ணெய்விட்டுச் செய்யச் சொல்லி
காருமே சுண்ணத்திற் றாளிக்கச் சொல்லிக்
கனிவு பெற மறைவாகச் சொல்லிப் போட்டார்
நாறுமே சவக்காரங் கெட்டுப்போச்சு
நலமானவழலை யென்ற நாமம் போச்சே. 7

நாமமென்ன சொல்லுகிறேன் பூமிநாதம்
நலமானமுதல்வழலை சுக்கானாச்சு
காமமென்ன வதிலிருந்து பூநீர்வந்த
காரணத்தாற் சவுக்காரச் சுண்ணமாச்சு
வாமமென்ன சுக்கானை நீற்றுப்போட
வகையாகக் கடுஞ்சுன்னம் சுக்கான் சுன்னந்
தாமமென்ன பூநீரில் சேர்ந்த போதே
தடையறவே வெகுகார மாச்சுதானே 8

ஆச்சுதே மாதவிடாய் முறிந்து போச்சு
அப்பாலே சொல்லுகிறே னுற்றுக்கேளு
வாச்சுதேகல் லுப்பில் சேர்ந்தபோது
வகையான கல்லுப்பும் கொடிய சுன்னம்
தாச்சுமே சரக்கெல்லாம் நீற்றுக் கட்டும்
தடையன்றிவா தமெல்லா மேவல் கேட்கும்
காச்சுதே அத்திமரம் போலேயாகுங்
கனிவான வாதந்தான் கைக்குள்ளாமே. 9

வழலை

உள்ளாக வழலையொன்று சொல்லக்கேளு
உற்றுமே பார்த்திடவே சித்தியாகும்
கள்ளமே யில்லையையா சொல்லக்கேளு
காரியமாம் லகுவாகு மிதுதான்பாரு
துள்ளமாம் வெயிலுக்குள் பூமிநதம்
துடியாக வகை வகையாய்ப் பொங்கிநிற்கும்
உண்மையாய் மஞ்சளிலே சிவந்துபோகு
முடிவான பூனீரு பூர்க்கும்பாரே. 10

பூர்க்குமாம் சித்திரைவை காசிக்குள்ளே
பூரணமாம் வெகுசுறுக்கு பூர்க்கும்பாரு
ஆர்க்கமாம் பூனீரு புசங்கு வாரி
அன்பாகச்சுக்கானை யூதிக்காண்டு
ஏர்க்க வேசுக்கானீர் பதக்குவாரி
யெழிலான பாணிதா னொட்டிரட்டி
தார்க்கமா யூத்தியே சுக்கானைத்தான்
தடையற்று மூதியே கரைத்துக் கொள்ளே 11

கரைத்துமே பூனீரும் போட்டுப்பாரு
        கனிவாகக் கொதியிட்டுத் திரிநாள் வைத்து
நரைத்துமே தெளிவைத் தான் பார்க்கும்போது
        நலமாக மஞ்சள் போற் றோன்றும்பாரு
நரைத்துமே தெளிவிறுத்துப் பீங்கானி லிட்டு
        நலமான குழம்பாகக் காய்ச்சிக் கொண்டு
கரைத்துமே கல்லுப்புப் பலமும் நாலு
        தடையறவே யெடுத்து மே சொல்லக் கேளே. 12

கல்லுப்புச் சுன்னம்

சொல்லவே கல்லுப்புக் கட்டியாகச்
        சுருதியாய்ப் பலம்நாலு எடுத்துக்கொண்டு
நல்லவே சுண்ணாம்பு படியிரண்டு
        நலமானசட்டியிலே பாதியிட்டு
கல்லவே யதின்மேலே கல்லுப்பை வைத்துக்
        கனிவாகவதின்பேரில்சுன்னமூடி
வல்லவேயதின் பேரில் சட்டியாலே
        வளமாகமூடியே சொல்லக்கேளே. 13

கேளுமே பெரும்புடமாய் வைத்துப் பாரு
        கிருபையாய்க் கல்லுப்பின் கசிவுபோகும்
ஆளுமே கல்வத்தி லிட்டுக்கேளு
        அடவான சவுக்காரக் குழம்பை விட்டு
தாளுமே யரைத்துமே வில்லை தட்டித்
        தடையறவே யுலரவைத்துத் தாக்கக்கேளு
மாளுமே கற்சுன்னம் கீழ்மே லிட்டு
        மதிப்பாகவைந்தெருவிற் புடத்தைப் போடே. 14

போட்டுமே பார்த்தவுடன் வெள்ளையாகும்
        போக்கோடே சவுக்காரக் குழம்பைவிட்டு
காட்டுமே யரைத்தரைத்து முன்போற் போடக்
        கடுமையாம் முப்புவென்ற பேருமாச்சு
வாட்டுமே சகலதுறை யிதுக்குள்ளாச்சு
        வகையாக நீற்றினமு மிதுவே யாச்சு
காட்டுமே சவுக் காரமிதுயோச்சு
        தடையறவே வழலையென்ற சுன்னமாச்சே. 15

சுன்னமென்ற சவுக்காரச் சுன்னத்தோடு
சுகமாக வீரத்தை நாலுக்கொன்று
கள்ளமாய்ச் சேர்த்தரைத்துக் கொள்ளத்தானும்
களிகூற ரத்தம்போற் சிவந்துகாணும்
நள்ளமாய்க் காய்ச்சினதோர் குழம்பினாலே
நலமாக விட்டரைத்து வில்லை தட்டிப்
பின்னமாய்க் கற்சுன்னம் கீழ்மேலிட்டுப்
பிசகாமற் புடம்போட்டு மெடுத்துப்பாரே. 16

எடுத்திடவே யிப்படியே யைந்து திறம்போட
விதமான வீரத்தைச் சேர்த்துச்சேர்த்து
அடுத்துமே புடம்போட்டு மெடுத்துக்கொண்டு
அடவாக சவுக்காரங் கடுமையாச்சு
கடுத்துமே கடுங்கார மெத்தவாகும்
கனமான சவுக்காரச் சுன்னத்தாலே
விடுத்துமே சகலமுந்தான் சுன்னமாகும்
விதமான சுன்னத்தின் போக்கைக் கேளே. 17

போக்கென்ன சொல்லுகிறேன் பேறுமெத்த
பெருமையாய்ச் சவுக்காரம் பல மெடுத்து
வாக்கென்ன சொல்லுகிறேன் நாலத்தொன்று
வகையான வீரத்தை நிறுத்துப்போடு
நாக்கென்னசொல்லுமே சொல்லக் கேளு
நலமான சவுக்காரக் குழம்பினாலே
தாக்கென்ன வரைத்துமே வெள்ளீயத்தில்
தடையறவே பலத்தகட்டிற் கவசங்கட்டே. 18

கட்டியே காயவைத்துப் புடமே போடக்
கனமான வங்கமது நொறுங்கிப் போகுந்
தட்டியே யெடுத்துமே கல்வத்திலிட்டுத்
தடையறவே சவுக்காரக் குழம்பினாலே
முட்டியே யரைத்துமே மூன்று புடம்போட
முயற்சியாய் வெள்ளீயஞ் சுன்னமாகும்
வட்டியே வெள்ளீயச்சுன் னத்தாலே
வகையான துரிசுதா னீறும்பாரே. 19

நீறான வெள்ளீய நீறுநாலு
நிலையான வீரமது ஒன்று கூட்டி
ஆறான சவுக்காரக்குழம்பினாலே
அதட்டி யேயரைத்துமே துரிசுமேலே
காறாகக்கவசமிட்டு ரவியிற்காய
கனமான குக்குடத்திற் புடத்தைப்போடு
தாறாகக் கடுஞ்சுன்னந் துரிசுமாகும்
தடையறவே பசிக்காத சுன்னமாச்சே. 20

சுன்னமா மதயானை சுன்னமாச்சு
சூக்ஷமமாம் யானையென்ற சூதராஜன்
நன்னயமாய்க் கட்டியே மணியு மாகும்
நலமான வாதந்தான் ஏவல் கேட்கும்
கன்னல் போற்றலைக்கமுது கைக்குள்ளாகும்
கனமான வாத வித்தை யெளிதிலாகும்
இன்னிலத்திற் பெரியோரா யிருந்துவாழ்வா
ரிதமான துரிசியினா லெல்லாமாமே. 21

ஆமென்று துரிசிநீர்பண வெடையெடுத்து
அன்பாக விராலியிலை தன்னிலிட்டுக்
காமென்று பிசைந்துமே மூன்றுநாள் வைத்துக்
கனிவாகப் பிசைந்துவரக் கரண்டியிட்டுத்
தாமென்று சூதமது பலமுமிட்டுத்
தாக்கியே ஓடவே காச்சிப்போடு
வாமென்ற இட்டலிபோற் சூதமாகும்
வடிவானசூதத்தின் மார்க்கங்கேளே. 22

மார்க்கமாய் மத்தங்காய் தன்னில்வைத்து
மயமாகப்புடம்போட மதியைப்போலே
ஏர்க்கவே கரியிலிட்டே யுருக்கிப்பாரு
இதமான கரியினின்றே யுருகியாடும்
ஆர்க்கமா யெடுத்துமே வைத்துக் கொண்டு
அடைவாக வாதத்தை யறியக்கேளு
வேர்க்கவே தங்கமொன்று நாகமொன்று
விருப்பமா யுருக்கியே முகத்திற்றானே. 23

தானேதான் பூதமொன்று கொடுத்துருக்குத்
தப்பாமற் களங்காகும் செம்புநூறில்
வானே நீயொன்றிடவே மாத்துபத்து
வகையான வாதந்தான் இதுவே மார்க்கம்
கானேதான் சிந்தூரம் பண்ணியுண்ணு
காயசித்தி யேமசித்தி கணத்திலாகும்
தாயே தான் நினைப்பிருந்து செய்யவேணும்
தடையற்ற சிறுபிள்ளை யாகும்பாரே. 24

பாருமே வழலைவிட்டால் பூநீர்தானும்
பாடியாபூ நீரின் எண்ணெய்போகா
காருமே படிப்படியா யேற மாட்டார்
கனமான குருமுறையும் செய்முறையு மில்லை
வாருமே பேய்க்கூத்தால் சுட்டுக்கெட்டு
வடிவானவடி யினின்று தத்தியேறு
தாறுமே நுனிமரமே யேறித்தேரு
தாக்குமே வழலை விட்டால் விழலாய்ப்போமே. 25

விழலாகப் போகாமல் வழலைப்பாரு
விருப்பமாய்ப் பின்னாலே பூநீர்பாரு
அழலாக வதின்பின்னே வங்கம்பாரு
அடுத்துமே யதின்பின்னே துரிசுபாரு
நிழலாகவதின் பின்னே சூதம்பாரு
நிலைத்துமே யதன்பின்பு தங்கம்நாசம்
தழலாகக் களங்காகும் எடுத்துக்கொள்ளு
தாக்கிடவே தங்கமாம் செம்புதானே. 26

தானென்ற சவுக்கார வழலையின்பேர்
தப்பியே தெரியாமற் போனார்கேளு
வானென்று வண்ணானைக் கேட்டுக் கொள்ளு
வடிவான வண்ணான்தான் சொல்வான்பாரு
ஊனென்ற உவர்மண்ணும் சுன்னமென்பான்
உற்றுமே யிவைரெண்டு மெடுத்துக் கொள்ளு
கானென்ற நீற்றினங்கள் வந்தபோது
கடுமையா மிதைவிட்டு மறைத்துக்கொள்ளே. 27

அரைத்துமே புடம் போட எல்லாஞ் சுன்னம்
அறிவு கெட்டவாதிகளே யென்ன சொல்வேன்
முரைத்து மே திரிந்தாலே என்னலாபம்
முக்கியமாய்ச் சவுக்காரம் வைத்துக் கொள்ளும்
சிரித்துமே சொல்லாதே யொருவரோடே
சொன்னாக்காற் பலனில்லை வாத மார்க்கம்
தரைத்து மே சவுக்காரச் சுன்னம் வைத்துத்
தரிப்பாகச் சரக்குகளை நீற்றிக் கொள்ளே. 28

கொள்ளவே சரக்கெல்லாஞ் சொன்னபடி கேட்கும்
கொடுமையாய்ச் சொல்லாதே கட்டைப்பாரு
விள்ளாதே யொருவருக்கும் சொல்லிடாதே
விருப்பமாய் வழலையென்ற கல்லைப்பாரு
உள்ளபடியெல்லாமே சித்தியாகும்
உறுதிமெத்த வயித்தியத்தை முன்னேபாரு
தள்ளமாய்ப் பாகமாய்ச் செய்து கொள்ளு
சகலசித்துமாடலாம் தாக்கிடாயே 29

சவுக்காரம்

தாக்கிடவே சிவன்வைத்த சவுக்காரந்தான்
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டா ரன்பாய்த்தானும்
வாக்கிட வேசவுக்காரம் சொன்னாள் பாரு
வகையாக வதற்கிது தான் சுருக்குமாகும்
நோக்கிடவே பூநீறு பதக்குவாரி
நுணுக்கமாய்ப் பாண்டத்தி லிட்டுக்கொண்டு
பாக்கிட வே கற்சுன்னம் படியுநாலு
பதிவான பாணியது படி யீரெட்டே. 30

எட்டுமேயூற்றியே கரைத்துக்கொண்டு
இதமாக மூன்று நாளானபின்பு
வட்டுமே தெளிவிறுத்துப் பீங்கானிட்டு
வடிவான உமிநெருப்பில் சுவறக்காய்ச்சி
நட்டுமே குழம்பான பதமும் பார்த்து
நலமாக வெடுத்துமே யப்பால்வைத்து
விட்டுமே சீனமது பலமும் சேரு
விருப்பமாய்க் கரியில்வைத்து பொரித்துப் போடே 31

சீனச் சுன்னம்

போட வேநீர்போக வெள்ளையாகப்
பொரித்துமே கல்வத்திலி லிட்டுக்கொள்ளு
ஆ[illegible]வே சவுக்காரக் குழம்பைவிட்டு
அதட்டியரை வில்லைசெய்து ரவியில் வைத்து
காடவே பெரியபுடம் போட்டெடுக்கக்
கடுங்காரஞ் சீனமது சுன்னமாகும்
நாடவே பின்பொருக்காக்கல்வத்திட்டு
சலமாக வரைத்தபின்னர் காயப்போடே. 32

போடவே கற்சுன்னம் நடுவே வைத்து
பொறுக்க விப்படியைந்து திறந்தான்போடு
ஓடவேயைந்துதிறம் போட்டெடுத்து
ஊட்டுமே வீரமது நாலத்தொன்று
நாடவேசவுக்காரக் குழம்பைவிட்டு
நாடியேயரைத்த ரைத்துக் குக்குடத்திற்
போடவேசீனமது சுன்னமாகும்
புதுமையாங்கவர் கேளு போக்குத் தானே 33

[illegible] தாளகத்தைப் பலமும் வாங்கிப்
போக்கோடே கற்சுன்னம் படியும்போட்டு
[illegible]ணியது படியும்விட்டு
[illegible]யான தாளகமு மதிலேபோட்டு
[illegible] வடுப்பதனி லேற்றிக் கொண்டு
தடையறவே கமலம்போ லெரியவிட்டு
பாக்கான் தலம்பியெடு தாரந்தானும்
பதியான வெண்ணெய் கக்கிச் சுத்தியாமே. 34

சுத்தியாந் தாளகத்தை யெடுத்துக்கொண்டு
சுயமான சீனத்தின் சுன்னம்நேரே
பத்தியாய்ச் சவுக்காரக் குழம்பினாலே
பதிவாக வரைத்துமே தாரமேலே
முத்தியாம் தடவியே தணக்காகத் தான்
முடிவாக ரவியிலிட்டு தினந்தானேழு
சத்தியாய்ச் சுண்ணாம்பாற் கவசம் செய்து
சரியான குக்குட்த்திற் சுன்னமாமே. 35

சுன்னமாம் தாளகத்தி னீறெடுத்துச்
சுகமாக வீரத்தையிடையே சேர்த்து
நன்மையாய்ச் சவுக்காரக் குழம்பினாலே
நாடி யரை மஞ்சளா முருட்டிக் கொண்டு
பின்னமில்லைக் காயவைத்து வைத்துக் கொண்டு
பிரட்டியே யதின்பேரில் சீனச்சுன்னம்
கன்னலாய்க்கட்டி யைவைத்துத் தானுங்
கவுதாரிப்புடம்போட்டே யெடுத்துக்கொள்ளே. 36

எடுத்துமே செம்புநூ றொன்று ருக்கி
யிதமாக ஒன்றுகொடு தங்கமாக
அடுத்துமே தங்கமது ஆணியில்லை
அரிதார மாத்துத்தா னதிக வேதை
நடுத்துமே வெள்ளிக்கு இடையேசேர்க்க
நலமான மாத்தெட்டுத் காணுங்காணும்
படுத்துவிவ் வேதைபத்திப் பாருபாரு
பதிவான பாகத்தை யறிந்துபாரே. 37

பதிந்துபார்கற்சுன்னம் பூனீராலே
பதிவான எல்லாமு நீற்றுப்போகும்
அறிந்துபார் தாய்தகப்ப னிரண்டினாலே
அளவற்ற பிள்ளைகள் தான் றொம்பவுண்டு
கதிந்துபார் சவுக்காரம் வைத்துக் கொண்டால்
கனமான திறவுகோல் மெத்தவுண்டு,
கதிர்ந்துபார் உவர்ப்பூவின் கதிரோகோடி
கனிந்தாக்கால் சித்தியாங் கரைக்குமாமே. 38

கணக்காக வழலையென்ற சுன்னத்தாலே
கனமாக வேதையது றொம்பவுண்டு
அணக்காகப்பூனீறால் கவரோகோடி
யணைத்திடவே சகலமுந்தான் சுன்னமாகும்
மணக்காக சுன்னத்தால் வேதைகோடி
மதிப்பான களங்குவகை கோடாகோடி
உணத்தாத தங்கத்தில் வேதைகோடி
யுற்றுநின்று பார்த்தவனே வாதியாமே. 39

வாதியாம் வழலையென்று மனதிலெண்ணி
வகையாகப் பிண்டத்தை யெடுத்துவந்து
சேதியாதரைத்து கோடி சுன்னஞ் செய்து
சேர்த்துகார மில்லாமற்போனதாலே
பாதிமதியணிந்தாரே பொயயென்பார்கள்
பாதிவான கருத்துரைத்து வாதில்மூடர்
சோதியாத்தி றத்தாலே வழலைபொய்யாம்
சூஸ்திரமாந் தீக்ஷைவிதி யைந்நூ றுபாரே. 40

பார்க்கவே சகலகருவெல்லாந் தோன்றும
பதிவானசவுக்காரச் சுன்னத்தாலே
ஏற்கவே சுன்னமென்றால் பொய்யோவல்ல
இதமானசவுக்கார மாகுமட்டும்
தாக்கவே யேழையைப்போ லிருந்து கொண்டு
தடையற்ற சவுக்காரச் சுண்ணம் பண்ணி
ஏற்கவே யெல்லாமும் நீற்றுக்கொள்ளு
இருந்திடவே முத்தியா யிருந்துபாரே. 41

பூரச் சுண்ணம்

பாருமேசீனத்தின் சுன்னம்ரெண்டு
பதிவானபச்சைக் கற்பூரம் ரெண்டு
நேருமே யிவைரெண்டும் நேகரைத்து
நிலையான சவுக்காரக் குழம்பினாலே
வாருமேவில்லைதட்டி ரவியிற்காய
வளமான புடம்போடே பூரம்நீரும்
காருமே பூரத்தின் சுன்னத்தாலே
கருக்தான சகலமுந்தான் நீறுந்தானே. 42

நீறுமே தாளகத்தைச் சுத்திசெய்து
நேராகப் பூரத்தைமேலே கட்டி
ஆருமே புடம்போட பூப்போல் நீறும்
அடவான தாளகமும் சுண்ணமாச்சு
சேருமேவீரந்தா னாலத்தொன்று
ஜெபமான சவுக்காரக் குழம்பி னாலே
ஆறுமேயரைத்துமே நீலன்மேலே
அதட்டியே தட்டிரவி காயவையே. 43

பாவத்துமே குக்குடத்தில் துரிசுநீறும்
வகையான துரிசுநீர் நாலத்தொன்று
கைத்துமே சவுக்காரக் குழம்பினாலே
கனமாக வரைத்துமே யேமமேலே
வைத்துமே தட்டியே புடமும் போட
வகையாகப் பூப்போல நீறும்பாரு
நீத்துமே யம்பரமுந் தங்கமாகும்
நிலையான சவுக்காரச் சுன்னத்தாலே. 44

ஆட்டான தாளகத்தின் சுன்னமொன்று
அரைத்துமே வங்கத்தின் மேலேதானும்
பூட்டாகப்பூட்டியே காயவைத்துப்
புகழாகமேல் நீறுகட்டிகாய
நாட்டாகப் பெரியபுடம் போட்டெடுக்க
நலமானவங்கமது நீறுமாகும்,
காட்டாகக் கடுஞ்சுன்னம் வங்கச் சுன்னம்
கவர்கோடி சொல்லுகிறேன் கண்டுபாரே. 45

கண்டுபார் வங்கநீறு பலமெடுத்துக்
கனிவான நிமிளையிலே யங்கியிட்டு
பண்டுபார் புடம்போட நிமிளை நீறும்
பதிவான நிமிளையைத்தான் சவுக்காரநீரில்
நண்டுபார் அரைத்துமே புடமும் போடு
நலமாகச் சுன்னமது வாகுமட்டுந்
துண்டுபார் நிமிளையது சுன்னமாச்சு
துடியாகச்சாரமே லப்பிடாயே. 46

அப்பியே புடம்போடச் சாரம்நீறும்
அதன்பின்பு சாரத்தைச்வுக்காரநீரால்
நம்பியே யரைத்துமே வில்லைதட்டி
நயமாக அடுப்படுக்க வைத்துக் கொள்ளு
கப்பியே புடம்போடக் கடுமையாகும்
கனிவாக வெடுத்துமே சொல்லக்கேளு
தப்பிதமாய்ப் போகாமல் நாலத்தொன்று
தனிவீரஞ் சேர்த்துமே சார்புகேளே. 47

கேளுமே யிதையரைத்து துரிசுமேலே
கெடிபட வேபூசியதைப் புடத்தைப் போடு
ஆகுமே துரிசியது சுன்னமாகும்
அதன் பின்னர் செய்கின்ற வரிசைகேளே
தாளுமே துரிசிநீறு நாலத்தொன்று
தளராமல் வீரமது சேர்த்தே யாட்டி
காளுமே யேமமென்ற தகட்டிற்பூசிக்
கனபுடத்தில் தங்கநீறா யிருக்கும்பாரே. 48

இருக்குமே யேமந்தான் நல்லவித்தை
யிதமான உப்புக்குங் காவிக்காகும்
நறுக்குமே ரசவாதம் சித்தியாகும்
நல்லோர்க்கே யெப்போதுந் தப்பாதப்பா
பருக்குமே பந்தமது விட்டுப் போகும்
பதமான ஞானமில்லை பரிசுமில்லை
வரிக்குமே மனந்தானும் நிலைக்கமாட்டார்
வந்தவித்தை யாவதென்ன சூதிற்றானே. 49

சூதென்றாற் சொல்லுகிறேன் கேளுகேளு
சூதாக ஒருசரக்கை யொன்றிற்சேர்க்க
நீதியாய்ப்பொன்னா சுசேராவிட்டால்
நிர்ணயமா யொன்றுமில்லை நினைவாய்ப்பாரு
ஆதியாய்நாமந்தா னாணும் பெண்ணும்
அன்பாகச்சேர்ந்துதா னிருந்ததாலே
பேதியாய் மனிதர்தாமுற்பத்தியானார்
பிரட்டாகச் சொன்னாக்கா லிசைவாகாதே. 50

இசைவாகக்கற்சுண்ணம் முன்னே செய்தே
யிதமான பூநீரில் எடையேசேரு
தசையாகப் பாணிவிட்டுக் கலக்கிக் கொண்டு
தாக்கியே தெளிவிறுத்துச் சாக்கில்விட்டு
விசையாக அரைத்திடவே சுண்ணமாகும்
விதவான சீனத்தைச் சுண்ணஞ்செய்து
இசையாகப் பச்சைக்கற்பூரஞ்சேர்த்து
இன்பமாய்ப் போட்டிடவே சுண்ணமாமே. 51

சுண்ணமாந்தாளகத்தின் மேலேகட்டிச்
சுயமாகப் புடம்போடக் காரம்நீறும்
அன்னமாந்தாரத்தால்வங்கம்நீறும்
அடைவானவங்கத்தால் நிமிளைசாகும்
பின்னுமாம் நிமிளையினால் சாரம்நீறும்
பேர்பெரியசாரத்தால் துரிசுநீறும்
கன்னமாம் துரிசியினால் சூதஞ்சாகும்
கருத்துவைத்தா லெல்லாமே நீறிப்போமே 52

நீறினால் பலனுண்டு வாதமுண்டு
நீறாட்டால் ஒன்றுமில்லை நிலைக்காதப்பா
ஆறினாற் பாகம் நிற்கும் வாதமாகும்
அவசரத்தி னின்றாலோ வொன்றுமில்லை
காறினாற் றுரிசதுதா னீறிப் போனால்
கலக்கமற்று ரசவாதம் கைக்குள்ளாச்சே
போரினாற் சண்டையிட்டால் வருமோ வாதம்
போக்கோடே நிலைத்துமே பார்த்திடாயே. 53

பார்த்திடவே பலனாகும் வாதமாகும்
பாகுத்தை விட்டாக்கா லெல்லாம் போச்சு
சேர்த்திடவே சுக்கானைப் பூனீறோடே
சுயமான குருவாகும் வழலையாகும்
கார்த்திட்டாற் சவுக்கார குருவைச் சொல்வார்
காணாட்டால் சொல்லார்கள் காடென்பார்கள்
நேர்த்தியாஞ் சவுக்காரம் வைத்தால் வாதம்
நிலைக்குமே வாதந்தான் நிலைக்கும்பாரே. 54

நிலைக்குமே பரந்தமண்ணும் தண்ணீரென்ற
நிலையானபோது கல்லுப்புச் சுண்ணம்
வலைக்குமே பூநீறும் இரண்டும் சேர்ந்தால்
வளமான வழலையென்றே பேருமாகும்
கலைக்குமே யிவ் விரண்டும் சேராவிட்டால்
கனிவாக வொன்றுமில்லை யெல்லாம் பொய்யாம்
அலைக்குமே திரியாமல் வழலைபாரு
ஆதியாம் மூவர்மண்ணி னடியைப்பாரே. 55

அடியென்றும் முடியென்றும் கல்லுப்புச் சுண்ணம்
அடியான பூனீறே ரெண்டுமாக
பிடியென்று சொல்லாது தலைதெறித்துப்
போகுமே பேசாதே பூமிநாதம்
குடியென்றும் சத்தியென்றும் நாதமாகும்
குடிகெடுத்த வாதிகளே கொள்ளை கொள்ளை
துடியாக வழலையுப்பு முன்னேபார்த்தால்
துப்புறவாய் வாதம்வந்து நிலைக்குந்தானே. 56

வழலை வேறு

நிலைக்குமே யின்னமொரு வழலைசொல்வேன்
நேராக ஈஸ்வரிதான் நந்திக்குச்சொன்னாள்
மலைக்குமே சவுக்காரச் சுண்ணஞ் சொல்வேன்
மதியான கருவிது தான் லகுவுமாகும்
வலைக்குமே பூநீறு படியும்நாலு
வகையாகக் கற்சுண்ணம் படியுமொன்று
கலைக்குமே தண்ணீரும் படியுநாலு
கனிவாகக் கலக்கியே திரிநாள்வையே. 57

வைத்துமே தெளிவிறுத்துப் பீங்கானிட்டு
வகையாக வுமிநெருப்பிற் குழம்பாக் காய்ச்சி
நைத்துமே குருவாக வைத்துக்கொண்டு
நலமாகச் சொல்லுகின்ற மார்க்கங்கேளு
பைத்துமே தாளகமும் பலமுமொன்று
பதிவாகச் சுண்ணாம்பு நீரிற்போட்டு
தைத்துமே கொதியிட்டே யெடுத்துப்பாரு
கனியவே யெண்ணெய்கக்கிச் சுத்தியாமே. 58

சுத்தியாந் தாளகத்தை யெடுத்துக்கொண்டு
சுருக்காக அப்பிரேகம் பலமும்நாலு
முத்தியாய் வீரமது பலமுமொன்று
முனிவாகக் கல்வத்திற் போட்டுப் பின்பு
நத்தியாய்த் தண்ணீரை விட்டேயாட்ட
நலமாக வெண்ணெயாம் நாட்டக்கேளு
புத்தியாந் தாளகத்தின் மேலேபூசிப்
புதுமையாய் ரவிதனிலே காயப்போடே. 59

போட்டுமே புடமைந்து எருமுறித்துப்
போக்கோடே யதின் மேலே சுன்னம்வைத்து
ஆட்டுமே யதின்பேரி லுண்டை வைத்தே
யடைவாக அதின்பேரில் சுன்னமிட்டு
காட்டுமே யதின்பேரில் எருமுறித்துக்
கனமாகப் போட்டுமே தீயைப்போடு
வாட்டுமே எடுத்துப்பார் தாரமெல்லாம்
வளமாகச் செந்தூரமாகும் பாரே. 60

செந்தூரந்தனை யெடுத்துக் கல்வத்திட்டுச்
சிவப்பாகச் சவுக்காரக் குழம்பினாலே
யிருசாம மதையரைத்து வில்லைசெய்து
இணக்கமாய்க்கட்டியே மேலேகேளு
நந்தூரம் அப்பிரேகம் மேலேகட்டி
நலமாகமுன்போல புடத்தைப்போடச்
செந்தூரமாக வேசுன்னமாகும்
சிறப்பான சுன்னத்தின் மகிமைகேளே. 61

மகிமையென்னப் சொல்லுகிறேன் வங்கத்தின் மே
வளமாகக்கட்டியே போடச்சுன்னம்
தகைமையா ந்துருசின்மே லங்கிபூட்டிச்
சாதகமாய்ப் புடம்போடச் சுன்னமாகும்
மகிமையாம் சூதத்தைக் கட்டிக்கொண்டு
மாற்றுள்ள தங்கமெடை நாகஞ்சேர்த்து
வகையாகக் கட்டினதோர் ரசமும்சேரு
வாகான களங்காகும் மார்க்கங் கேளே. 62

மார்க்கமாய் ரவிநூற்றுக் கொன்றுருக்கி
மயமாகக் கொடுத்திடவே தங்கமாகும்
ஏற்குமே விற்றுமே செலவு செய்தே
யின்பமாய்ரணகணங்கள் பார்த்துத் தேறும்
ஆர்க்கவே செந்தூரஞ் செய்துதின்ன
அடவான காயசித்தி யாகும்பாரு
ஏற்கவே வெகுகோடி காலம் வாழ்வீர்
ஏழைமதி போகாம லிருந்துபாரே. 63

தாம்பிர வங்கம்

இருந்திடவே நவச்சாரம் பலமுமொன்று
இதமாகச் சவுக்காரக் குழம்பை யூற்றி
அருந்திடவே யதையரைக்க ஜலமுமாகும்
ஆகவே நெடியேறு மாட்டிக் கொண்டு
வருந்திடவே வீரமது காலுங்கூட்ட
வகையாக ரத்தம்போல் நீராய் நிற்கும்
பருந்திடவே நீரிதனி லூற்றிக் கொண்டு
பக்குவமாய் அயக்கறண்டி தன்னிலூற்றே. 64

ஊற்றியே கந்தகத்தைப் பொடியாய்ச் செய்தே
யுற்றுமே சவுச்காரந் தெளிந்த நீரில்
பார்த்துமே போட்டுநீ கொதியிட்டாக்கால்
பதிவாக மெழுகாகு மெடுத்துக் கொண்டு
நாற்றிசையும் மெய்க்கவே செம்புதன்னை
நலமாகப் பலமொன்று நிறுத்துப்பின்பு
வாழ்த்தியே குகையிலிட்டே யுருகும்போது
வகையான மெழுகதைத்தா னெடையேதாக்கே. 65

தாக்கிடவே செம்புதா னீயமாகும்
தடையறவே நொறுங்குமது கல்வத்திட்டு
பார்த்திடவே வீரத்தை யெடையே சேர்த்துப்
பச்சைத்தண்ணீர் விட்டதனை யரைநேராகக்
கோர்த்திடவேமஞ்சள்போ லாகும்பாரும்
குணங்கெட்ட வாதிகளே காயவைத்து
நாத்திடவே கடைநீரு விஷ்ணுமுட்டி
நலமாக வில்லைதட்டிக் காயப்போடே. 66

போட்டுமே அயப்பொடியும் பலமுமொன்று
பொருந்த வேகூதமரைப் பலமும் போட்டு
காட்டுமே பாணியா லரைத்துவில்லை
காரியமாய்த் தட்டியே காயவைக்க
நாட்டுமே பூத்துமதி நிற்கும்பாரு
நலமான பூவதனைப் புகைநீராலே
தாட்டுமே கல்வத்திலரைத்துப் பின்பு
தடையறவே முன்வில்லை கவசம் கட்டே. 67

கட்டியே வில்லை யினெடையே கட்டிக்
 காஷ்டமாய் நூறெருவில் புடத்தைப் போடு
தெட்டியே யெடுத்துப் பார் செம்பாய்நிற்கும்
 திறமான செம்பதனை மதியிற்றாக்கு
முட்டியே யெட்டிரண்டு சேர்த்தேயூத
 முடிவர்ன மாற்றேழு காணுங்காணும்
துட்டியே புடமிரங்கித் தங்கமாகும்
 துடியான விருதமிது நேமமாமே. 68

ஆமேதானிச் செம்பை யெடுத்துக்கொண்டு
 அடவான ஜீவனத்தைப் பண்ணித்தேறு
நாமேதான் சொல்லிவிட்டோம் வழியாய்த்தானும்
 நலமானபாகமிது நாடிப்பாரு
பூமேலே யிருப்பதற்கே யிந்தச்செம்பு
 போக்கோடே பார்த்தாக்கால் எல்லாமாகும்
பூவின் மேலிருக்கவென்றால் செம்பைப்பாரு
 போக்கோடே சகலசித்தி யாடலாமே. 69

வெள்ளி முறை

ஆடலாம் வெள்ளிமுறை யொன்றுகேளு
 அடைவான சவுக்காரக் குழம்புதன்னை
வாடுமே பீங்கானில் விட்டுகேளு
 வலுப்பமாய்ப் பாஷாணம் பலமுமொன்று
நாடவே பொடித்துமே பீங்கானிட்டு
 நலமாகவுமி நெருப்பிற் காயவைத்து
மூடவே கல்வத்திலரைத்து மைபோல்
 முறையாக வைத்துருட்டிக் காயவையே. 70

வைத்துமே கற்சுண்ணம் படி யுமெட்டு
 வகையான சட்டிதனிற் பாதியிட்டு
உய்த்துமே யரைத்தவில்லை நடுவில்வைத்து
 வுண்மையாய்க் கற்சுண்ணம் மேலே மூடி
நைத்துமே அமுக்கியந்தச் சட்டி மூடி
 நலமான அடுப்புதனில் எரியிட்டாக்கால்
[illegible]மே யுருகியது வட்டாய்நிற்கும்
 பதிவாகவெடுத்துமே பாகங்கேளே. 71

பாகமென்ன சொல்லுகிறேன் பாஷாணத்தைப்
பதிவாக வெள்ளீயந் தன்னிற்றாக்கு
ஆகமாயுடைந்துமது தூளாய்ப்போகு
மப்பாலே வெள்ளிதன்னி வெடை யேதாக்கு
யோகமற்றேயுடையுமது கல்வத்திட்டு
ஒக்கவே யிந்தவெடை பாஷாணஞ்சேர்த்து
ஆகவேசவுக்காரக் குழம்பாலாட்டி
அடைவாகப்புடம் போட்டுமெடுத்துக் கொள்ளே.72

எடுத்துமே யிந்தவெடைச் சூதஞ்சேர்த்தே
யிதமான சவுக்காரக் குழம்பைவிட்டு
நடத்தியே வில்லைதட்டிக் காயவைத்து
நலமாகவப்பிரேகம் கவசங்கட்டி
எடுத்துமே குக்குடத்திற் போட்டுத்தானு
மிதமாக எடுத்துப்பார் சுண்ணமாகும்
படுத்துமே வெள்ளீயம் நூறுருக்கிப்
பதிவாகவொன்றிடவே வெள்ளியாமே. 73

ஆமேதானிந்தவெள்ளி சரிகைபோல
அடைவா கத்தானிருக்கும் வங்கந்தன்னை
காமேதான் கொடுத்தூது ஓடாதப்பா
கனமானபாஷாணச் சுண்ணமார்க்கம்
ஆமேதான் செம்புதனிற் கொடுத்தாயானால்
அன்பானவெள்ளியது மார்க்கமாகும்
தாமே தான்பாக மாய்ச் செய்துகொள்ள
தடையற்றஞான மெல்லாங்கிட்டுந்தானே. 74

கிட்டுமே வெள்ளிதா னெவ்வாறென்றால்
கெடியானசவுக்காரக் குழம்பினாலே
முட்டியே வெள்ளையது பாஷாணத்தில்
முறிவானசுண்ணாம்பு நீரினாலே
துட்டியேவெள்ளீய முடைந்ததாலே
துடியானவெள்ளியது சேர்ந்துதானே
கட்டியாமிதனாலே ரசமுஞ் சேர்ந்து
கனிவான வெள்ளியது மானவாறே. 75

வழியோடே சென்றறிந்தால் வாதியாவான்
வழிதப்பிப் போனாலோ மார்க்கம் பொய்யாம்
சுழியோடே தமர்வாசல் வழியைக்கண்டு
சுகாதீ பரணம் போற்சொக்கிப்பாரு
கழியோடே சுன்னத்திற் தகைநீர்விட்டுக்
கனிவாக வைத்திடவே தயிரதாகும்
தழியோடே தயிர் தனிலே துரிசைத்தோய்த்து
தப்பாமவ்ரவிதனிலே காயப்போடே. 84

காய்ந்தபின் சுக்கான்போற் கட்டிப்போகும்
கணக்காக வெடுத்துமே யப்பால் வைத்து
ஓய்ந்தபின் னொருபலந்தான் வெள்ளீயம்போட்டு
உற்பனமா முருகையிலே சொல்லக்கேளு
ஆய்ந்தபின்பு வெடியுப்புச் சுன்னம்போட்டு
அடவாகக் கரண்டியினால் தேய்த்துப் போடு
நாய்ந்தபின்பு கடுஞ்சுன்னம் வங்கச்சுன்னம்
நலமாகக் கலுவத்தி லிட்டுக்கெள்ளே. 85

இட்டுமே சவுக்காரக் குழம்புதன்னை
யிதமாக விட்டரைத்துப் புடத்தைப்போடு
நட்டுமே கடுஞ்சுன்னம் வங்கச்சுன்னம்
நலமாக வெடுத்துமே வீரம்போட்டு
பட்டுமே சவுக்காரக் குழம்பினாலே
பதிவாக அரைத்துமே நீலன்மேலே
எட்டுமே யங்கியது குளிசங்கட்டி
யிதமாகக் குக்குடமாய்ப் போட்டுக் கொள்ளே. 86

போட்டுமே யெடுத்திடவே துரிசுநீறும்
பேரண்டம் க்ஷணந்தனிலே நீறிப்போகும்
காட்டுமே சரக்கெல்லாம் சொன்னபடி கேட்கும்
கடுங்காரந் துரிசியினா லெல்லாமாகும்
மூட்டுமே சகலதுறை யிதுக்குள்ளாகும்
மூதண்ட சூதத்தை மூட்டிக் கொள்ளும்
நாட்டுள்ளோர் காணார்கள் துரிசு நீறு
நானறிந்து வுலகத்தில் நாட்டினேனே 87

நாட்டினேன் முன்வைத்த துரிசுதன்னை
நலமாக விராகனெடைதூக்கிக் கொண்டு
காட்டுமே விராலியிலைக்குள் ளே யிட்டுக்
கனிவாக வமிழ்த்திவைக்க ஜலமதாகும்
தேட்டையாஜலமிறுத்துக் கரண்டியூத்த
திறம காசூதத்தை யதிலேயிட்டு
பாட்டுமே கொதியிடவே கட்டிப்போகும்
பரிவாக மத்தங்காய் தனிலேவையே. 88

வைத்துமே புடம்போட்டே யெடுத்துப்பாரு
வகையாக தந்தம்போல் மணியுமாகும்
சேர்த்துமே சூதமணி கண்டபோதே
சிறப்பாகச் சகல பலனுடனே யாகும்
நாத்துமே நாதாக்கள் மறைத்துப் போட
நலமான சவுக்கார வழலைதன்னை
சீர்த்துமே தீக்ஷைவிதி திறந்து சொன்னேன்
சிறப்பாகச் சூதமென்ற மணியைத்தானே. 89

மணியானசூதம்நின் றுருகும்போது
மட்டுமே யொன்றுக்கு நாலுதங்கம்
கனிவாகத் தங்கமெடை நாகம்போடு
கனிவான நாகத்தைக் கட்டிக்கேளு
துடியானவெடியுப்பு ஜயநீர்தன்னில்
துப்புறவா யுருக்கியே சாய்த்துப்போடு
கனியானநாகமது மணியுமாகும்
கர்டிடவே தங்கத்திற் சமனாய்ச்சேரே. 90

சேர்த்துமேயுருக்கிடவே களங்குமாகும்
ஜெபமானகளங்கத்தைச் செம்புநூறில்
ஆர்த்துமே கொடுத்திடவே திசைமாறாகும்
அடைவானகளங்கத்தைச் செந்தூரஞ் செய்ய
பார்த்துமேகலுவத்தி லிட்டுக்கேளு
பதிவாகவுடைத்துவைத்து யுரைநீராலே
நார்த்துமே யரைத்து மெடைமேருதன்னில்
நலமாகவடைத்துமே சொல்லக்கேளே. 91

கேளுமே சட்டியிலே மணல்தானிட்டுக்
கிருபையாயதன் பேரில் மேருவைத்து
நாளுமே கழுத்தளவும் ணலையிட்டு
நலமாகத் தீயெரிக்கச் சொல்லக்கேளு
வாளுமே கமலமுதல் காடாக்கிதானும்
வகையாகப் பனிரெண்டு ஜாமம்போடு
ஏளுமே யாறவிட்டு யெடுத்துப்பாரு
இதமான செந்தூர மானவாறே. 92

வாருங்காண் செந்தூரம் முருக்கம்பூப் போல்
வகையாக நவலோகந் தன்னிலோட்டங்
காருதேள் திசைமாற்று மாகும்பாரு
கணக்காகமண்டலந்தான்தேனிலுண்ண
தாறுகேள் நோவெல்லாந் தவிடுபொடியாகும்
தாட்டிகமாய் நோய்மூன்றுஞ் சிதறிப்போகும்
பாறுகேள்காயசித்தி யுடனேயாகும்
பத்தியா யுலகத்திற் பதிவாய்நில்லே. 93

நில்லென்று சவுக்காரச் சுண்ணம் வைத்து
நிலையான துரிசிநீர் தன்னை நீற்று
கல்லென்று சூதமதைக்கட்டிக் கொண்டு
கணக்காக வெடியுப்புச் சுண்ணம் வைத்து
தில்லைநாட்டாசரைப்போ லிருந்து வாழ்வீர்
ஜெகமெல்லாம் ஞானங்கள் மிகவுமாகும்
கல்லையென்று பாகமாய்ச்செய்துகொள்ளக்
கருத்தானரசவாத மாகும் பாரே. 94

வாதமாம் வெடியுப்புச் சுண்ணத்தாலே
வகையாக வுற்றுமே பார்த்தபேர்க்கு
நாதமாம் பூநீற்றை விட்டாயானால்
நலமான பலனில்லை நாடிப்பாரு
காதமாரி வைரெண்டால் வாதமாச்சு
கலனென்று விட்டாக்கால் எல்லாம்போச்சு
நீதமாய்த்துரிசதனை நீற்றாவிட்டால்
நிலைக்காதுவாதம்முதல் நீற்றலாச்சே. 95

ஆச்சென்றுநினைக்காதே சவுக்காரத்தை
யாண்மையாய் நீற்றியே வேதைபாரு
மூச்சென்ற வாதமெல்லாம் கைக்குள்ளாகும்
முடியுமட்டும் வாத மெல்லாஞ் சோதித்தேறு
பாச்சென்று நில்லாதே பலனேயில்லை
பண்பாக மார்க்கத்தைப் பணிந்துபார்க்க
காச்சென்ற வுலகத்தில் ஞானமாகும்
கைகண்ட பொருளிது தான் வாதமாமே. 96

வாதந்தான் செய்யும்வரை யருமையல்ல
வாய்திறந்து பேசாமல் வழலைபாரு
நீதந்தான் தவறினால் பலிக்காதப்பா
நெறியையுற்றுப் பெருமையாய்ப் பண்ணிக் கொள்ளு
வேதத்திலுற்றபடி சொல்லிவிட்டேன்
வேதாந்தம்சித் தாந்தம் இரண்டு மொன்று
நீதமாய்ச் செய்தாக்கால் பலனுமாகும்
நிகழ்கால மெல்லாந்தானிருப் பதாமே. 97

இருக்கவே சவுக்கார வழலைதன்னை
யிதமாகச் செய்திடவே முத்திசித்தி
மருக்கவே வழலைதன்னை மறந்ததாலே
மலைப்பான சரக்கெல்லா மோடிப் போகும்
முருக்கம் பூப்போலவே சிவப்புமேற்று
முக்கியமாய்ச் சாயந்தான் மிகவேயேறும்
அருக்கன்போல் சிந்தூரம் செய்துபாரு
ஆதிபரவழலை யென்ற ஆதிதானே. 98

ஆதியாம் வழலைதன்னை முன்னே செய்து
அடவான துரிசியது பின்னேசெய்து
போதியா ரசங்கட்ட வாதமாகும்
பிரபலமாய் வாதமெல்லா மெளிதிலாகும்
நீதியாய்ப் பார்க்கிலிது வுயர்ந்தவித்தை
நிச் சயமா மார்க்கமாய்ச் செய்து கொள்ளு
கோதியேயணுவணுவாய்ச் சோதித்தேறு
குணமாக வாதமெல்லாம் குறுக்குமாமே. 99

குருக்காக தன்வந்திரி சவுக்காரத்தைக்
கூறினா ரெல்லோர்க்கும் தெரியத்தானும்
முருக்காக சவுக்காரங் கண்டபேர்கள்
முனிவாகச் சொன்னாக்கால் ரவி கோடிநரகம்
வருத்தமாய் வெகுபாடு பட்டுத்தேறி
வகையான சவுக்காரங் கண்டுதேறி
உருத்தாகவழலை யென்ற ஆட்டுத்தானே
உத்தமனார் யூகிமுனி நூறுந் தானே. 100

யூகிமுனிவர்
அருளிச் செய்த
சுருக்கம் நூறு
முற்றிற்று

உ

கடவுள் துணை

நந்திதேவர் அறுவகைநீர் திராவகம்

அகாரமும் உகாரஞ்சேர்ந்தால் ஆனந்தமாகுமாப்போல்
மகாரத்தில் சோதிபாதம் மன்னியே தருவதென்று
நகாரத்திலுதித்த சித்தன் நாடிறையருளினாலே
வகாரத்திலெவர்க்குஞ்சொன்ன வழிதனையறிகுவீரே. 1

அறிவினால்வெள்ளையான ஆயிழைபூநீறொன்று
பிரிவிலாக் கம்பியுப்பு பேசாம லிடைதானொன்று
முறியாமல் ரெண்டுமொன்றாய் மூட்டியே சாமமாட்டி
உரியோடும்வெண்ணெய்போல உருக்கினால் வட்டாய்ப்
போமே.2

வட்டைநீ கல்வத்தாட்டி வழியாகக் குழிக்குள்ளே வை
சட்டமாய்க் குழியைமூடிச் சமாதியிற் சலந்தெளிக்க
எட்டுநாள் பொறுத்துமெள்ள எடுத்திடு சிவந்தநீரை
கட்டமே தீரவென்று கருதியே தீபமீயே. 3

கருதிய தீபதூபம் காட்டிடு தேவர்க்கப்பா
சுருதியேசொன்னதிந்த துரிதமாய்புட்டிக்கிட்டு
அரிதான தொழிலுக்கெல்லாம் அமர்ந்திடவார்த்தரைத்து
பெரிதானரவியிற்போட பிரண்டுதான் சுண்ணமாச்சே. 4

ஆமென வஸ்துநாலும் அடைவுடன் தனிச்சரக்குந்
தாமெனத் தொந்தித்திந்தத் தப்பிநீர்நிறையவிட்டு
ஓமென்ற ரவியிற்போட உலர்ந்திட எட்டுக்குள்ளே
சாமெனும் முன்னோரெல்லாம் தாக்கினாற்சாகும்பாரே. 5

சாகுமே யிந்தநீரால் சதாசிவன் பாதத்தாணை
ஆகுமே சுண்ணமெல்லாம் அடவுடன் புடமுந்தீர்ந்தால்
வேகுமே நவலோகங்கள் வெறிகொண்டஆத்தாள் நீரில்
போகுமே அண்டரண்டம் புந்தியாலுதித்துக்காணே. 6

காணென்ற மூடருக்குக் கபடத்தைநீக்கவேண்டி
ஆணென்ற பிள்ளைகட்கு அதிசயஞ்சொல்லக்கேளீர்
தாணுவாம் வீரங்காலும் தனிச்சீனங் காலுங்ககூட்டி
பேணுவம்ரசகர்ப்பூரம் பின்னுங்கால் கம்பியுப்பே. 7

கம்பியோடிவைநாலுக்கும் கனம்பெற நாற்காலொன்று
வெம்பியவுப்புச்சுண்ணம் விபரமா யுறுதிகண்டாய்
தம்பியா யிடையொன்றப்பா தாக்கிட நெகிழ்ந்து வில்லை
நம்பியே ரவியிற்போட நலம் பெறக்காய்ந்து போமே. 8

காய்ந்தபின் புடத்திலப்பா கண்டந்தநீரெடுத்து
ஆய்ந்திட வந்திடைக்கி அந்தமாம் ரசத்தைச்சேர்த்து
மாய்ந்திட அரைத்துமூன்று நாள்தனில் அரைத்துவாங்கில்
மாய்ந்திட வெய்யிற்கண்டால் மடிந்துபோம் அறுநீர்போக்கே.9

அறுநீரே குருவதாகும் அந்தந்தத் துறைகட்கெல்லாம்
பிரிந்திடா திந்தவேதை பேச்சில சொல்லப் போகா
உரிந்துபோம் கட்டைதள்ளி உயர்ந்திடசோதிகாணும்
சரிசரி யென்றுசொல்ல சராபுமே வணங்கு வானே. 10

வணங்குவானின்ன மொன்று வகையினை சொல்லக்கேளு
பிணங்காமல் ரசிதநாகம் பேணியே முன்போற் சேர்த்து
இணங்காத கல்வத்திட்டு எடுத்திடு மூன்றுநாளில்
குணந்தானும் ரவியிற்போட்டால் கும்பிட்டுநீரில்போமே.11

போகுமே நவலோகத்தில் புனிதமாய் வேதைகாணும்
ஆகுமே யினங்கள்கண்டு அறிந்திடு வேதைபாரு
சாகுமே திராவகத்தாற் சண்டாள வூறல்போகும்
வேகுமே லடுப்பிலையா வினோதமு மெத்தக்காணே. 12

மெத்தவே ரசிதவங்கம் விளங்கிடு சொர்ணமுண்டு
சித்தமாய் முன்போல் செய்யத் திட்டமாய்ச் சொல்லி
விட்டேன்
கத்தனாய்க் கண்டு கொண்டு கள்ளருக்குரை செய்யாதே
புத்தியி லடக்கம்வைத்துப் புனிதனா யிருக்கலாமே. 13

இருக்கவே தங்கமொன்று இதமாக கட்டுவங்கம்
உருக்கலாம் சரியாய்ச்சேர்த்து ஒவ்வியே களங்கமாகும்
பெருக்கலாம் ரசமுமென்று பேசாமல் சேர்த்தரைத்து
செருக்கலாம் களஞ்சிவீதஞ் சேர்ந்திடுசாரகாரம். 14

காரமும் முன்போல்வீதம் கண்டுதான் சேர்த்து மாட்டு
ஆரமும்வேண்டுமோசொல் அந்தநீர் தன்னைக் கண்டால்
ஓரமாய்ச்சொன்னதல்ல உற்றுநீ பார்த்துக்கொள்ளு
வாரமு மூன்றுநாளில் மாண்டிடுங் குப்பிக்கேற்றே. 15

ஏற்றிய களங்கஞ்செய்ய இன்னமும் சொல்வேன்கேளு
மாற்றியே வெள்ளிபொன்னு மறுவங்கம் பொன்னுமாகும்
நேற்றியரண்டுஞ்சேர்த்து நிசமதாயுருக்கிச்சேரு
ஆற்றியே பொடித்துக்கொண்டு அந்தமாய் ரசத்தைச்சேரே.16

சேரேநீ முன்போலிந்தத் திட்டமாய்ப் பஞ்ச பூதம்
தீரனாய் சேர்க்கைசேர்த்து திட்டமா யரைத்தநீரில்
காரெனுங் குழவினுள்ளே கண்டதிச் சோதிசொன்னோம்
பூரமும் வீரந்தானும் புகழ்ந்திடும் வேதைகாட்டும். 17

காட்டுமே செம்புமொன்று கருதிய வங்கமொன்று
மாட்டுமே ரெண்டுஞ் சேர்த்து மங்காது களங்கமாகும்
ஆட்டுவாய் ரசமொன்றிட்டு அமைந்திட வரைத்துக்கட்ட
நாட்டுவாய்பஞ்சபூதம் நலம்பெறமூட்டி நீட்டே. 18

நீட்டென்றேன் வீரங்கால்தான் நிசமான பூரங்கால்தான்
காட்டென்றேன் கம்பிரெண்டு கால்தனை நன்றாய்ப்பாரு
ஊட்டுவாய் சீனங்கால்தான் உத்தம கரியுப்பேகால்
வட்டமா யறுநீறாலே வகைதப்பி யெரித்திடாயே. 19

பருதியில் பொரியைப்போல பாரிந்தவேதைசொல்லும்
சிரித்திடும் சமமுமையா சிக்கென வெழுந்து பேசும்
மரித்திடு மாயன்தன்னை மகிழ்வுடன்பூசிப்போமால்
உரித்திடும் வயதுபத்து முத்தமப் பொன்னிதாமே. 20

பொன்னென்று சொன்னபேச்சு பொருந்திநீ யாலோசித்து
வன்னமாய்ச் சொல்லக்கேளு வரிசையை யறைகிறேன்பார்
கன்னமாம் கரியுப்பொன்று கருதிய சீனமொன்று
மன்னனே ரெண்டுகம்பி மதித்திடும் கற்சுண்ணாம்மே. 21

சுன்னமா முருக்கினத்தின் துறையறிந் துருவைக் காண
கன்னவே மூன்றுநாளில் கருதிய புடமுந்தீர்த்து
நண்ணவே ரசிதம் நாகம் நலமதாய்ச் சேர்த்துக்கொண்டு
அண்ணவே யிடைக்கிடைக்கி அமர்ந்திட அரைத்திடாயே.22

அரைத்திடு அறுநீராலே ஆய்ந்திட்டுச்சுன்னமாகும்
எரித்திடிவலகுபுடத்தில் இதமாக வேகமீறும்
நிறைத்திட நவலோகத்தில் நேமித்த வயதுபத்து
உரைத்திட்டேன் உலகிலுள்ள உபாயத்தைச்
சொல்லொண்ணாதே. 23

சொல்லொண்ணா திந்தச்சேதி சுருதியை யுற்றுப்பாரு
வெல்லொணா வேதைகாணும் விரும்பியே நன்றாய்க்கேளு
கொல்லொணா தங்கமொன்று குவலய வங்கமொன்று
நில்லொணா களங்கம்போல நேமித்து வுருக்கி வாங்கே.24

வாங்கிப்பின் ரசத்தையொன்று வளமதாய்க் கூட்டியாட்டி
ஓங்கிய பங்கு அஞ்சாக்கி யுள்ளது சொல்லக்கேளு
தாங்கியே செய்தசுன்னந் தானது அஞ்சுபங்கு
எங்கியே போகாமல்தான் இயம்பிய அறுநீராலே. 25

அறுநீரா லாட்டியாட்டி அமர்ந்திட மூன்று நாள்தான்
சரிபெற பரியில்போட்டு தாக்கிடு லகுபுடத்தில்
கரியுற அனலில்வாட்டிக் கனம்பெற அப்பிலாகில்
உரியதாய்ச் சுன்னஞ் செய்து உத்தமச் செம்பிலீயே. 26

செம்பினி லீந்தாலுந்தான் செகசோதி காணுங் காணும்
வம்பினில் வெள்ளிமேலே வரிசையாய்ச் சோதிகாணும்
தம்பினி வரியவெள்ளித் தருசெம்பு ரண்டுசேர்த்து
உம்பிலன் குருவொன்றிட்டு உருக்கியேயெடுத்திடாயே. 27

எடுத்திடா யெந்தலோக மாகிலும் வரிசையீது
அடுத்திடா யெந்தச்சுன்ன மாகிலு மறியச் செய்வார்
தொடுததிடாய் முறைதப்பாமல் சொன்னது பஞ்சதம்
கொடுத்திடாய்சுன்னஞ்செய்து குறியதுபத்துக் கொன்றே.28

ஒன்றைப் போல் முறைகள் சொல்ல உயர்ந்திருலக்ஷுங்காப்பு
அன்றன்று முரைத்தார் முன்னோர் அதிலதில் விபரமெத்த
கண்டுநீதேறுதேறு கருதியஉப்புக்கட்டை
நன்றதாங்கெந்திசேர்த்து நலம் பெறப்புடத்தில் வாங்கே. 29

வாங்குவாய் புடமு மூன்று வர்ணமோ சிவப்புராச்சு
ஏங்கிநீபோகாமற்கேள் இயங்கியரசமேசேரு
தாங்கியே குப்பிக்கிட்டு தயவதாய் எரித்துப்பாரு
ஓங்கியேவந்துபோமே உத்தமகுரு வென்றெண்ணே. 30

எண்ணிய சுருதியெல்லாம் இயம்பிய வகையை கேளு
தன்னியே உப்பும் அப்புத் தயவதாய்ச்சேர்க்கச்சொல்லி
நண்ணியேமுன்னோர்சொன்ன நலமதையறிந்தீரானால்
மண்ணிலே பிறந்த சென்மம் மண்ணிலே மடிந்துபோமே.31

நந்திதேவர் அறுவகைநீர் திராவகம்
வகாரக்குறிப்பு (32) முற்றிற்று

அருஞ் சொற் பதவுரை

பக்கம்	பாடல்	
2	4	வழலை- முப்பு-சவுக்காரம்- மண்மேல் விளையும் ஓர் வகை உப்பு
	5	சவுக்காரம் சவர்க்காரம்- அழுக்ககற்றும் காரம்- உழமண் உருண்டை
3	11	அயச்செம்பு- இரும்பிலிருந்து உண்டாக்கப்பட்ட செம்பு- இரும்பைச் செம்பாக மாற்றியது
7	25	அப்ரகத்திலிருந்து செம்பு செய்யும் முறை சொல்லப்பட்டுள்ளது
8	30	கதிரிலிட்டு- சூரிய வெப்பத்தில் காயவைத்து
9	34	பதங்கம் - மருந்தைச் சட்டியில் வைத்து எரிக்க மேலே மூடிய சட்டியின் உட்பாகத்தில் படிந்த பொருள்.
		கடம்- சட்டி
10	37	அண்டோடு- முட்டையோடு
	38	பாணி- தண்ணீர்
12	46	சுடர்க்கொடியோன் - சூடம்
13	50	பழச்சாறு - காடி
15	58	கடிகை- நேரம்

யூகிமுனி கரிசல்- 151

28	11	சரம்- மூச்சு
	12	ரவி- இடகலை
		மதி- பின்கலை
		சுழினை- நடுமூச்சு

பக்கம்	பாடல்	
28	13	வாசி - மூச்சுக்காற்று
29	17	ஆண்குறி - லிங்கம்
		நட்சத்திரம் - பூரம்
		எசமான் - வீரம்
		சிந்தூரம் - ரச செந்தூரம்
29	17	இனி - ரசம்
		நாரியின் பால் - தாய்ப்பால்
30	19	கலசப்பால் - தாய்ப்பால்
	20	வஜ்ரவல்லி - பிரண்டை
		சித்ரமூலம் - கொடிவேலி
	22	வெள்ளுள்ளித் தைலம் - பூண்டுத் தைலம்
31	25	மிருகமதம்- கஸ்தூரி மஞ்சள்
		பித்தமணி - நெல்லிக்காய்
		திரிபலம்- நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய்
		கரியநிறம்- கடுகு
		ஆகுமருந்துப்பு - வெடியுப்பு
		ஆதிவஜ்ராயுதம்- வீரம்
		அரிசம் - மிளகு
	27	ஆண்குறி - லிங்கம்
		சிவன்விந்து- பாதரசம்
		வெற்றி செறிபவன் - வீரன்
		அரன் பூசைக்கு ஏற்ற வனல் - சாம்பிராணி, குங்குலியம்
		தீபம் - சூடம்
32	28	1, ஆகாசம் - பூநீறு
		2, நட்சத்திரம் - பூரம்
		3, சிந்தூரம் - ரச செந்தூரம்
		4, சாகாரோமம்- சீந்தில்
		5, அயச்சட்டி - இரும்புச்சட்டி
	30	முதலிவித்து - தாளகம்

பக்கம்	பாடல்	
32	31	பிருதிவி - வீரம்
		அப்பு - லிங்கம்
		தேயு - வெள்ளை பாஷாணம்
		வாயு - கெந்தி
		ஆகாயம் - பூநீறு
	33	நாதம் - பூநீறு, கெந்தகம்
		விந்து - ரசம்
		வன்னி- லிங்கம்
		நட்சத்திரம் - பூரம்
		தைரியம் - வீரம்
33	35	1, நாதம் - பூநீறு, கெந்தகம்
		2, விந்து - ரசம்
		3, வெள்ளை - வெள்ளை பாஷாணம்
		4, முத்தெண்ணெய் - விளக்கெண்ணெய்
		5, சித்தர் மூலம் - கஞ்சா
	37	படைராஜன் - வெடியுப்பு
		கப்பல் - கருவங்கம்
	40	விந்து - ரசம்
		நாதம் - பூநீறு, கெந்தகம்
34	41	வஞ்சனம் - ரசம்
		நாற்றம் - கெந்தகம்
	42	நட்சத்திரம் - பூரம்
		இரவு - கற்பூரம்
		திரவு - வீரம்
		படிகம் - படிக்காரம்
		கெடி - வெடியுப்பு
		கிரகச்சாரம் - நவச்சாரம்
		துடி- கெந்தகம்
		மீனாட்சி மைந்தன் - வீரம்
		கப்பல் - கருவங்கம்.
35	47	ஆகாயம் - கெந்தகம் (பூநீறு)
		நட்சத்திரம் - வீரம்

பக்கம்	பாடல்	
35	47	சூதம்- ரசம் நாதம் - கெந்தகம்
	53	சூரன் - வீரம்
36	58	கஞ்சூதம் - நாகம், பாதரசம் இரண்டையும் குறிக்கும்.
37	66	பாதகத்தை தினம் பொடித்து - தாளகத்தை பொடித்து அடுத்தவதி சுகதுக்க பச்சிலை சாறு- வெற்றிலைச் சாறு.
39	74	படிகம் - படிக்காரம் நட்சத்திரம் - பூரம் ஆவெண்ணெய் - பசுவின் வெண்ணெய்
	75	தைரியம் - வீரம்
	76	ரசிதம் - வெள்ளி
	79	புரமெரித்தான் பால் - எருக்கன் பால்

தாமரை
நூலகம்